KALKI 12.1.97 ரூ.3.00

# கல்கி

வாரம் ஒரு சவரன்!
– பரிசுப்போட்டி அறிவிப்பு!

பொங்கல் ஸ்பெஷல்



தேரோட்டம்
– வி.கே. ராமசாமி எழுதும் அனுபவத் தொடர்

சுஜாதா எழுதும் மீண்டும் மத்யமர் கதைகள்



காதல் சக்ஸஸ்!

# மேயர் மகன்!

# உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு எதை அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| ஆரோக்கியம் ✓ | நவீனம் ✓ |
| சுவையான உணவு ✓ | சேமிப்பு ✓ |
| நீடித்த உழைப்பு ✓ | வீட்டுபயோகம் ✓ |
| வசதி ✓ | சுகம் ✓ |
| நினைவிலிருக்கும்படியான ஒன்றை ✓ | |



## மேலுள்ளவைகளுடன் அவர்களுக்கு மற்றொன்றையும் கொடுங்கள்

# Premier

*Non-Stick Kitchen Collection*

தவ்வா, ஃப்ரை பேன், ஸாஸ் பேன் கடாய், அப்பம் பேன், அலுமினியம் மூடி, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மூடி. அனைத்தும் ஒரு கவர்ச்சிகரமான கட்டுக்கோப்பான, அன்பளிப்பிற்குத் தயாரான பெட்டியில்.

**Premier Marketing**, "Ankur Manor", 182, Poonamallee High Road, Kilpauk, Chennai 600 010., India. Phone: 8231200, 8231300, 8231400, Fax: 91-44-8231500

# மூழ்காத ஷிப்!

**தமது உயிர் நண்பர்களைப் பற்றிச் சில பிரபலங்கள் இப்பகுதியில் பேசுகிறார்கள்...**
**இந்த வாரம்: பெப்ஸி உமா**

‘‘பட்டாக கணக்கா பட படன்னு பேசுவா. பயங்கர நகைச் சுவை உணர்வு. அவளைச் சுத்தி இருக்கிறவங்க நாளெல்லாம் சிரிச்சுக்கிட்டே இருப்பாங்க. குண்டு தைரியம் ஜாஸ்தி! நாங்க தெருவிலே போகும்போது எவனாவது கிண்டல் செய்தா, நான் பயப்பட ஆரம்பிச்சுடு வேன். என் தோழி நேரெதிர்! சடார்னு நின்னு கேலி செய்த ஆளைப் பார்த்து நாலு வார்த்தை கேட்காமல் நகர மாட்டாள்.

‘‘பாரதி - எனக்குப் பிடித்த கவிஞரின் பெயர் மட்டுமல்ல; என்னுடைய இந்த மிக நெருங்கிய தோழியின் பெயர்கூட!

‘‘மைலாப்பூரில் உள்ள லேடி சிவசாமி அய்யர் பெண்கள் பள்ளியில் ப்ளஸ் டூ வகுப்புகளில் ஒன்றாகப் படித்தோம். அப்போது அறிமுகமா னோமே தவிர நெருங்கி விட்டதாகச் சொல்ல முடியாது. நான் காமர்ஸ். அவள் எக ணாமிக்ஸ். அதனால் வெவ்வேறு செக்ஷன் என்றாலும் நானும் அவளும் பேசிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் நாளடைவில் அதிகமாயின. நான் ஸ்கூலில் மாணவ லீடர். பாரதி ஒரு சிறந்த வாலிபால் வீராங்கனை.

‘‘எனக்கு பெயின் டிங்கெல்லாம் ஓரளவு நல்லாவே வரும். எங்க அம்மாகிட்டேயிருந்து எனக் குக் கிடைத்த சொத்து இந்தக் கலைன்னு நான் நினைப்பதுண்டு. ஆனால் தன் குடும்பத்தில் ஓவியர்கள்னு யாருமே



• உமா

புதிய பகுதி:



• பாரதி

இல்லாவிட்டாலும், பாரதி அற்புதமாக பெயிண்டிங் செய்வதைப் பார்த்து நான் பிரமித்ததுண்டு.

"கல்லூரியிலே நான் பொதுச்செயலாளர். கல்சுரல்ஸ் நடக்கும்போதெல்லாம் எனக்கும் அவளுக்கும் அந்தக் கலைவிழாக்களில் முக்கியப் பங்கிருக்கும்.

''ஒருமுறை சென்னை மருத்துவக் கல்லூரியில், பல்வேறு கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற கலைவிழாவில் ஒரு நிகழ்ச்சியை செய்து காட்டினோம்.

''தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகும் 'எதிரொலி' நிகழ்ச்சியைக் கிண்டலடித்து, பாரதி ஸ்கிரிப்ட் தயார் செய்திருந்தாள். நான் கேள்விகளைப் படிப்பதுபோலவும், அவள் நல்லதம்பியை அச்சாக இமிடேட் செய்து பதிலளிப்பது போலவும் அமைந்த இந்த நிகழ்ச்சிக்கு பலத்த வரவேற்பு!

"எங்கள் கல்லூரியிலும் சிலர் வகுப்பை கட் செய்துவிட்டு சினிமாவுக்குப் போனதுண்டு. ஆனால் நாங்கள் சினிமா, பீச் என்றெல்லாம் சுற்றியதில்லை. கல்லூரியில் பேராசிரியர்களைக் கிண்டலடித்ததில்லை. கல்லூரிக்கும், படிப்புக்கும் சின்சியராக இருந்து கொண்டே, கல்லூரி வாழ்க்கையின் இனிமைகளையும் முழுமையாக அனுபவிக்கக் கற்றுக் கொண்டோம்.

"நானும் பாரதியும் அரசியல் உட்பட பல பொது விஷயங்களைப் பற்றி ஆழமாக விவாதிப்போம். "உமா சில விஷயங்களை நீ ரொம்ப வெளிப்படையாகப் பேசுவது தப்பு. திமிர் பிடிச்சவன்னு யாராவது நினைக்கக்கூடும்''னு அவ சொல்வாள்.

''கருத்து வேறுபாடுகள் உண்டுன்னாலும், நாங்க சண்டை போட்டுக்கிட்டதில்லே. ஆனால் காரசாரமாகப் பேசும் அளவுக்கு ஒருமுறை சந்தர்ப்ப சூழல் அமைந்தது.

"பாரதிக்கு நிறைய நவீன சிந்தனைகள் உண்டுன்னாலும் அவங்க குடும்பம் ரொம்ப ஆர்தடாக்ஸானது. கல்லூரியில் கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கும்போதே, நல்ல வரன் வந்ததுன்னு அவளுக்குத் திருமணம் நிச்சயம் செய்துட்டாங்க. எனக்கு பயங்கர ஷாக். 'இப்போதே எதுக்கு கல்யாணம்? வாழ்க்கையின் பல கோணங்களையும், உண்மைகளையும் தெரிஞ்சுக்கிட்டு பிறகு திருமணம் செய்து கொள்வதுதானே நல்லது'ன்னு விவாதிச்சேன். பெண்ணுரிமை இயக்கம் மாதிரி மிகத் தீவிர சிந்தனைகள் கிடையாதுன்னாலும் தெளிவான பல கருத்துக்களை அவ என்கிட்டே வெளிப் படுத்தியதுண்டு. அதையெல்லாம் அவளுக்கு நினைவு படுத்தினேன்.

''எங்க அப்பா அம்மா ஏற்பாடு செய்திருக்கும் இந்தத் திருமணத்தை மறுத்து, அவங்களை நோகடிக்க நான் விரும்பலே''ன்னாள். தன் உணர்வுகளையெல்லாம் அடக்கிக்கிட்டு ஆளே மாறிப் போயிட்டா. நகைச்சுவை உணர்ச்சியை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, ரொம்ப சீரியஸாயிட்டா. ("மாமனார் மாமியார் கிட்டே ஜோக் அடிச்சா நல்லாயிருக்குமாப்பா?")

''அவள் கல்யாணத்தின்போது எங்களுக்கிடையே இன்னொரு பனிப்போர். கல்யாண நாளன்று விடியற்காலை நாலு மணிக்கே நான் வருவேன்னு அவ எதிர் பார்க்க, முன்னாள் இரவு உடல் சுகவீனத்துக்காக எடுத்துக் கொண்ட மருந்தின் வினைவாக நான் சற்று அதிகம் தூங்கிவிட்டு, ஆறரை மணிக்கு சத்திரத்துக்குள் நுழைய, ஓவென்று அழுதாள்! ஒரு வழியாக சமாதானம் ஆனோம்.

"திருமணமான கையோடு, கணவரோடு வாரணாசிக்குச் சென்றுவிட்டாள். தொடர்ந்து தொடர்பு கொள்கிறோம். என்றாலும் டெலிபோன் லைன் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. தபால் போய்ச் சேர மிகத் தாமதமாகிறது. இப்படிப்பட்ட செய்தித் தொடர்புகளைவிட புரிந்துகொண்ட உணர்வின் காரணமாகத்தான் எங்கள் நட்பு தொடர்கிறது."

—அருண்சரண்யா

படம் : யோகா

# என்ன ஆச்சு அறுபது லட்சம்?



• ஸ்பாஸ்டிக் சொஸைடி குழந்தைகளுடன் போஸ் கொடுக்கும் அழகிகள்

அழகிப் போட்டி அமர்க்களமெல்லாம் முடிந்து ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் இன்னும் அமிதாப்பச்சன் மீது, பெங்களூரின் ஸ்பாஸ்டிக் சொசைடியினருக்கு வருத்தம்தான். காரணம் – சொன்னபடி, அழகிப் போட்டி நடத்திக் கிடைத்த வருமானத்தில் ஒரு பகுதியை அமிதாப், ஸ்பாஸ்டிக் சொசைடிக்கு இதுவரை தரவில்லை!

'அழகிப் போட்டி எதிர்ப்பாளர்களது வாயை அடைக்க, ஸ்பாஸ்டிக் சொசைடிக்கு உதவி என்று அமிதாப் ஸ்டன்ட் அடித்தார்' என்று ஒருதரப்பினர் சொல்ல, அமிதாப் தரப்பிலிருந்து மௌனம்தான் இதுவரை பதில்! 'எதை மனத்தில் வைத்துக் கொண்டு சொன்னாரோ அது முக்கியமில்லை. ஸ்பாஸ்டிக் சொசைடிக்கு உதவுவதாய் பகிரங்கமாய் அமிதாப் அறிவிப்பு செய்து விட்டார். எனவே இனி அதனை தட்டிக் கழிக்க மாட்டார்' என்று இன்னொரு தரப்பினரும் கூறுகிறார்கள். இதற்கும் அமிதாப் தரப்பிலிருந்து பதில், மௌனம்தான்!



ஒரு மாதமாக, அமிதாப் நிறுவனத்திடமிருந்து, வாக்களித்த படி நிதி உதவி வராதது பற்றி பெங்களூர் ஸ்பாஸ்டிக் சொசைடியினர் வாய் மூடி இருந்தனர். ஆனால் இப்போது, நன்கொடை பற்றிய சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

"எங்கள் அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி அவர்கள் நிதி திரட்டினார்கள்; எதிர்ப்பினை சமாளிக்கக் கேடயமாய்ப் பயன்படுத்திக் கொண்டார்கள். இப்போது, நாங்கள் நினைவூட்டிக் கடிதங்கள் எழுதினால், பொறுப்பான பதில் இல்லை. 'ஆடிட் நடந்து கொண்டிருக்கிறது' என்று வெறுமனே பதில் சொன்னால் எப்படி? ஆடிட் எப்போது முடியும்? எப்போது நன்கொடை நிதி வழங்கப் போகிறார்கள் என்பதை தோராயமாகவாவது கூற வேண்டாமா?" என்று பொறிந்து தள்ளுகிறார்கள் ஸ்பாஸ்டிக் சொசைடியினர்.

எரிகிற புண்ணில் காய்ச்சிய எண்ணெயை ஊற்றினாற்போல, அதற்குள், வருமான வரித் துறையினர், "அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து எவ்வளவு நன்கொடை பெறப்பட்டது?" என்று கேட்டு, ஸ்பாஸ்டிக் சொசைடிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களாம்!

தவிர, ஸ்பாஸ்டிக் சொசைடியின் தலைமை தாளாளர் பொறுப்பில் உள்ள கர்நாடக கவர்னருக்கு, அழகிப் போட்டிக்கு அழைப்பிதழ் தரவில்லை என்பதால் கோபமாம்! அமிதாப் நன்கொடை வழங்கினால் கூட அதற்கு ஏற்பாடு செய்யப்படும் விழாவில் கவர்னர் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கவர்னர் மாளிகை வட்டாரத்தில் சொல்லுகிறார்கள்.

இதற்கிடையே, "ஏ.பி.சி.எல். ஸ்பாஸ்டிக் சொசைடிக்கு, அறுபது லட்சத்துக்கு கூடுதலாய் தரப்போகிறது. எவ்வளவு தருவது என்று கணக்கிட்டுக் கொண்டிருப்பதால்தான் இத்தனை தாமதம்" என்று கிண்டலடித்துக் கொண்டிருக்கிறார்கள் பெங்களூர்க்காரர்கள்.

— கௌதம்ராம்



• வெளியே வருகிறார்

# "இப்படிப் பண்ணணித்தான் அம்மாவைக் கவுத்தீங்க!"

**கா**லை பத்தரைக்கே ஜாமீனில் விடுதலை செய்ய உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுவிட்டபடியால் தங்கள் தலைவி எப்படியும் மாலை மணி ஆறுக்குள் வீட்டுக்குத் திரும்பி விடுவார் என்று மூன்றரை மணியிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக போயஸ் தோட்ட வீட்டு முன் குழுமத் துவங்கினார்கள் ரத்தத்தின் ரத்தங்கள். நேரம் செல்லச் செல்ல, பலவித மான ஊகங்கள், விமர் சனங்கள்.

கையில் செல்லுலருடன் நின்று கொண்டிருந்த கழகத் தொண்டர் அருகில் நின்று கொண்டோம். மிகவும் வீரிய மாக பேசிக் கொண்டிருந்தார்.

"நம்ம பசங்களை எங்க காணோம்?"

"என்னடா பேஜாரு பண் ணறீங்க?"

"இன்னும் பத்து நிமிஷத்துல வரணும்."

அவர் அருகில் நின்று கொண் டிருந்த பெண்மணி ஒருவர், "யண்ணா வெளியே வந்துட்டாங் களா.... கேளுண்ணா..." என்று கெ(ா)ஞ்சிக் கொண்டிருந்தார். (இந்த இடத்தில் ஒரு இடைச்செருகல். அதிமுகவைப் பொறுத்தவரை, அப்போது கோர்ட்டில் ஸ்வாமியை எதிர்த்து, கலாட்டா செய்தபோதும் சரி, உண்ணா விரதம் இருக்க வேண்டுமானா லும் சரி, ஊர்வலமானாலும் போராட்டமானாலும் சரி, குறிப்பிட்ட நூறு பெண்கள் கண்டிப்பாக ஆஜராகி ஏரியா வையே கலக்குகிறார்கள். மது சூதனனின் தயாரிப்பாம்.)

**ச**ரியாக மணி : 5.20. செல் சிணுங்கவே... ஏரிய



# போயஸ் தோட்டத்தில் நமது நிருபர் :

லைத் தூக்கி விட்டுப் பேசினார் அந்த ர.ர!

"கோர்ட் ஆர்டர் இப்போ தான் உள்ளே போவுதா... காரை உள்ளே விடலையா... சரி.. சரி, அம்மா வெளியே வந்ததும் சொல்லு."

இதற்குள் கூட்டத்தினரிடையே செய்தி பரவவே, "அம்மா நேராக வீட்டுக்கு வர மாட்டாங்கப்பா... தலைவர் (எம்.ஜி.ஆர்.) சமாதிக்குப் போயிட்டுத்தான் வருவாங்கப்பா" என்று சிலர் சொல்லிக் கொண்டிருந்தனர்.

காமிராக்காரர்களைப் பார்த்த தொண்டர் ஒருவர் தமது தோழரிடம் "சன் டி.வி.காரனுக்கு ஒருநாள் மங்களம் பாடிடணும்..." என்று எரிச்சலாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மறுபடியும் செல் குரல் எழுப்பி, "அம்மா வெளியே வந்துட்டாங்க..." என்று தகவல் சொல்லிற்று. அப்போது மணி 5.30.

"புரட்சித் தலைவி வாழ்க! போடாதே போடாதே பொய் வழக்குப் போடாதே!" என்று ஜுர வேகத்தில் தொண்டர்கள் கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

சரியாக மணி 5.55க்கு ஜெவை ஏற்றிக் கொண்டு வந்த கார் போயஸ் தோட்டத்து கேட்டை நெருங்கியது. ஒருவரை ஒருவர் முட்டித் தள்ளிக் கொண்டு முன்னேறி அம்மாவைப் பார்க்க முயற்சி செய்ய, ஒரே குழப்பம். இந்த குழப்பத்திலும்,



• கோர்ட்டுக்குப் போகிறார்

மகளிர் அணியினர் திருஷ்டி சுற்றிப் போட்டு, பூசணிக்காய் உடைத்து விட்டார்கள்; இவ்ladyகள்! பலர் காலில் விழத் துவங்குமுன் சுதாரித்துக் கொண்ட ஜெ. வீட்டுக்குள் உடனே விரைந்து விட்டார்.

தொடர்ந்து உள்ளே நுழைந்த கூட்டம் ஒன்றிரண்டு பூச்சட்டிகளை உடைத்து விட்டது.

"அவ்வளவுதான்பா. அம்மா டயர்டா இருப்பாங்க. போகலாம் வாங்க..." என்று ஒருவர் கூப்பிடவே,

"அட இருப்பா... அம்மா ஏதாவது பேசுவாங்க" என்று அவரை அழுத்தி உட்கார வைத்தார்.

இதற்குள் கோஷங்கள் உச்சஸ்தாயிக்குப் போகவே, திடீரென்று பால்கனியில் தோன்றி இரட்டை விரலைக் காட்டி கும்பிட்டு தரிசனம் தந்தார் ஜெ.

தொண்டர்களின் உற்சாகத்திற்குக் கேட்க வேண்டுமா?

தரிசனம் முடிந்தவுடன் வீட்டுக்குள்ளிருந்து வெளியே



• காத்திருந்த கூட்டம்

வந்த திருநாவுக்கரசு, சேடப்பட்டி போன்றோர் "கிளம்புங்க. கிளம்புங்க... அம்மா திங்கட் கிழமை கட்சி ஆபீஸுக்கு வருவாங்க. அங்க பார்த்துக்கலாம்!" என்று விரட்டிக் கொண் டிருந்தனர். நாம், கதவின் அருகில் இருந்த காளி மாதாவின் படத்திற்குப் பக்கத்தில் ஒதுங்கிக் கொண்டோம்.

"தோ... பார் தலைவா. புதுக்கோட்டை தேர்தல்ல நாம போட்டி போடறோம். தெரியுதா?" என்று சேடப்பட்டியிடம் சொல் லிக் கொண்டிருந்தார் ஒரு தொண்டர். அதைக் கேட்ட சேடப்பட்டி வெளிப்படுத்திய உணர்வு, சோகமா... கிண்டலா என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**'சன்'னுக்கு என்ன ஆச்சு?**

**ஜெ. கைதானபோது அவசர அவசரமாக அதை ஒளிபரப்பிய சன் டி.வி., ஜெ. ஜாமீனில் வெளிவந்தபோது கப்சிப்பென்று மௌனமாகிவிட்டது. ராஜ் டிவி உடனடியாக ஒளிபரப்பியது. வேறுவழியில்லாததாலோ என்னவோ, இரவு செய்திகளின்போதுதான் சன் டி.வி. சொன்னது. நன்றாகவே செய்திகளைத் தருகிறது சன் டி.வி. என்று நினைத் துக் கொண்டிருந்த பலருக்கும் இதுவொரு ஷாக்!**

கதவை நெட்டித் தள்ளிக் கொண்டு ஒரு கும்பல் உள்ளே வரவேற்பறைக்குள் நுழைய முயற்சி செய்து கொண்டே இருந்தது. ஆனால், காப்பாளர்கள், பழைய மந்திரிகள், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் என்று பார்த்துப் பார்த்து 'உள்ளே' அனுப்பிக் கொண்டிருந்ததால், தொண்டர்களால் உள்ளே போக முடிய வில்லை. அப்படியும் யாராவது பிரமுகர் உள்ளே போகும்போது ஒன்றிரண்டு தொண் டர்கள் உள்ளே நுழைந்து விட்டார்கள். இந்த அமர்க்களத்தில் தொண்டர் ஒருவரை பாதுகாப்பாளர்கள் தள்ளி விடவே, அவர் கத் தத் துவங்கினார்.

"எங்களை ஏன்டா தள்ளி விடறீங்க... பழையபடி ஆரம்பிச்சுட்டீங்களா... இப்படிப் பண்ணித்தானே அம்மாவைக் கவுத்தீங்க. அம்மாவுக்காக முப்பது நாள் ஜெயில்ல இருந் துட்டு வந்திருக்கேன்டா..." என்று ஆத்திரத் துடன் சொல்லவே, லோக்கல் பிரமுகர்கள் அவரை ஒதுக்கிக் கொண்டு போனார்கள். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தைச் சேர்ந்த அவர் பெயர் பையூர் ராஜேந் திரன். ஜெயலலிதா பேரவைச் செயலாளராம்.

கதவருகே இரண்டு மூன்று பெண்கள் எவ்வளவு விரட்டியும் போகாமல் இருந்தார் கள். "என்னம்மா... எவ்வளவுதான் சொல்றது? போம்மா.. போ" என்று அவர்களை விரட்டி னார் ஒருவர்.

"ஐய... என்ன எங்களை விரட்டறீங்க... நாங்க இங்கேயே இருக்கறவங்க" என்று அந்தப் பெண்மணிகள் பதிலடி கொடுக்கவே, கொஞ்சம் அதிர்ச்சியடைந்து பின்வாங்கினார் அவர்.

அம்மாவைப் பார்த்துவிட்டு வெளியே வந்த நாவலரிடம், "அம்மா என்ன சொல்றாங்க?" என்று விசாரித்து விட்டு 'கல்கிக்கு பேட்டி கொடுக்க வேண்டும்' என்று கேட்டோம்.

"எல்லாம் அம்மாவைக் கேட்டுக்கங்க... நான் யாருக்கும் பேட்டி தர மாட்டேன். பேட்டி காண வரவங்க குழப்பமா இருப்பாங்க போலிருக்கு. நான் குழம்பியிருக்கறதா எழுதறாங்க...." என்றபடி வெளிப்புற கேட் வரை சொல்லிக் கொண்டு வந்தார். அப்போது பார்த்துத் தொண்டர் ஒருவர் "ஐயா... அம்மா கூப்பிடறாங்க.." என்று சொல்லவே மறுபடியும் உள்ளே விரைந்தார் நாவலர்.

"முப்பது நாளா ஆண்டவர்கிட்டே தோத்திரம் பண்ணிட்டிருக்கேன். எங்களை விட்டா என்ன? போயி அம்மாவைப் பார்த்து, 'நல்லா இரும்மா மகராசி'ன்னு சொல்லிட்டு வரப்போறோம்; அவ்வளவுதான்!" என்று ஒரு பெண் ஆவேசமாகத் திருநாவுக்கரசிடம் சொல்லிக் கொண்டு வந்தார்.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. திடீரென்று கதவு திறந்து, வெளியே வந்தார் ஜெ. போர்ட்டிகோவில் குழுமி இருந்த தொண்டர்களைப் பார்த்து, கைகூப்பினார். சுமார் ஐம்பதடி சுற்று வட்டாரத்தில் நின்று கொண்டிருந்த தொண்டர்கள் சுதாரித்துக் கதவருகே வருவதற்குள் மின்னலென உள்ளே போய் விட்டவர், பூப்போட்ட மஞ்சள் நிறச் சோளி. அணிந்திருந்தார். கண்களில் சோர்வு.


"ஐயய்யோ... மிஸ் பண்ணிட்டோமோ..." என்று பலர் விசனப்பட்டுக் கொண்டனர்.

அதற்கப்புறம் பாதுகாவலர்கள் வேக, வேகமாக எல்லோரையும் விரட்டத் துவங்கி னர். அதற்கு மேலும் நாம் அங்கே நின்று கொண்டிருந்தால், அடையாளம் கண்டுகொள் ளப்பட்டு பிரச்னை வரலாம் என்று வெளியே வந்து கேட் அருகில் நின்று கொண்டோம்.

முன்னாள் அமைச்சர் கரூர் சின்னசாமி அங்கு நின்று கொண்டிருந்தார். "உங்க மேல

தொடர்ச்சி : 77ம் பக்கம்.

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேம நல ட்ரஸ்ட் (பதிவு பெற்றது)
(ஸ்ரீ சங்கர மடம்: 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம், 631502)
நிர்வாக அலுவலகம்: 10, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம்,
சென்னை 600 085. (போன் நம்பர் : 411936).



# வேண்டுகோள்

நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் இன்றியமையாத தெய்வ அருளை நாடி மன அமைதி பெற விழைவதால், கோவில்கள் சரிவர பராமரிக்கப்பட்டு பூஜைகள் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்வதே தலைசிறந்த சமூகத் தொண்டு என்று காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கூறுவார்கள்.

இந்த உன்னத நோக்குடன், பல்வேறு காரணங்களால் தற்சமயம் தமிழ் நாட்டில் நலிவுற்றிருக்கும் கிராமியக் கோவில்களில் வறுமை நிலையிலும் பூஜை செய்து கொண்டிருக்கும் தகுதிவாய்ந்த அர்ச்சகர்களை, ஆண்டு தோறும் வாய் மொழித் தேர்வுகளை நடத்தி, தேர்ந்து எடுத்து அவர்களுக்கு உதவி புரிவதற்காகவே, ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் மேற்படி ட்ரஸ்டை 1986ம் ஆண்டு நிறுவினார். இதற்கான மூலதனத்தை பக்தர்களும், ஈடுபாடுடைய ஸ்தாபனங்களும் மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளால் மட்டுமே சேகரிக்க வேண்டும் என்பது பொறுப்புக் குழுவிற்கு மஹாஸ்வாமிகள் இட்ட கட்டளை. மாதம் 4000 ரூபாயும் அதற்கு மேலும் வருமானம் பெறும் ஒவ்வொரு அன்பரும் தமது ஒருமாத வருமானத்தை தம் வாழ்நாளில் ஒருமுறையாவது நன்கொடையாக அளிக்க முன் வர வேண்டும் என்பதும் பேரருளாளரின் ஆக்ஞை. மற்றவர்கள் தங்களால் இயன்ற அளவு கொடுக்கலாம்.

1987ம் ஆண்டில் 5 அர்ச்சகர்களுக்கு தலா மாதம் 100 ரூபாய் வீதம் உதவத் தொடங்கிய இந்த ட்ரஸ்ட், தற்சமயம் ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாசியுடன் சேர்ந்துள்ள மூல நிதியான ரூ.69 லட்சத்திலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தைக் கொண்டு மொத்தம் 240 அர்ச்சகர்களுக்கு (45 பட்டாச்சாரியர்கள், 103 சிவாச்சாரியர்கள், 92 பரம்பரை பூஜாரிகள்) நபர் ஒருவருக்கு மாதம் ரூ.250/- வீதம் உதவி வழங்கி வருகிறது. உதவித் தொகை பெறுவதற்கான தகுதியுடையவர்கள் ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மாதாந்திர உதவித் தொகையையும் உயர்த்த வேண்டியிருக்கிறது. எனவே மூலதனத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் நன்கொடைகளை வரவேற்று, அவ்வப்போது வேண்டுகோள் விடுத்து வருகிறோம்.

நன்கொடைகளை **"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"** என்ற பெயரில் கிராஸ் செய்யப்பட்ட செக்/டிராஃப்ட் அல்லது மணியார்டர் மூலமாக மேற்படி நிர்வாக அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். காஞ்சிபுரம் ஸ்ரீமடத்திலும் இதற்கான நன்கொடைகள் பெற்றுக் கொள்ளப்படும். நன்கொடையாளர்களுக்கு வருமானவரி சட்டத்தின் 80ஜி பிரிவின் கீழ் 1998 மார்ச் முடிய வரிச்சலுகை உண்டு. வெளிநாடுகளிலிருந்தும் அன்பர்கள் நன்கொடை அனுப்புவதற்கு வசதியாக இந்த அறக்கட்டளை **FCRA**வின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

N. Krishnaswamy Reddy

ஜனவரி 1997

ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி (Retd.)
சேர்மன் பொறுப்புக்குழு

<u>பொறுப்பாளர்கள்:</u>

1. திரு அ. ஸ்ரீநிவாச அய்யங்கார், மிராசுதார், மன்னார்குடி.
2. திரு. கே.எஸ். லோகவிநாயகம், முன்னாள் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு.
3. திரு. கே.வேதமூர்த்தி, எல்.ஐ.சி. ஆஃப் இந்தியா, சென்னை.
4. திரு. டி.ஏ.ராமலிங்க பட், கௌரவ செயலாளர் மற்றும் பொக்கிஷதாரர்.



அம்மா, தங்கை, பாட்டியுடன்.....

மேயராக மு. க. ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்பு நமக்கு இன்னொரு முகத்தின் தரிசனமும் அவ்வப்போது செய்தித் தாள்களில் வெளியாகும் புகைப்படங்களில் கிடைக்கிறது.

உதயநிதி. ஸ்டாலினின் மகன்.

“உங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டுமே, வரலாமா?” என்று தொலைபேசியில் கேட்டபோது, கொஞ்சம் கூட பிகு பண்ணாமல் ‘வாங்களேன்’ என்றார்.

முதலவரின் கோபாலபுரம் வீட்டில் செக்யூரிட்டிகள் உட்பட எல்லோருக் குமே உதயா ஒரு செல்லப்பிள்ளை.

லயோலாவில் பி.காம். படித்துக் கொண்டிருக்கிறார்.

“எனக்கு ஸீட் கிடைத்ததே பெரிய கதை. ப்ளஸ்டூவில் 89 சதவீதம். நிச்சயம் லயோலாவில் இடம்கிடைத்து விடும்

என்ற நம்பிக்கையில் வேறு எங்கும் அப்ளை பண்ணாமல் விட்டு விட்டேன். லயோலா வெளியிட்ட முதல் மூன்று பட்டியலிலும் என் பெயர் இல்லை. கலங்கிப் போனேன். கடைசியில் நான்காவது பட்டியலில் போட்டார்கள். அட்மிஷனின் போது கட்டாயமாகப் பெற்றோர் வர வேண்டும் என்பது கல்லூரி விதி. அப்பா வந்தார். ஏன் என் பெயரை கடைசிப் பட்டியலில் வெளியிட்டார்கள் என்று சொன்னார்கள். மாறன் மாமாவின் பிள்ளைகள் அங்கு படித்த போது காலேஜ் யூனியன் எலெக்ஷனில் நின்று ஒருதரம் ஸ்டிரைக் கூட செய்தார்களாம். எங்கள் குடும்பத்து ஆள் என்னாலே ஏதாவது விவகாரம் பண்ணு வாங்களோ என்று தயங்கியதால்தான் லேட்டாக அனுமதித்தார்களாம். கூடவே, 'நான் காலேஜ் மாணவர் தேர்தலில் போட்டியிட மாட்டேன்' என்ற உறுதிமொழியையும் என்னிடம் வாங்கிக் கொண்டார்கள். உறுதிமொழி கொடுத்தேனே தவிர, பிறகு நண்பர்களின் வற்புறுத்தலால் போட்டியிட வேண்டிய நிலை. அப்பாவிடம் கேட்டேன். நிற்கக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். பிறகு நண்பர்களே நேரில் வந்து அப்பாவிடம் கேட்டுக் கொண்டார்கள். மனம் மாறி 'உன் இஷ்டம்' என்று அனுமதித்தார். ஆனால் நான் 'இல்லை. நிற்பதாக இல்லை' என்று கடைசி நிமிஷத்தில் விலகி விட்டேன்" - ஒரே மூச்சில் சொல்லி முடித்தார் உதயநிதி.

"மேயரின் பிள்ளையாக இருப்பதிலுள்ள ப்ளஸ், மைனஸ்?"

"பெருமை - எளிதில் அடையாளம் கண்டுகொள்கிறார்கள், மற்றவர்களுக்கு சில நன்மைகளைச் செய்ய முடிகிறது - இவை ப்ளஸ்.

தேவையில்லாமல் சில சமயங்களில் மரியாதை கொடுக்கிறார்கள். மற்றவர்களை விட்டு விட்டு என்னை மட்டும் தனியாக வரவேற்கிறார்கள். எனக்கு சங்கடமாக இருக்கிறது. இது மைனஸ்."

"தாத்தா (முதல்வர் கருணாநிதி)வைப் பற்றி?"

"எனக்கு ரொம்பப் பயம். அவரது உழைப்பும், சுறுசுறுப்பும் வியப்பைத் தரும். அவற்றில் ஒரு சிறு பங்கு கூட எனக்கு வர இன்னும் எத்தனை காலமாகுமோ தெரியாது. அடிக்கடி அவரைப் பார்க்க



# மேயர் மகன்

முடிவதில்லை. அவர் படியிறங்கி வருவதும், நாம் அங்கே போவதும் எப்போதாவது சேர்ந்து வருமானால் 'என்ன, நல்லா இருக்கியா' என்பார். 'இருக்கேன், தாத்தா' - அதோடு உரையாடல் முடிந்து விடும். நான் லயோலாவில் படிப்பது மட்டும் அவருக்குத் தெரியும். ஆனால் பி.காம். படிக்கிறேன் என்பது தெரியுமா என்றால் சந்தேகம்தான்."

சென்னையை விட்டு வெளியூர் எங்கு போனாலும் - அது ஒருநாள் பயணமாக இருந்தாலும் சரி - ஹாலுக்கு வந்து குடும்பத்தினரிடம் விடைபெற்றுக் கொண்டுதான் போவாராம் முதல்வர்.

"அவரைப் பார்க்கும் அந்த சான்ஸை நாங்கள் யாரும் மிஸ் பண்ணுவதில்லை. கரெக்டாக ஆஜராகி விடுவோம்."

**பே**சிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த திருமதி தயாளு அம்மாளிடம், "பேரனிடம் உங்களுக்குப் பிடித்த, பிடிக்காத குணங்கள் என்ன?" என்றோம்.

"உதயா ரொம்பப் பொறுமைசாலி. அது பிடிக்கும். என்ன... ப்ரண்ட்ஸோடு சேர்ந்து கொஞ்சம் ஊர் சுற்றுவான். அவ்வளவு தான்."

உதயா பற்றி பாட்டி சொன்ன இதே கருத்தை ஆமோதித்தார்கள் அம்மா துர்கா வதி ஸ்டாலினும், தங்கை செந்தாமரையும்.

உதயாவின் ஹாபி என்ன?

"தங்கச்சி, அம்மா எல்லோரையும் கிண்டலடிப்பேன். பல சமயங்களில் என் சித்தப்பா பெண் பூங்குழலி மாட்டிக் கொள்வான்."

ஆந்திராவுக்கு வெள்ள நிவாரண நிதி திரட்டிக் கொடுக்க வேண்டும் என்று தன் கல்லூரி முதல்வரிடம் வற்புறுத்தி அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார் உதயா. "போகிற போக்கைப் பார்த்தால் அதை தமிழ்நாடு வெள்ள நிவாரண நிதியாக மாற்ற வேண்டும் போல இருக்கிறது."

"எஸ்.பி. பாலசுப்பிரமணியம், ஏ.ஆர். ரகுமான் இரண்டு பேரின் ரசிகன் நான்" என்று சொல்லும் உதயா ரசிக்கும் இன்னொரு விஷயம் : "அம்மாவின் பொறுமை. காலையில் போனால் அப்பா சில சமயம் ராத்திரி இரண்டு மணிக்குக் கூட வீடு திரும்புவார். அதுவரை காத்திருந்து அப்பாவுக்கு வேண்டியதைச் செய்யும் அம்மா மகா பொறுமைசாலி."

நடிகர்களில் யாரைப் பிடிக்கும்?

"ரஜினி, கமல் இரண்டு பேரையும்." (பிழைக்கத் தெரிந்தவர்!)

"பி.காம்., முடித்ததும் அடுத்த வருடம் அமெரிக்கா போய் எம்.பி.ஏ., படிக்கப் போகிறேன். விரைவில் டோஃபல், மற்றும் சில தேர்வுகள் எழுத இருக்கிறேன். மிகப் பெரிய, வெற்றிகரமான தொழிலதிபராக வரவேண்டும் என்பதே என் ஆசை. கனவு எல்லாம்."

அரசியலில் ஈடுபடும் ஆர்வம் உதயநிதிக்கு அறவே இல்லை.

"வேண்டாங்க. இவர் (சி.எம்) படற கஷ்டம், அலைச்சல் போதும். இவனுக்கு அரசியலே வேணாம். நல்லா படிச்சி ஏதாவது தொழில்ல முன்னுக்கு வரட்டும்."

- சொன்னவர், பாட்டி தயாளு அம்மாள்.

சந்திப்பு : **ராணிமைந்தன்**
படங்கள் : **யோகா**



## மதர் கண்ட பாதர் தெரு

**ம**துரை தபால் நிலையத்தில் வேலை பார்த்த போது ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் "மதர் கண்ட பாதர் தெரு" என விலாசம் எழுதப்பட்டிருந்தது. மதுரையில் அந்தப் பெயரில் தெரு எதுவும் கிடையாதே என மூளையைக் கசக்கிய பொழுது, தெருவின் பெயர் எழுதப்பட்ட விதத்தில் உள்ள தவறு புரிந்தது. மதார் கான் டபேதார் (MADAR KHAN DAFETHAR) தெரு என்பதை மதர் கண்ட பாதர் (MADAR KANDA FATHAR) தெரு என யாரோ எழுதிவிட்டனர்!

- **சரவணன்**

# நாணயம் என்றும், எதிலும்.

20 ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் நம்பிக்கையை பெற்றவர்கள்.

Quality is Our Strength

**டி எல் வி ஹவுஸிங் & ஃபைனான்ஸ் லிமிடெட்**

• மாயாஸ் பிளாசா, 71 பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 17. போன்: 8280036, 8232721
• அல்சா ஈஜென்ஸி, 165 எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18. போன்: 459473, 458789 • 142, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 7. போன்: 6420506 / 07/ 08
• 54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, சென்னை - 7. போன்: 5325311 / 12 / 13.



# NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

**NOTIFICATION No. 13/96**

**Offers the following Diploma Courses by Correspondence.**

| | |
|---|---|
| BUSINESS MANAGEMENT | (1 Year) |
| FINANCIAL MANAGEMENT | (1 Year) |
| MARKETING MANAGEMENT | (1 Year) |
| HUMAN RESOURCES DEVELOPMENT | (1 Year) |
| ADVERTISING & PUBLIC RELATIONS | (1 Year) |
| TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000 | (1 Year) |
| PORTFOLIO ANALYSIS & INVESTMENT MANAGEMENT | (1 Year) |
| BUSINESS ADMINISTRATION | (6 Months) |
| OFFICE ADMINISTRATION | (6 Months) |
| SALES & MARKETING | (6 Months) |
| INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT. | (6 Months) |
| LABOUR LAWS | (6 Months) |
| QUALITY ASSURANCE & ISO 9000 | (6 Months) |
| PRODUCTION MANAGEMENT | (6 Months) |
| INDUSTRIAL SAFETY | (6 Months) |
| ENVIRONMENTAL MANAGEMENT | (6 Months) |
| QUALITY CONTROL & ISO 9000 | (6 Months) |


No formal qualifications is required. Course Fee Rs. 1200/- (1 Year) & Rs. 600/- (6 Months). Examination centre at all major cities. For registration form and prospectus, kindly send Rs. 3/- postal stamp to **NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT** 23/13, Rameswaram Road, Narayana Apartments, Second Floor, T. Nagar, Madras - 600 017. Phone : 044-4851854 Fax : 044-4933259.

# 1

உங்களுக்கு மந்தா கிழவியைப் பற்றி சரியாகத் தெரிந்திருக்காது. அவள் என்ன வி.ஐ.பி.யா எல்லோருக்கும் தெரிந்திருக்க? சேவல் கொண்டை போல் முகமும் நாரைச் சிறகாய் அடர்ந்த தலைமுடியும் கொண்டிருக்கும் அந்தத் தொண்டு கிழத்தின் சுறுசுறுப்பைப் பார்த்தால் இவளை ஒலிம்பிக் டீமுக்கு மானேஜராகப் போட்டால் என்ன என்று கூடத் தோன்றும்! வற்றாத சுறுசுறுப்போடு இட்லிக் கடை நடத்துபவளுக்கு விடுகதைகளும் புதிரும் தண்ணீர் பட்டபாடு.

கரிநாளும் அதுவுமாக சவ்வாளக் கரும்போடு நாமமலை ஏறக் கிளம்பிவிட்ட தன் பேத்தி பானுவைப் பார்த்து அவள் போட்ட விடுகதை வினோதமானது.

'நூல் நூற்கும் நெசவாளிக்கு
கட்டிக் கொள்ளத் துணியில்லை...
யாருடி அது?'



# ஆசை நெசவு

அடிவாரத்தில் நின்றபடி அண்ணாந்து பார்த்தபோது பானுவுக்கும் மற்றவர்களுக்கும் அத்தனை உயரத்தை எப்படி ஏறப் போகிறோம் என்றுதான் தோன்றியிருக்க வேண்டும். அப்படித்தான் தோன்றவும் செய்யும்.

சீராகப் படிகள் வெட்டி, ஓரஞ்சாரமாக மரங்கள் நட்டு, கீழே நிழல் பிடித்து வைத்து, ஆங்காங்கே சிமிண்டு பெஞ்சுகளையும் போட்டு வைத்திருக்கும் குமரகிரியையும், கலிய பெருமாள் கரட்டையும் ஏறிக் கடக்கும்போதே மூச்சிறைக்கிறது. இதயம் 'சண்டாளா சண்டாளா' என்று சபித்தபடி 'பந்த்' நடத்துகிறது.

இந்த நாம மலையோ ஒரு ஒழுங்கில்லாத மலை. அரக்கர் தலைபோல திண்டு திண்டாய் பாறையும், கோரமான கரடுமுரடும் கொண்ட ஒரு மலை வரிசையின் மைய முதுகுப்பகுதி.

இதன் உச்சியை எட்டுவது சுலபமா என்ன? இந்த உச்சி மேல் ஸ்கூட்டர் ஷெட் அளவில் ஒரு பெருமாள் கோயிலும், அதற்கென ஒரு ஜனக்கூட்டமும் இருப்பதெல்லாம் கேட்க, பார்க்க வேண்டுமானால் ஆச்சரியமாகத் தோன்றலாம்.

ஆனால் இந்த ஜனக் கூட்டத்துக்கு இந்த மலை விஜயம் இருக்கிறதே, அது ஒரு கட்டாய கடமை கூட....

அதிலும் பொங்கலுக்கு மூன்றாம் நாள் கட்டுச்சாதக் கூடையோடு மலையையும் பெருமாளையும் ஒரு கை பார்க்காவிட்டால் அந்த நாள் கழிந்தது போலவே இருப்பதில்லை.

கழுத்திலும் மார்பிலும் வியர்வை பெருகி ஓட, மலை ஏறும் நிலையில் அப்படியே இலேசாகத் திரும்பிப் பார்த்தால் கூடப் போதும்- சிலீர் என்று எதிர்ச்சாரியில் தெரியும் சேர்வராயன் மலையின் வாசக் காற்று ஒரு குபீர் மோதல் நிகழ்த்தும்.

சுற்றிலும் வட்டம் கட்டி ஒரு மலைக் கூட்டமே மறித்து நிற்பதும் நடுமையில் குழிப்பரப்பில் சேலம் நகரமும் தெரியும்.

"தோ.. தோ... அதோ பார், அங்க ஏ.ஆர்.கே. காம்ப்ளக்ஸ்..."

"ஆமா முத உனக்கு சினிமா தியேட்டர் தான் தெரியும். ஈஸ்வரன் கோயில், பட்டக் கோயில்லாம் தெரியாதே..."

"யாருடாவன் சாமியார்ப்பய.... இங்க வந்தும் கோயில் குளம்னுகிட்டு... டேய்... அதோ பார் நம்ம தெரு..."

"எங்கடா? தெரியலியேடா."


"அப்ப நாளைக்கே போய் மகாதேவன் டாக்டரைப் பாரு. பொட்டக் கண்ணா..."

பாதிமலை கடந்திருக்கும். சில இளசுகள் வார்த்தைகளில் மோதிக் கொள்கிறார்கள். ஒரு பருத்த பாறை மேல் நின்றபடி.... கைவசம் ஆளுக்கொரு அரை சல்வாளக் கரும்பு. ஏறி இறங்குவதற்குள் சக்கை துப்பி விடுவார்கள்.

இப்படி கரும்பு சாப்பிடவும் ஊரைப் பார்க்கவும் மட்டுமா வந்திருக்கிறார்கள்? இல்லையில்லை என்பது போல கொலுசு சப்தம்



இந்திரா சௌந்தர்ராஜன்



மன்மோகன் சிங் பார்லிமெண்ட் வளாகத்தில் கார்களை நிறுத்துமிடத்தில் தன் மாருதி 800ஐ நிறுத்தி உள்ளே சென்று சில மணி நேரங்கள் கழித்து வந்தபோது அதைச் சுற்றிலும் இடைவெளியின்றி பல கார்கள் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டு திகைத்தார். ஒரு அதிகாரி ஓடி வந்து என்ன பிரச்னை என்று கேட்டபோது அவர் தனக்கே உரிய நகைச்சுவையுடன், ''அபிமன்யு போல் சுலபமாக உள்ளே நுழைந்து விட்டேன். இந்த வியூகத்தை உடைத்துக் கொண்டு எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் தவிக்கிறேன்'' என்றார்.

– அ.ஷண்முகசுந்தரம்

---

அவர்களை உலுக்குகிறது. அவர்களில் ஜவஹர் பாபு என்பவனை அது அதிகமே உலுக்குகின்றது.

"டேய் டேய் ஜவஹர், வந்துட்டாடா உன் ஆளு..."

"எங்கடா?"

"அதோ அதோ..." ஒரு விடலை கைநீட்டிக் காட்ட, ஆயாசத்துடன் பையப் பைய ஏறிக் கொண்டிருக்கிறாள் பானு. எப்படி ஏறப் போகிறோமோ என்று மலைத்து நின்ற அதே பானு...

"பின்ன என்ன இவ பாட்டியால இந்த மலையெல்லாம் ஏற முடியுமா என்ன?"

இப்போது மேலும் சில பெண்கள். அதில் ஒருத்தி வெள்ளிக் கம்பி உருண்டையும் குத்தூசியுமாக அரைஞாண் கயிறு பின்னியபடி தெரிகிறாள்.

"டேய் இவ தூங்கும்போது கூட கயிறு பின்னுவாளாடா?"

"ஆமா... நீ என்ன யோக்யம் - நாலு மணிக்கு எழுந்திரிச்சு தறிநெய்யற பய நீ..."

"ஆமா... அய்யா கராத்தே, சிலம்பம்னு சாயங்காலம் வித்தை கத்துக்கப் போயிடறார். அப்ப காலைல தறியில உக்காந்தாதானே மாசம் ஒரு தறியாவது அறுக்க முடியும்."

"டேய்... இங்க வந்தும் ஏண்டா தறி நெசவுன்னுகிட்டு. கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்கடா..."

அந்த இளவயதுக் கூட்டம் கேலி, கிண்டல் என்று அந்தப் பெண் கூட்டத்தை நோட்டம் போட்டபடி பின்தொடருகிறது.

அந்தப் பெண் கூட்டம் கூட ஓரஞ்சாரமாக திரும்பிப் பார்த்து அதை ரசித்தபடி மேலேறுகிறது.

கூர்ந்து கவனித்தால் அந்த ஒழுங்கில்லாத மலைப் பாதையில் நிறைய இடங்களில் இதுதான் நிலை.

பானு மட்டும் யாரையோ தொலைத்து விட்டுத் தேடுகிற மாதிரி இருக்கிறாள். பார்வையைச் சுழலவிட்டு, சுழலவிட்டு சோர்ந்து போயிருக்கிறாள்.

'கஷ்டப்பட்டு பாட்டியிடம் அனுமதி வாங்கிக் கொண்டு இப்படி மலைப்புரம் வந்தது சோர்ந்து ஏமாறவா?'

யார் யாரெல்லாமோ அவள் கண்ணுக்கு தெரிகிறார்கள். ஆனால் அவன் தெரியவில்லை!

மொத்த நெசவாளக் கூட்டமும் படை எடுத்து வந்திருக்கிறது. கால மாற்றத்துக்கேற்ப ஜீன்ஸ் பேண்ட் கூடப் போட்டிருக்கின்றனர் சிலர்.

ஆனால் அவன் மட்டும் அவர்கள் நடுவில் இல்லை. 'பனீர்' வெளுப்பில் வேஷ்டி, மடித்து விட்ட சட்டை - சளைக்காத அதே வெளுப்பில். புயலடித்தாலும் கலையாது என்று நம்பும் படியான சுருட்டையில்லாத படிய வாரிய தலை, சதுர ஃபிரேமில் கண்ணாடி, காலில் கிடந்தாலும் இம்மியழுக்குப் படியாத நிலையில் ஸ்லிப்பர் செருப்பு.

மொத்தத்தில் மோகன்ராம் நடந்து சென்றால் பார்க்க பதவிசாகத் தெரியும். மனதில் மரியாதை பிடிபடும்.

சாதாரண நாளிலேயே சட்டப் புத்தகமும் கையுமாக, நினைத்தால் இந்த மலைப்புரம் பக்கமாக கிளம்பி விடுகின்றவன் இன்று மட்டும் எப்படி வராமல் போனான்?

அடிவாரச் சருக்கத்தில் ஏகாந்தமாய் மரக்கூட்டம். கீழே குளிரக் குளிர நிழல் மூட்டம். அதில் எங்காவது மரத்தண்டின் மேல் அமர்ந்து வைத்த விழி வாங்காமல் படித்துக் கொண்டிருப்பானோ? 'நிம்மதியா படிக்கணும்னா நாம மலை அடிவாரம்தான்' என்று வார்த்தைக்கு வார்த்தை கூறுபவன் இன்று மட்டும் வராமலா போயிருப்பான்? பானு கேள்வியோடு அலைமோதுகிறாள். அவளது சகாக்களுக்கும் அது தெரிகிறது.

''பானு... இந்தக் கூட்டத்துல போய் தேடறியேடி - ஆளரவம் இல்லாத இடமா பாரு. அங்க இருப்பான் உன் மன்மதன்."

"ஆமாண்டி அந்த சாமியாருக்கு கூட்டம் கொண்டாட்டம்னாதான் சுத்தமா ஆகாதே..."

''ஏண்டி, எப்படி அந்த மனுஷனை நீ நேசிக்கிறே...?"

பானுவை அவளது சகாக்கள் கிண்டலில் போட்டுப் புரட்டப் பார்க்க, அவள் அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் அங்கிருந்து நழுவ ஆரம்பித்தாள்.

நிச்சயம் அவன் அங்குதான் இருக்க வேண்டும் என்று தெரிந்து விட்டமாதிரி எங்கோ ஓடத் தொடங்கினாள். அதுவரை அவளை கண்களால் அள்ளி விழுங்கிக்

கொண்டிருந்த ஜவஹருக்கு அவளது ஓட்டம் என்னவோ செய்தது.

"டேய் அவ அந்த மோகன்ராமை தாண்டா தேடிப் போறா வழக்கம் போல உனக்கு பெப்பே..." - ஒருவன் அவனை குத்தத் தொடங்குகிறான். அவன் முகம் சூம்பிப் போகிறது. தலைதாழ்ந்து போகிறது.

"கவலைப்படாதே. இவ என்னதான் அவனை விழுந்து விழுந்து லவ் பண்ணுனாலும் மோகன் இவளை நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டான். இன்னும் ஆறு மாசத்துல அவன் ஒரு வக்கீல். நம்மளை மாதிரி கூலித்தறி பிச்சை கேஸ் கிடையாது. இவளோ, திண்ணைல இட்லி சுட்டு விக்கற ஒரு கிழவியோட பேத்தி. அம்மாதான் நம்ம சாதி. அப்பன் ஒரு..."

பேச்சை வளர்த்தியவன் வாயை சட்டென்று மூடுகிறான் ஜவஹர்பாபு.

"அதுக்கு மேல அவளைப் பத்தி என் எதுக்கையே மட்டமா பேசாதே" என்று எச்சரிக்கிறான்.

"வாஸ்தவம்தான்... அவளுக்கு ஒரு விஷயத்துல ஓட்டைன்னா உனக்கும் ஒரு விஷயத்துல..." அவன் சொல்லி முடிக்கும் முன் அந்த விஷயம் தொடர்பான நினைவில் ஜவஹரின் முகத்தில் சற்றே சலனம்.

"என்னடா ஜவஹர், எங்க மலைக்கா?" - மலை ஏறும் ஒரு காவிப் பல் கிழடு மெதுவடை கடித்தபடி கேட்கிறது.

"இல்ல சுடுகாட்டுக்கு... இது மலையில்லாம என்ன உன் தலையா?" - ஜவஹர் சார்பாக அவன் சிநேகிதனிடம் குத்தலான பதில். கிழடு அதிருகிறது.

"வாய்க் கொழுப்புடா உங்களுக்கெல்லாம். சாராயம் விக்கற குடும்பத்து பசங்களுக்கு நல்லதெங்கே தெரியப்போகுது?"

கிழவரின் உடனடி பதிலில் ஜவஹரின் ஓட்டை எது என்பதும் தெரிந்து விடுகிறது. முகத்தில் நெருப்பெரிய ஆரம்பிக்கிறது.

"ஏ கிழவா மூடிகிட்டு போ... இங்க எகத்தாளம் பேசிட்டு அங்க குடிக்க வந்தே பொறட்டி எடுத்துடுவோம் ஆமா..."

கிழவர், அங்கிருந்து விலகி அண்ணாந்து பார்க்கிறார். உச்சியில் காவிப் பட்டையடித்த, செவ்வக சதுரத்தில் சின்னதாய் கோவில். வெளியே பட்டாச்சாரி சாவதானமாய் வருபவர்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பது தெரிகிறது.

முன்பெல்லாம் கூட்டம் கட்டி ஏறும். இரவில்லை பகலில்லை ஆணில்லை பெண்ணில்லை... அதிலும் இளவயதில்லை பெரியவயதில்லை என்று மாடாய் உழைக்கும் மானங்காக்கும் நெசவுக் கூட்டத்துக்கு இப்படி மலை ஏறும்போதுதான் ஒரு மாறுதல் தெரியும் மேலே நின்றபடி புள்ளி புள்ளியாய் ஜனக் கூட்டத்தையும் வாகனங்களையும் பார்க்கும் போது ஒரு பிரமிப்பு கூடத் தோன்றும். அடிவயிறு பருக்க ஆழ்ந்து மலைக்காற்றை சுவாசித்து, எங்கெங்கோ விரவிக் கிடக்கும் தன் ஜனக் கூட்டத்தையும் ஒரே இடத்தில் பார்த்துச் சங்கமித்து புளிசோறு, கொழுக்கட்டை என்று வகைக்கொரு பதார்த்தத்தையும் அந்த மலை உச்சியில் அமர்ந்து தின்னும் போது 'உலகம் - பிறப்பு - வாழ்க்கை - அதன் போக்கு' எல்லாவற்றிலுமே இன்பம் மட்டுமே இருப்பதாகத் தெரியும்.

பின்பு கீழ் இறங்கி விட்டாலோ, காத்திருந்த மாதிரி பிடித்துக் கொள்ளும் வயிற்றுப்பாடு.

கை, கால், கண், காது என்று சகல உறுப்புக்களையும் ஒருமைப்படுத்திச் செய்ய வேண்டிய ஒரே வேலையாகிய நெசவுப்பணியில் அந்த மொத்த கூட்டமே கரைந்து போக ஆரம்பிக்கும்.

நடுநடுவே உடம்பு வலித்தால் சாராயம், உள்ளம் களைத்தால் சினிமா என்று ஓடியும் திரியும்.

அதற்கு மேலான வாழ்க்கை விஷயங்களெல்லாம் அவர்கள் வரையில் எட்டாத நிலவைப் போலத்தான்...

சமயங்களில் எட்ட முடிந்த விஷயங்களைக் கூட நிலவைப் போலக் கருதி ஒதுக்கி விடும்.

ஒரு வங்கிக் கணக்கு; அதில் சில ஆயிரம் சேமிப்பு என்பது கூட பாஸ்போர்ட், விசா வாங்குகிற மாதிரி ஒரு களைப்பான விஷயம் என்று கருதும் கூட்டத்தில் மோகன்ராம் மட்டும் விதிவிலக்காக இருப்பது சற்று ஆச்சரியமான விஷயம்தான்.

இல்லாவிட்டால் எட்டாம் வகுப்புக்கு மேல் படிப்பெதற்கு என்று கேட்டு அவன் பள்ளி வாழ்க்கைக்கு மூடுவிழா நிகழ்த்திவிட்ட நிலையில் இன்று தபாலிலும் மாலைக் கல்லூரியிலுமாக படித்தே வக்கீலாகும் அளவு வளர்ந்திருப்பானா என்ன?

---

"பொங்கல் செலவுக்காக கேட்ட நூறு ரூபாய்க்கி தொன்னூறு தானே குடுத்திருக்கீங்க முதலாளி... மீதி பத்து ரூபாய்...?"

"அது விழாக்கால தள்ளுபடி!"

– நரேந்திரன்



அந்த வளர்ச்சிக்குக் கூடத் தன் நெசவுப் பணியிலேயே வழியைப் பார்த்திருப்பானா என்ன?

இத்தனைக்கும் தாய்க்காரிக்கு காசநோய்!

தகப்பன் பரலோகம் சேர்ந்து பல வருஷம் ஆகிவிட்டது.

தார்க்குச்சி சுற்றிப் போட்டு தணலில் குச்சிக்கிழங்கை அவித்துத் தந்து, வியர்த்து வடிகையில் புடைவை முந்தானையில் அதைத் துடைத்தெடுத்து இத்தனைக்கும் நடுவில் இதயம் தொடும் அன்பை அவன் திக்கித் திணறும் வண்ணம் அதில் கலந்து தந்த அக்காவைக் கூட காலம் அள்ளிக் கொண்டு போய் விட்ட நிலையில் மோகன் ராமினால் மட்டும் எப்படித் தன்னை இப்படி செலுத்திக் கொள்ள முடிந்தது?

இந்தக் கேள்வியில் விழுந்தவள்தான் பானு என்னும் பானுமதி. இன்று வரை அவள் எழுந்திருக்கவில்லை. எழ முடியவுமில்லை.

**தி**னமும் பாட்டியிடம் இட்லி வாங்க வருவான்.

பாட்டி மந்தா கூட அவனைப் பார்த்து விட்டால் கொஞ்சம் பரவசத்தோடுதான் இட்டிலியைத் தருவாள்.

எல்லோருக்கும் சட்னி, சாம்பார் என்கிற துணைச்சரக்கென்றால் மோகன் ராமுக்கு கூடவே மிளகாய்ப் பொடி, வெங்காய சட்டினி என்று கூடுதல் கவனிப்பு.

இதற்கு நடுவில் பானுவின் பார்வை அவனை கவனிப்பதை மட்டும் அந்தக் கிழவி கவனிக்காமல் இருப்பாளா என்ன?

அதிலும் சிறுவாட்டுக்காசில் பவுடர், ஸ்னோ என்று வாங்கி பூசிக் கொண்டும் நாற்பட்டுப் பாவாடை, அதன் வண்ணத்துக்கு தோதாக சோளி என்று அணிந்து கொண்டும் அவள் அவனை வளைய வளைய வந்தாலும் அவனிடம் மட்டும் ஏனோ பதிலுக்கு விருப்போ வெறுப்போ எதுவும் தெரியவில்லை.

தனியாகப் பேசவும் வாய்ப்பு வாய்க்கவில்லை.

நல்லவேளை பொங்கலும், கரிநாளும் வந்து இப்படி மலை ஓரமாக ஒதுங்க முடிந்திருக்கிறது.

எத்தனையோ பேர் இங்கேதான் தங்கள் காதல் தறியை விரித்து நெய்திருக்கிறார்கள்.

அதிலும் இந்த மலைப் பெருமாளை வேண்டிக் கொண்டு தொடங்கும் விருப்பம் ஈடேறாமல் போனதேயில்லை.

தன் விருப்பம் மட்டும் ஈடேறாமல் போகுமா என்ன?

பானு கேள்வியும் தவிப்புமாக இப்போது அடிவாரத்தில் இருக்கிறாள்.

**வி**டலைகள் சிலம்பமாடிக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களின் ஆசை விளையாட்டு. முழங்கால் உயரம் கூட இல்லாத ஒரு பொடியன் கூட 'போடு போடு' என்று போடுகிறான்.

சுற்றி நிற்கும் கூட்டம் குச்சி ஐஸை சப்பிக் கொண்டும் கரும்பைக் கடித்தபடியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

அந்தக் கூட்டத்தில் தாமுவும் தெரிகிறான். முரட்டு முகத்தோடு!

'இவன் எப்பொழுது ஜெயிலில் இருந்து வந்தான்?' - பானுவுக்கு மட்டுமல்ல; அனேகம் பேருக்குள் இந்தக் கேள்வி. அவனோ சிலம்பத்தில் ஆழ்ந்த கவனத்தில் இருக்கிறான். அவனுக்கு சில அடி தள்ளித்தான் மற்றவர்கள் நிற்கின்றனர்.

"பாவா... அந்த மோகன்ராம் பய இங்க எங்கேயும் இல்ல. கூட்டமா இருக்குன்னு வழியில உள்ள கவுண்டர் காட்டுவயல் வரப்பு மேல உக்காந்து பாடம் படிச்சகிட்டிருக்கான்."

"பாடமா?"

"ஆமா... வக்கீலுக்கு படிக்கிறானுல்ல...?"

"வக்கீலுக்கா?"

"என்ன பாவா தெரியாதா? - அவர் வக்கீலுக்குப் படிப்பாராம்; நம்ம கூட்டம் நிறைய விஷயத்துல மாட்டிக்கிட்டு இருக்குதாம். அவங்களுக்கெல்லாம் இலவசமாவே வாதாடுவாராம்..."

"ஓஹோ... அதான் என் விஷயத்துலயும் சாட்சி சொல்வேன்னு சொல்லியிருக்கானா?"

"நேர்ல போய் கேட்டுட்டா போச்சு."

"கேட்டுட்டா மட்டுமில்லடா.. போட்டும் தள்ளினாதான் சரிப்பட்டு வரும்."

தாமு சிலிர்ப்பிக் கொண்டு கிளம்பும்விதம் சுற்றியிருப்பவர்களை மட்டுமல்ல; பானுவைக் கூடப் பதைக்க வைக்கிறது.

அவனை முந்திக் கொண்டு கவுண்டர் காட்டு வயல் வெளிநோக்கி ஓட ஆரம்பிக்கிறாள்!


(தொடரும்)


---

" 'காளை' மாதிரி மாப்பிள்ளையை எங்கே பிடிச்சீங்க?"

"அலங்கா நல்லூர்ல."

— பெண்ணை சீ. முருகன்








1997 ஜனவரி 12
தாது மார்கழி 28
மலர் : 55
இதழ் : 24

**கல்கி**

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



# ஊழல் சுரங்கம் ஜெ!


ஜெயலலிதா பேரில் தாக்கலாகும் வழக்குகளின் எண்ணிக்கை ஒரு டஜனாக உயரப் போகிறது! ஏற்கெனவே எட்டு வழக்குகள் பதிவாகியுள்ள நிலையில், மேலும் நான்கு வழக்குகளுக்கான முதல் தகவல் அறிக்கையைத் தயாரித்து வருகிறது லஞ்ச-ஊழல் ஒழிப்புத் துறை.

பதிவாகவிருக்கும் புதிய வழக்குகள் ஒன்று டாமின் (தமிழ்நாடு கனிமவள நிறுவனம்) ஊழல் வழக்கு. இதுவே எல்லா வழக்குகளைக் காட்டிலும் மிகவும் பரபரப்பானதாக அமையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மிக வெளிப்படையாகவும் அச்சமின்றியும் அதிகார துஷ்பிரயோகம் நடந்துள்ளதையும், பொதுப்பணம் சுருட்டப்பட்டுள்ளதையும் இந்த வழக்கு உணர்த்தும் என்று அதிகாரிகள் நம்புகிறார்கள்.

அ.தி.மு.க. அரசு ஜூன் 1992-இல் ஒரு காரியம் செய்தது. மணல், கல், கிரானைட், அகழ்வு செய்யும் உரிமங்களைப் பெற அதுவரை நிலவி வந்த டெண்டர் முறையை ரத்து செய்ததோடு தனியாருக்கு கனிம அகழ்வு உரிமங்கள் வழங்குவதையே முற்றிலுமாகத் தடைசெய்தது.

ஒன்பது மாதங்கள் சென்றபின், மார்ச் 1993இல், ஒரு புதிய விதியைப் புகுத்தி, கனிம அகழ்வு உரிமங்களைத் தமது விருப்பப்படி வழங்கும் முழு அதிகாரத்தை டாமின் தலைவர் தியானேஸ்வரனுக்கு அளித்தது!

இந்தச் செயலை அப்போதைய தலைமைச் செயலர் டி.வி. வெங்கட்ராமன் கடுமையாக ஆட்சேபித்து, கோப்பில் குறிப்பெழுதியிருக்கிறார். அந்த ஆட்சேபணையையும் மீறி அரசு ஆணை பிறப்பிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார் அன்றைய முதல்வர் ஜெயலலிதா!




அரசு ஆணை, தலைமைச் செயலகத்திலிருந்து வருவதற்குப் பதில் கனிம வளத்துறைத் தலைவர் தியானேஸ்வரனின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது! இந்தப் புதிய அரசாணையின்படி வழங்கப்பட்ட உரிமங்கள் பெரும்பாலானவற்றை அன்றைய முதல்வர் ஜெயலலிதாவே 'அப்ரூவ்' செய்திருக்கிறார்.

ஒரு கன மீட்டர் கிரானைட்டுக்கு வெறும் இரண்டாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டு குவாரியைக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறது ஜெயலலிதா அரசு.

குத்தகைக்காரர்கள், சர்வதேச சந்தையில் பெற்ற விலையோ கன மீட்டருக்கு 23,000 ரூபாய் முதல் 73,000 ரூபாய் வரை! (தூரத்தைப் பொறுத்து விலை)


இந்த வகையில் 125 உரிமங்கள் வழங்கப்பட்டு, அரசு கஜானாவுக்கு 175 கோடி ரூபாய் நஷ்டமாகியிருக்கிறது!

இந்த ஆதாரங்களையெல்லாம் திரட்டி வைத்துக் கொண்டு லஞ்ச-ஊழல் ஒழிப்புத் துறை, வழக்குத் தொடர தயாராகிக் கொண்டிருக்கிறது. கிருஷ்ணா நதிநீர்த் திட்ட குழாய்கள் நிறுவும் பணி, ஸ்பிக் ஜிரோ பாண்ட் பங்குகள் விற்பனை, தென்னிந்திய ஷிப்பிங் கார்ப்பரேஷன் பங்குகள் விற்பனை ஆகியவற்றிலும் ஊழல் நடந்திருப்பதாகக் கண்டுபிடித்து வழக்குகளைத் தயாரித்து வருகிறது.

இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும்போது ஜெயலலிதா என்ன சொல்லக்கூடும் என்பதை நாம் இப்போதே ஊகிக்க முடிகிறது.

'எனக்கும் இந்தக் கோப்புக்கும் சம்பந்தமில்லை; அன்றைக்கு அத்துறைத் தலைவராகப் பணியாற்றியவரைக் கேளுங்கள்; ஒவ்வொரு கோப்பையும் நான் தனித்தனியாகப் பார்க்க முடியுமா? அதிகாரிகளின் அறிவுரையின் பேரில்தான் இணங்கினேன்; ஒருகால் என் கணிப்பு தவறிப் போயிருக்கும் **(judgement error)** - தவறுதலாக நடந்திருக்கும்; எந்தவொரு தீய நோக்கமும் என் செயலில் இல்லை'... என்றெல்லாம் தன்னிலை விளக்கம் அளிப்பார் முன்னாள் முதல்வர்.

இவையொன்றையும், சராசரி அறிவுடைய சாமானியர்கள் கூட ஏற்க மாட்டார்கள்.




ஒரு மாநில முதல்வராக இருப்பவர், அரசாங்கத்தின் எந்தப் பிரிவுக் கோப்பானாலும் அதற்குத் தார்மிகப் பொறுப்பேற்க வேண்டியவராகிறார். அதிலும் கோப்புகளில் கையெழுத்திடும்போது அதுபற்றிய சாதக பாதகங்கள் குறித்து முழுமையாக விசாரித்து அறிந்து செயல்பட வேண்டியவர்.

அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை ஏற்கலாம்; ஆனால், கனிம வளத்துறை உரிமங்கள் வழங்குதல் விஷயத்தில், அதிகாரம் தனியொருத்தர் (தியானேஸ்வரன்) கையில் குவிக்கப்பட்டிருக்கிறது. டெண்டர் முறையே ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆக, அடிப்படையே தவறாக இருக்கும்போது, அந்தத் தவறுக்குத் தலைமைச் செயலரின் எச்சரிக்கையை மீறி முதல்வரே துணை போயிருக்கும்போது, ஜெ கூறக்கூடிய சமாதானங்கள் எல்லாம் படுத்துவிடும்!

ஜெயலலிதாவுக்கு மிகவும் பிடித்த பிரத்யேகமான தன்னிலை விளக்கம் : **'error of judgement'.** அதாவது 'ஒரு விஷயத்தை அல்லது நபரை அல்லது நிலைமையைச் சரியாக எடைபோடாமல் தவறு தலாக ஊழல் நடக்க அனுமதித்து விட்டேன்' என்று மிக பவ்யமாக விளக்கம் தருவதில் வல்லவர் அவர்.

ஒரு கட்சியின் ஈடுஇணையற்ற தலைவியாகத் தன்னை முன்நிறுத்திக் கொண்டவருக்கு, பாத்திரம் அறிந்து பொறுப்பை ஒப்படைக்கும் குறைந்தபட்ச திறமை இருக்க வேண்டாமா? ஒரு மாநிலத்தின் மகத்தான முதல்வராக மார்தட்டிக் கொண்டவருக்கு 175 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவது புரியாமல் இருக்குமா?... **Error of judgement** என்றால், அப்படி மகத்தான தவறு செய்யக்கூடியவர் முதல்வராக இருக்கும் தகுதியே அற்றவராகிறாரே?

ஊழல் பற்றிய உண்மைகளைச் சட்டத்துக்குத் தெரியாமல் மறைக்கும் முயற்சி இது என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். தாங்கள் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டுள்ளதையும் சுரண்டப்பட்டுள்ளதையும் அவர்கள் முழுமையாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

'அறியாமை', 'வெகுளித்தனம்' போன்றவற்றைக் கவசமாக்கிக் கொண்டு ஜெயலலிதா சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முயற்சிகள் செய்வது அனுதாபத்தைப் பெற்றுத் தராது; மக்களின் ஆத்திரத்தைத் தான் கிளப்பிவிடும்.

# ஓட்டம்



1

"அரங்கேற்ற வேளை என்றொரு படம் எடுக்கிறேன். அதில் ஒரு முக்கியமான பாத்திரத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்'' என்றார் இயக்குநர் பாசில்.

என்ன கதை?

அவர் சொன்னார் : "ஒரு நாடக கம்பெனியைச் சுற்றிப் படரும் கதை. நடிகர்கள், சீன்- செட், பிற வசதிகள் எல்லாம் இருக்கிற ஒரு நாடக கம்பெனி. ஆனால், நாடகம் போட ஃபைனான்ஸ் இல்லாமல் தவிக்கிற முதலாளி. தங்க இடம் தேடி, வேறு வேறு இடங்களிலிருந்து அங்கே வருகிற ஹீரோ, ஹீரோயின். அவர்களைத் தங்க வைப்பதோடு, 'ஏன் தம் நாடகத்தில் அவர்களையே நடிக்கவும் வைக்கக் கூடாது?' என்று யோசிக்கிறார் கம்பெனி முதலாளி. அதற்குப் பின்னால் வேறுவிதமான சிக்கல்கள் வருகின்றன...."

இயக்குநர் சொல்லச் சொல்ல, என் மனசுக்குள் தடதடவென்று ஒரு தேர் ஓடத் தொடங்கியது. அறுபது வருடங்களுக்கு முன் ஓடிய அதே தேர்!




இந்தப் படத்தில் நிச்சயம் நான் ஹீரோ இல்லை. நாடக கம்பெனி கதையில் பின் நான் யார்? வாட்ச்மேனா? எடுபிடியா? பாட்டு வாத்யாரா?

"நீங்கள்தான் கம்பெனி முதலாளி" என்றார் பாசில்.

என் மனசுக்குள் ஓடிய ரதம் மேலும் வேகம் எடுத்தது. அந்த ஓட்டத்தில், நான் யாருக்கும் சொல்லாமல் கடிதம் எழுதி வைத்துவிட்டு, வீட்டை விட்டு ஓடிய அந்தப் பத்து வயதுப் பையனை மறுபடியும் அடையாளம் கண்டேன்.

தறுதலை என்றும் உருப்படாதவன் என்றும் குலப் பெயரைக் கெடுக்க வந்தவன் என்றும் ஏராளப் பட்டங்கள், 'புகழுரை'களுடன் வீட்டை விட்டு ஓடிப் போய் நாடகக் கம்பெனியில் சேர்ந்த அந்தச் சிறுவன் நான்தான்!

'அரங்கேற்றவேளை' வியாபார ரீதியில் அத்தனை சிறப்பான வெற்றி பெறாததற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால், என் ஐம்பது வருட திரை வாழ்க்கையில் கிடைத்த மொத்த புகழும் பாராட்டும் அந்த ஒரு படத்தில் நடித்ததற்காக மட்டுமே எனக்குக் கிடைத்துவிட்டது என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அந்தப் படம் வெளியான சில நாட்களில் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்தேன்.

என்னைப் பார்த்ததுதான் தாமதம். "ஐயா, ராமசாமீ...!'' என்று கூவியபடி ஒரு வயதான மூதாட்டி ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்து, "அட்டகாசமா பண்ணியிருந்தய்யா" என்று பாராட்டியது இன்னும் என் கண்களில் நிற்கிறது!

எனக்கே கூட ஆச்சர்யமாக இருந்தது. எப்படி என்னால் அந்தப் படத்தோடு அப்படி ஒன்றிப் போக முடிந்தது?

இயல்பாகவே எனக்குள் நிறைந்து கிடந்த 'நாடகக்கார குணம்'தான் காரணம் என்று தோன்றுகிறது.

அப்படியொன்றும் நடிப்புப் பாரம்பரியம் மிக்க குடும்பம் அல்ல, எங்களுடையது. ராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுப்பட்டி

**வி.கே. ராமசாமி**

# புதிய தொடர்




என்கிற நடுத்தர கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் நான். என் அப்பா கந்தன் செட்டியார் அங்கே எண்ணெய் வியாபாரி. வியாபாரி என்றால் வெறும் காசு மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவரல்ல. தன் துறையை ஒரு கலையாகவே எண்ணி ஆராதித்தவர் அவர். ஒரு மூட்டையிலிருந்து ஓர் எள்ளை எடுத்து நசுக்கிப் பார்த்து, மொத்தம் எத்தனை லிட்டர் எண்ணெய் தேறும் என்று கணக்குச் சொல்லும் வித்தகர்.

இந்தத் திறமை, தொழில் சுத்தம், நாணயம், நேர்மை இவற்றால் அந்தப் பகுதி முழுவதிலும் என் தந்தை மிகப் பிரபலம்.

என் தந்தையின் பெயரை மேலும் பிரபலமாக்க நான் ஏதாவது செய்ய வேண்டாமா? செய்தேன்.

விருதுநகர் சத்ரிய வித்யாசாலையில் படித்துக் கொண்டிருந்த எனக்கு பள்ளி நண்பர்கள் அதிகமில்லை. ஆனால் பல உருப்படாத பயல்களுடன் சிநேகம் வந்து விட்டது. வகுப்புகளுக்குப் போகிற வழக்கமே இல்லை. அவர்களுடன் ஆற்றங்கரையில் சுற்றுவது, சீட்டாட்டம் – மங்காத்தா, உள்ளே வெளியே – காசு வைத்து ஆடுவது, காலணாவுக்கு இரண்டு என்று விற்ற குட்டியானை சிகரெட் இப்படி என்னென்ன வரக் கூடாதோ, அத்தனை பழக்கங்களும் ஒட்டிக் கொள்ள, "கந்தன் செட்டியார் மகனா?" என்று கேட்காத வாயில்லை.

வீட்டுக்கு விஷயம் தெரிந்து, பலமாகக் கண்டித்தார்கள். நானா கேட்பேன்? இரண்டு காது எதற்கு இருக்கிறது?

அப்படித்தான் ஒருநாள் காலை, கடைத் தெருவெல்லாம் மேய்ந்து விட்டு, பள்ளிக்குப் போனேன். மணி அடித்து, அவரவர் வகுப்புக்குப் போய், கேட்டை மூடி விட்டார்கள்.

நான் யாருக்கும் தெரியாமல் இருட்டு முழியுடன் கேட் ஏறி, உள்ளே குதித்த சமயம், ரவுண்ட்ஸ் வந்து கொண்டிருந்த தலைமை ஆசிரியர் நாராயண ஐயங்கார் பார்த்து விட்டார்.

"லேய், யார்றா அது கேட் மேலே ஏறிக் குதிக்கறது?"

கேட்டபடி, ஓடிவந்து, என் சட்டையைப் பிடித்துக் கொண்டார்.

"நான்தான் சார்... ராமசாமி."

"ராமசாமின்னா? யார்றா நீ?"

"இங்க படிக்கறேன் சார்."

"எந்த கிளாஸ்?"

"தேர்ட் பார்ம்."

"அடப்பாவி! அதுக்குள்ள திருட்டுத்தனமா? யார்றா உங்க அப்பா?"

"கந்தன்செட்டியார் சார். உங்ககிட்டப் படிக்கானே முத்தையா, அவன் தம்பி சார் நான்."

"என்னது? முத்தையா தம்பியா? அவனுக்கு இப்படியொரு தம்பியா? போகட்டும். ஏண்டா, சட்டைக்கு பித்தான் இல்லே?"


"சலவைக்குப் போட்டிருந்தேன் சார். வண்ணான் ஓடைச்சுட்டான்."

ஹெட்மாஸ்டரின் கோபம் எல்லை மீறியது. என்னைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு என் வகுப்புக்குப் போய், ஆசிரியரிடம் புகார் சொன்னார் : "இதுதான் நீங்கள் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளும் லட்சணமா?"

என் ஆசிரியருக்கு அவமானமாகப் போய் விட, என்னைப் பிடித்து விளாசி விட்டார்.

வீட்டிற்குப் புகார் போக, அங்கேயும் நல்ல அர்ச்சனை.

இது ஏதடா, பள்ளிக்குப் போனாலே



வம்பாக இருக்கிறதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்படியும் எப்பொழுதாவது நான் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்ததற்குக் காரணம், என் ஹிந்தி ஆசிரியர்.

பள்ளியிலேயே நான் மிகவும் விரும்பிய ஒரே ஆசிரியர் அவர்தான். கதை மாதிரி பாடம் சொல்லுவார். ஹிந்தி மொழி மேல் எனக்குக் காதலே வரும்படிச் செய்தவர் அவர்.

ஆனால், அதுவும் நிலைக்காதபடி ஒரு சூழ்நிலை வந்தது.

ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம்! என் வாழ்க்கையையே புரட்டிப் போட்ட சந்தர்ப்பம் அது. என் பள்ளி வாழ்க்கைக்கே முற்றுப் புள்ளி வைக்கச் செய்த தருணம் அது!

போராட்டத்தால் வகுப்புகள் நடக்காமல் போக, எப்போதாவது பள்ளிக்குப் போன நான், அதுவும் முற்றிலுமாக நின்று விடவே, என் கவனம் வேறு திசையில் திரும்பியது.

யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை என்பவர் நடத்தி வந்த 'மதுரை ஸ்ரீ பாலகான சபா' என்கிற நாடக கம்பெனி, அப்போது விருதுப்பட்டியில் முகாமிட்டு, நாடகங்கள் போட்டுக் கொண்டிருந்தது.

நானும் என் சின்னம்மா மகனும் அந்த நாடகம் பார்க்கப் போனோம்.

என் சின்னம்மா மகன் ஏற்கெனவே நாடகத் தொடர்பு உள்ளவன். பொன்னுசாமிப் பிள்ளையின் குழுவில் நடித்தும் வந்தார். ஜில்பாத் தலையும் காதுக் கடுக்கனும் பட்டு வேட்டி - ஜிப்பாவும் வெற்றிலைப் பெட்டியுமான நாடக நடிகர்களின் தோற்றம் என்னைக் கவர்ந்தது.

நடிப்பைப் பற்றி அதிகம் ஏதும் தெரியாத நிலையிலேயே நான், நடிகனாவது என்று முடிவு செய்தேன்.

நடிகனாவது சரி. எப்படி நடிகனாவது? யார் வாய்ப்புத் தருவார்கள்? வீட்டில் எப்படிச் சம்மதிப்பார்கள்?

பெற்றோர் ஆசியுடன் நடிகனாவதெல்லாம் சாத்தியமே இல்லை என்று தெளிந்தேன். நானே நேராகப் போய் யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளையைப் பார்த்து, பேசி, பாலகான சபாவிலேயே சேர்ந்து விடுவது என்று முடிவு செய்து கொண்டேன்.

செய்த முடிவின்படி அவர்கள் தங்கியிருந்த இடத்துக்குப் போய்ப் பார்த்தால் -

அவர்கள் முகாமை முடித்து விட்டு, வேறு ஊருக்குப் போய் விட்டிருந்தார்கள்.

இதனாலெல்லாம் மனம் தளர்ந்து விடுபவனாக இல்லை, நான்.

ஒருநாள் இரவு எல்லாரும் செய்வது போல ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, கம்பி நீட்டி விட்டேன்.

நாடகத்தில் சேருவது என்று முடிவெடுத்தவுடன், 'பாலகானசபா'வின் அடுத்த கேம்ப் எங்கே என்று விசாரித்துத் தெரிந்து கொண்டேன். பொன்னமராவதி என்ற ஊரில் அடுத்த கேம்ப்.

ஆனால் எனக்கு விருதுப்பட்டியை விட்டால் மதுரை மட்டும்தான் தெரியும். விருதுப்பட்டியிலிருந்து முப்பது மைல். 'சரி; முதலில் மதுரைக்குப் போய் விடுவோம்; அங்கே போய் விசாரித்துக் கொண்டு, பொன்னமராவதிக்குப் போய் விடலாம்' என்று முடிவு செய்து கொண்டேன்.

யாரும் பார்த்து விடப் போகிறார்களே என்கிற படபடப்புடன் ரயில் நிலையத்தில் அன்றிரவு முழுவதும் மறைவாக உட்கார்ந்து கொண்டேன்.

வீட்டை விட்டு ஓடுகிறோமே என்கிற கலக்கமும் பயமும் ஒருபுறம்; எப்படியும் பெரிய நடிகனாகி விடுவோம் என்கிற தன்னம்பிக்கை ஒருபுறம்.

குழப்பமான சிந்தனைகளுக்கிடையே, ஒருவழியாக மறுநாள் காலை பஸ் பிடித்து, மதுரையை வந்தடைந்தேன்.

நேராக ஒரு ஓட்டலுக்கு சாப்பிடச் சென்றேன்.

சாப்பிட்டு விட்டு யாரிடமாவது விசாரித்துக் கொண்டு, பொன்னமராவதி கிளம்புவது என் திட்டம்.

அதன்படியே திருப்தியாக சாப்பிட்டேன். பில்லுக்குப் பணம் கொடுக்க கல்லா அருகே வந்தபோது, தற்செயலாக வாசலைப் பார்த்தேன்.

என் தந்தையும் அண்ணனும்! என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள்!

எனக்கு பயம் பிடித்துக் கொண்டது. அவர்கள் கண்ணில் பட்டுவிட்டால் என் முயற்சியெல்லாம் வீண் என்பது ஒருபுறம் இருக்க, யார் அடி தாங்குவது? டின் கட்டி விடுவார்கள்!

அப்போது நான் ஒரு காரியம் செய்தேன்.

கல்லாவில் இருப்பவரிம் பணம் கொடுக்க விருந்தவன், சட்டென்று கையைப் பின் இழுத்துக் கொண்டு, ஓட்டலின் உள்புறம் நோக்கி ஓடத் தொடங்கினேன்.

முதலாளிக்குச் சந்தேகம் வந்து விட்டது. பையன் எதற்கு பயந்து ஓடுகிறான்?

"டேய், அவனைப் பிடிங்கடா!" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தபடி அவரும் கல்லாவை விட்டு இறங்கி ஓடி வர, ஒரு நிமிடத்தில் அந்த இடமே பரபரப்பாகி விட்டது!

இந்த கலாட்டா, வெளியே போய்க் கொண்டிருக்கும் என் அப்பாவின் கவனத்தை இழுத்து வந்து விட்டால்...?

நான் பதற்றமடைந்தேன். 'எது நடந்தாலும் சரி' என்று ஓட்டலின் உள்பக்கம் நோக்கி ரேஸ் குதிரை வேகத்தில் பாய, என்னமோ, ஏதோ என்று அங்கிருந்த ஊழியர்கள் பாய்ந்து வந்து என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.

முதலாளி முன் கொண்டு வரப்பட்டேன். "யாருடா நீ?" என்று முறைத்தார் அவர்.

(தொடரும்)

Pongal Nalvazhthukkal

# Double Assurance

'FAA -' by CRISIL indicating HIGH SAFETY

**More interest, More safety**. That's what you get when you come to **Annamallai Finance.** **Annamallai Finance** has over the years come to exemplify what a finance company should be - Committed. Trusted. Professional



"HIGHER INTEREST RATES ARE OFFERED FROM 1st JANUARY 1997."

★ PART OF THE Rs. 600 CRORE BANNARIAMMAN SUGARS GROUP
★ OVER Rs. 70 CRORES IN DEPOSITS

## ANNAMALLAI FINANCE LTD

Regd Office : 252, Mettupalayam Road, Coimbatore - 641 043. Ph : 432224.

Branch Telephone Nos : • Bombay : 2843602 • Bangalore : 2227365 • Coimbatore : 232015 • Delhi : 5752417 • Ernakulam: 372226 • Erode : 79400 • Gobichettipalayam : 22924 • Karaikudi : 23029 • Kozhikode : 765837 • Madurai : 540450 • Madras: Spencer Plaza Branch : 8522538 Anna Nagar Branch: 6263447 T. Nagar Branch : 4340248 Mylapore Branch : 4992993 Continental Plaza: 8522350 / 8522430 • Pondicherry: 38507 • Pollachi: 25909 • Pune : 627178 • Salem : 419513 • Sathyamangalam: 20420 • Tirunelveli : 25144 • Trichy : 463304 • Vellore : 26371 • Villupuram : 23760.

* This advertisement is persuant to the statutory advertisement released on 27.07.96 in Indian Express.

YOUR PROSPERITY IS OUR CONCERN

SASI / 773 / 96

# உங்கள் வளமான எதிர்காலத்திற்கு
# எங்கள் விசேஷ சேமிப்புத் திட்டம்

## சில்வர் டெபாசிட் திட்டம்



இன்றே எங்களிடம் ஒரு டெபாஸிட்டைத் துவக்கி,
வளமான மகிழ்ச்சியான வருங்காலத்தை எதிர்நோக்குவீர்

# EXPRESS
FINANCIAL EXCHANGE LIMITED

பாங்க் ஆப் அமெரிக்காவின் சார்பு நிறுவனம்

- வாகனங்களுக்கான கடன்கள்
- பங்குகள் மீதான கடன்கள்

அங்கீகரிக்கப்பட்ட டீலர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிராவலர்ஸ் செக்குகள்

பதிவு அலுவலகம்: நெ. 9, அட்வேல் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017.
போன்: 4340325, 4340329, 4341403, ஃபாக்ஸ்: 4341518.

• சென்னை • ஹைதராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • பெங்களூர் • திருச்சி
• கும்பகோணம் • கோயம்புத்தூர் • பாண்டிச்சேரி

1996 மார்ச் 4ந் தேதி எகனாமிக் டைம்ஸில் வெளியான எமது சட்ட பூர்வ விளம்பரத்தைத் தொடர்ந்து இந்த விளம்பரம் வெளியாகிறது.

Helios & Mathison

# கல்கி - பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும்

# வாரம் ஒரு சவரன்!



## பரிசுப் போட்டி -1

அன்பு வாசகர்களே,

என்னதான் விலைவாசி பயமுறுத்தினாலும் பானையில் பாலும் மனத்தில் மகிழ்ச்சியும் பொங்கும் நேரமிது.

உங்கள் மகிழ்ச்சி மேலும் பெருக கல்கி-பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்குவது தான் வாரம் ஒரு சவரன் போட்டி.

முதல் போட்டி மிகவும் எளிது:

உங்கள் உள்ளத்தில் மிகவும் சந்தோஷம் பொங்கச் செய்த ஓர் அனுபவத்தை அருகிலுள்ள கூப்பனில் எழுதி அனுப்புங்கள்.

சிறந்த அனுபவங்கள் பிரசுரமாகி சன்மானம் பெறும். தலைசிறந்த ஓர் அனுபவத்தை எழுதுபவருக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் தங்க நகை பரிசாக வழங்கப்படும்.

### போட்டி விதிகள்:

- *கூப்பனில் மட்டுமே எழுதலாம். கார்டு, இன்லண்டில் வருபவை ஏற்கப்படமாட்டாது.*
- *உறையின் மேல் கல்கி - பாலு ஜுவல்லர்ஸ் போட்டி-1 என்று குறிப்பிட்டு கல்கி அலுவலக முகவரிக்கு (காண்க கடைசி பக்கம்) அனுப்ப வேண்டும்.*
- *கூப்பன்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 20.1.97*
- *ஆசிரியர் தீர்ப்பே இறுதி.*

**சவரன் போட்டி - 1**

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................

## புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள் !

## குடும்பத்தின் கனவுகள் நனவாக

## முதலீடு செய்வீர்

# பவர்ஃபின்

**முறையான வட்டி வழங்கும் திட்டம்**
**திட்டம் 'அ' (RIPS)**

| காலம் | குறைந்த அளவு வைப்பு நிதி ரூ. | வழங்கப்படவுள்ள ஆண்டு வட்டிவீதம் | |
|---|---|---|---|
| | | மாதத்திற்கு | காலாண்டுக்கு |
| 12 மாதங்கள் & 1 நாள்<br>25 மாதங்கள்<br>36 மாதங்கள்<br>48 மாதங்கள்<br>60 மாதங்கள் | **5,000** | **15%** | **15.19%** |

**திரள்வட்டி வழங்கும் திட்டம்**
**திட்டம் 'ஆ' (CIPS-I)**

| காலம் | குறைந்த அளவு வைப்பு நிதி ரூ. | முதிர்வுத் தொகை ரூ. | ஒரு ஆண்டிற்குப் பெறக் கூடிய வருவாய் விகிதம் |
|---|---|---|---|
| 12 மாதங்கள் & 1 நாள் | **3,000** | 3,483/- | 16.06% |
| 25 மாதங்கள் | | 4,092/- | 17.47% |
| 36 மாதங்கள் | | 4,692/- | 18.80% |
| 48 மாதங்கள் | | 5,445/- | 20.38% |
| 60 மாதங்கள் | | 6,321/- | 22.14% |

பவர்ஃபின் நிறைவேறாத வாக்குறுதிகளை வழங்குவதில்லை.

- வசதிக்கேற்ற பல வைப்பு நிதித் திட்டங்கள்.
- இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனமாக இருப்பதால், உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு தருவதுடன் அதிக வருவாயும் தருகிறது.

**வருமான வரிச் சட்டப்பிரிவு 80L-ன் கீழ் வரிச் சலுகை உண்டு.**

PowerFin

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண்.84, டி.டி.கே.சாலை,ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை 600 018. தொலைபேசி எண் : 499 7689, 4995648.

இந்தியன் எக்ஸ்பிரசில் 23.9.96 அன்று ஏற்கெனவே வெளியான எமது விளம்பரத்தைத் தொடர்ந்து வெளியிடப்படுகிறது.

DIPR/909/DIS/96

# ஆட்டம் பற்றி ஓர் அலசல்...!




'ஸ்ரீ நடராசத் தத்துவம்' என்ற இந்த நூல், 'அது என்னமோ திருவாசியோடு கூடிக் காலைத் தூக்கி நின்று ஆடுகிற சமாசாரம்' என்று எண்ணாமல் ஆழ்ந்து படித்தறிய வேண்டிய ஒன்று.

'இராமலிங்க அடிகளார், சிதம்பரம் சித் சபையில் கற்பூரத் தட்டும் காணிக்கை நெறியும் வழங்குவதை வெறுத்து, உத்தர சிதம்பரம் என்னும் வடலூரில், ஞான சபையை நிறுவினார்' என்கிற செய்தி, பலரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

சிந்து வெளி நாகரிகம் காலத்துக்கு முன்பே (கி.மு. பதினெட்டு) நடராஜர் வழிபாடு உண்டு என்கிற ஆய்வு முடிவு, அகழ்வாய்வு முத்திரை ஆதாரச் செய்திகளோடு விளக்கப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச இயலோடு நடராச தத்துவத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது 'ஆன்மீகமும் அறிவியலும் எங்கோ ஒரு நூலிழையில் விடுபட முடியாமல் தொடர்பு கொண்டவை என்பதைக் காட்டும்.

'ஹிரண்ய கர்ப்பம்' என்று சொல்லப்படுகிற பொன் முட்டை வடிவமே பேரண்டம் என்றும், இதனுள் இருந்து சிவபெருமான் ஆடுகிறார் என்றும், பல மேற்கோள்களுடன் ஆசிரியர் எழுதுகிறார். 'பிரபஞ்ச இயக்கத்துக்கான மூலாதார சக்தி, நடராசத் தத்துவத்தில் அடங்கியுள்ளது. ஒவ்வொரு புரோட்டானிலும் இந்த ஐந்தொழில் நடனம் நடைபெறுகிறது. ஆண்டவன் ஆட்டுவிக்க, அணுக்கள் சுழல்கின்றன. அணுக்கள் அசைய அண்டங்கள் அசைகின்றன...' என்று பிரபஞ்ச இயக்கத்தை வரைகிறார் ஆசிரியர்.

படைப்புக்கள் எல்லாமே காலப் பிரமாணத்தை மையப் படுத்தியவை. நடராஜத் திருமேனியின் ஒவ்வோர் உறுப்பையும் எடுத்து விளக்கும்போது 'துடி'யைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து வழங்கியுள்ளது, இந்தப் பிரபஞ்ச இயலை நன்கு விளக்குகிறது. 'உடுக்கையில் தட்டும்போது' எழுப்பும் சுழல் வட்ட ஓசைகளையே நாதப் பிரம்ம அலைகள் என்பர். படைப்பின் உதயகால நிகழ்ச்சிக்குத் துணையாவது துடியோசை... துடி ஒரு தாள வாத்தியம். காலப் பிரமாணத்தின் இயக்கம். இறைவனின் படைப்புக்கள் அனைத்தும் காலப் பிரமாணத்தில் இயங்கி வருவதை இது காட்டுகிறது'' என்கிறார்.

''வேகமான சிவதாண்டவத்தின்போது பிரபஞ்சத்தின் பௌதிக அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. பூமி தாழ்வதும் திசைகள் மேலெழுவதுமாக அமைகின்றன...'' என்று ஹர்ஷரின் கல்வெட்டு கூறுவதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

வரலாற்று நோக்கில் கிடைத்த ஆய்வு முடிவுகளின் துணை கொண்டு வடமாநிலங்கள் உட்படப் பரவியிருந்த சிவதாண்டவக் கோவில்களைப் பற்றி மிகவும் விரிவாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

'சக்தி இல்லாமலும், திருவாசி இல்லாமலும் ஆடல் வல்லானை வழிபடுவது நல்லதல்ல' என்பது போன்ற வழிபாட்டுக் குறிப்புக்கள் இறைப்பற்று மிக்கோருக்குப் பயன் தருபவை.

காளிதாசன், இரத்னாகர் உட்படப் பல சமஸ்கிருத ஆசிரியர்களின் 'புஜதாருவனம்' போன்ற சொல்லாடல்களைப் பொருத்தமான முறையில் விளக்கியுள்ளது சிறப்பு. இரண்டு கரம், நான்கு கரம் எல்லாம் கடந்து எண்ணற்ற கரங்கள் காடு போல் மண்டியுள்ள நிலையே 'புஜதாருவனம்' என்பது சமஸ்கிருத இலக்கிய மரபு.

'தென்னாடுடைய சிவன்' என்று போற்றப்பட்டிருந்த போதிலும், சிவதத்துவம் என்று ஆய்வுக்கு முற்படுகிறபோது வடமொழி அறிவு அவசியமாகிறது. 'சமஸ்கிருத அறிவு, ஆய்வு உதவியாளர்கள் முதலியன அமையின் எவ்வளவோ அரிய தத்துவ ஞானங்களை வெளிக் கொணரலாம்' என்றும் 'சம்ஸ்கிருத மறை நூல்கள் திருமுறை, ஆகம சிற்ப சாத்திரங்கள் பௌத்த ஞானம் முதலியன அறிந்த புலவர்கள் ஒன்றாக அமர்ந்து ஆய்வு செய்ய வேண்டும்' என்றும் நூலாசிரியர் தம்முடைய முன்னுரையில் கூறியிருப்பது, தமிழர்கள் 'குறுகிய மொழி முட்டையை' உடைத்துக் கொண்டு வெளி வந்து பரந்த அறிவு பெற வேண்டும் என்கிற ஆசையைத் தூண்டுகிறது.

**— சுப்ர. பாலன்**

**ஸ்ரீ நடராசத் தத்துவம் / டாக்டர் வை. தட்சிணாமூர்த்தி / வானதி பதிப்பகம், சென்னை-17/விலை ரூ.80/-**

**படித்ததில் பிடித்தது :**

# பாடும் புகைப்படங்கள்!


மியூசிக் அகடமி வெராந்தாவில் இசைக் கலைஞர்களின் புகைப்படங்களை ரசனையுடன் பார்த்துவிட்டு, அவற்றை எடுத்த புகைப்பட நிபுணர் ராகவேந்திரராவ் வீட்டுக்குப் போயிருந்தோம்.

ஈஞ்சம்பாக்கத்தில், மிகப் பெரிய தோட்டமும் சிறிய வீடுமாக இருந்தது. தோட்டத்தில் ஓர் ஊஞ்சல்...

ராகவேந்திரராவைப் பொறுத்தவரை பறவைகளின் ஒலி வருடும் காற்று, இலைச் சருகுகளின் சரசரப்பு ஒலி, கடலின் அலை ஓசை எல்லாமே இசை, இசை, இசைதான். அவர் எடுத்துள்ள படங்களை சற்று நின்று பார்த்தால் தோடியோ, பைரவியோ கேட்கிற உணர்வு வருவதில் ஆச்சர்யம் இல்லையே.... சில அனுபவங்களைச் சொல்கிறார்:



• மாளவிகா



• செம்மங்குடி



"உங்கள்
வீட்டுக்கு
வந்து,
ஊஞ்சலில்
உட்கார்ந்து
அமைதியை
ரசிக்கத்
தோன்றியது.
வந்து
விட்டேன்!"
– ஜெயஸ்ரீ



• டி.கே. பட்டம்மாள்

"உன்னிகிருஷ்ணனைப் புகைப்படம் எடுக்கப் போனேன். நான் காமிராவை வெளியே எடுத்தபோதே அவர் பாடத் தயாராகி விட்டார். நான் பிலிம் சுருள் இல்லாமலே படங்கள் எடுத்துக் கொண்டிருந்தேன். சில சமயம் அப்படியும் செய்வதுண்டு! அவர் மனசிலிருந்து காமிராவும், புகைப்படக்காரரும் முழுதுமாக மறைந்து போய், அவர் தம் பாட்டில் லயிக்கிற தருணம் வரும் வரை காத்திருந்தேன். ஆனால் அதற்காகக் காத்திருக்கிற நேரம் ரொம்ப மகிழ்ச்சியானது. அவர் இசையில் ஒன்றிப்போய், தம்மைப் படம் எடுக்கிறார் என்ற உணர்வே இல்லாத அந்த 'மூட்' எனக்கு ரொம்ப முக்கியமானது!

டி. என். கிருஷ்ணனைப் படம் எடுக்க மூன்று வருடங்கள் காத்திருந்தேன். நான் படத்தில் எதிர்பார்க்கிற 'வைப்ரேஷன்' கிடைப்பதற்காக, இது மாதிரி காத்திருப்பது என்னைப் பொறுத்தவரை சகஜம்தான்.

பாம்பே ஜெயஸ்ரீ ஒருநாள் காலை திடீரென்று வீட்டுக்கு வந்தார், சில நண்பர்களுடன். அவர்தான் ஜெயஸ்ரீ என்று எனக்குத் தெரியாது. பிறகு அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"இந்த வீட்டின் பரந்த மணல்வெளியிலும், தோட்டத்திலும், ஊஞ்சலிலும், தூரத்தில் கடலின் அலை ஓசையிலும் ஓர் அமைதி தெரிகிறது எனக்கு" என்றார்.

"அமைதிதான் க்ரியேடிவிடியின் ஆதாரம்" என்று ஆரம்பித்தார் ஜெயஸ்ரீ. "அமைதி உங்களை அலைக்கழிக்கலாம் அல்லது மெள்ளத் தொட்டெழுப்பலாம்: இல்லையென்றால், அமைதி, சிந்திக்கவும் வைக்கலாம்" என்ற போக்கில் பேச்சு போய்க் கொண்டிருந்தது.

பிறகு சமயம் கிடைக்கிறபோது, தானே காரை ஓட்டிக் கொண்டு ஜெயஸ்ரீ இங்கே வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து விட்டால், பாட்டும், பேச்சும்தான்.

"உங்கள் வீட்டுக்கு வந்து, ஊஞ்சலில் உட்கார்ந்து, அமைதியை ரசிக்கத் தோன்றியது. வந்து விட்டேன்!" என்பார். அப்போது எடுத்த படங்களில் ஜெயஸ்ரீயின் சங்கீத பாவம் வெளிப்படும்!"

மாளவிகா சருக்கையைப் படம் எடுக்கச் சென்றபோது அவர் தமது புதிய நடன நிகழ்ச்சிக்கு ரிகர்சல் செய்து கொண்டிருந்தார். நான் அப்போது எடுத்த படங்கள் எனக்குத் திருப்தி தரவில்லை. அதிலும், குறிப்பிட்ட சில சிருங்கார பாவங்களில் அவருடைய திறமைக்கு நியாயம் செய்பவையாக என் புகைப்படங்கள் அமையவில்லை என்று தோன்றிற்று. மாளவிகா களைத்துப் போய் விட்டார். "பத்து நிமிஷம் ஓய்வு எடுத்துக் கொண்டு ஆரம்பியேன்?" என்று அவர் அம்மா சொன்னதும், சோர்ந்து போய் ஒரு விளக்கின் அருகில் உட்கார்ந்து கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்

தில்தான் நான் காமிராவை உடனே இயக்கினேன்!"

என் மருமகள் ஒருநாள், "சஞ்சய் சுப்பிரமணியத்தின் கச்சேரிக்குப் போகிறோம். வாருங்கள்!" என்று கூப்பிட்டாள். அப்போது தான் முதன் முதலாக சஞ்சய்யின் குரலைக் கேட்டேன். அந்தப் பாணியும் எனக்குப் பிடித்திருந்தது. அப்புறம் பெங்களூரில் ஒரு ஆர்ட் காலரியில் சஞ்சய் க்ரியேடிவிடி பற்றிப் பேசினார். பாடியும் காண்பித்தார். அப்போது படம் எடுத்தேன்.

செம்மங்குடியைப் படம் எடுக்கப் போன போது எனக்கு அதிக நேரம் இருக்க வில்லை. அவர் அப்போதுதான் பூஜையை முடித்துவிட்டு, தியானம் செய்ய ஈஸிசேரில் வந்து உட்கார்ந்து கொண்டார். அந்தத் தருணம், அவர் அமர்ந்திருந்த விதம், அந்த வெளிச்சம் எல்லாம் சேர்ந்து ஒரு திருப்தியான புகைப்படமாக உருவாயிற்று.

- சாருகேசி



• சஞ்சய் சுப்ரமணியன்

# அருள்வாக்கு



முதலில் தேவதா உபாஸனை வேண்டத்தான் வேண்டும். ஆனாலும், உபாஸிக்கப்படும் தேவதையும் உபாஸகனான தானும் வேறில்லை என்று ஆகிறதற்கு ஆரம்ப ஸாதனமாகவே உபாஸிக்கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். முதலில் வித்யாஸங்கள் பார்க்கத்தான் வேண்டும். லோக வியாபாரம் ஒழுங்காக நடக்க வேண்டுமானால், நமக்குள் காரியங்களைப் பல தினுசாகப் பிரித்துக் கொண்டு, அந்தந்தக் காரியத்தையும் சுத்தமாகப் பண்ணுவதற்கு என்ன தனிப்பட்ட ஆசார அநுஷ்டானாதிகள் உதவி செய்யுமோ, அப்படிப் பிரித்துதான் அவரவருக்கான தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனாலும் இதுவும், கடைசியில் ஸகல வித்யாஸமும் போய், எல்லாமும் எல்லாரும் "தானே" என்று தெரிந்து கொள்வதற்குத் தான் என்ற அடிப்படை உணர்ச்சி இருக்க வேண்டும். வேத அத்யயனம், வேத கர்மாநுஷ்டானம் எல்லாம், அந்த வேதமே அவசியமில்லாமல் போய் விடுகிற அகண்டமான மஹா அநுபவத்துக்கு வழிதான் என்று வைத்துக் கொண்டு, அவற்றை அப்பியாஸம் பண்ண வேண்டும். புஷ்பம் இருந்தால்தான் பிறகு பழம் உண்டாகும். புஷ்பம் பார்க்க ரொம்ப அழகாக இருந்தாலும், அது காய்ந்து போய் விழுந்தால்தான் பழம் உண்டாகும். பூவே இல்லாமல் காய்க்க வேண்டும் என்று நினைத்தால் ஆகுமா? இந்த நாளில், வைதிகாநுஷ்டானமே இல்லாமல் வேதாந்தத்துக்குப் போகிறவர்கள் நினைத்தால், அது யதார்த்தத்துக்குச் சரியாக வராது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சில வருடங்கள் முன் நடுத்தர வர்க்கத்தினரைப் பிரதானமாக வைத்து, கல்கியில் சுஜாதா எழுதிய மத்யமர்– தொடர் சிறுகதைகள் அத்தனை சீக்கிரம் மறந்துவிடக் கூடியவை அல்ல... உலகம் தான் எத்தனை வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது? மாறாத ஒரே விஷயம்– மத்யமர்களும் அவர்களின் பிரச்னைகளும்தான். ஆழ்ந்த நோக்குடன் மீண்டும் சுஜாதா தொடங்கும்

## மீண்டும் மத்யமர் கதைகள்

# இசை

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கலிபோர்னியா என்னும் மாநிலத்தில், சாண்டா கிளாரா என்கிற இடத்தில் வசதிகள் நிறைந்த ஓர் அப்பார்ட்மெண்ட் வீட்டில் இருந்த சுமித்ராவுக்கு நவம்பர் மாத இறுதியில் சென்னை மைலாப்பூரிலிருந்து ஒரு கடிதம் வந்து உவகை தந்தது.

– அன்புள்ள திருமதி சுமித்ரா ரஞ்சன். சென்னை ஏசிஎம் (அகாடமி ஆஃப் கர்னாட்டிக் ம்யூசிஷியன்ஸ்) சார்பில் 1996 இசை விழாவில் பாட உங்களை அழைப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். இந்த வாய்ப்பு அரிதானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். டிசம்பர் 24ம் தேதி தங்கள் கச்சேரிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்களைக் கடிதம், ஃபாக்ஸ் அல்லது போன் மூலமாக மேற்குறித்த விலாசத்தில் பெறலாம். உங்கள் சம்மதத்தை ஊர்ஜிதப்படுத்தவும். ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இப்படிக்கு உங்கள் உண்மையுள்ள சாகேதராமன், காரியதரிசி.

கடிதம் கண்டதும் சுமித்ராவுக்குப் படபடப்பாக இருந்தது. ஒரு ஸ்ப்ரைட் எடுத்துக் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு சான் ஹோசேயில் லேசர்–டெக் நிறுவனத்தில் கணவனுக்கு போன் செய்தாள். கம்பெனியின் வாய்ஸ் மெய்ல் தான் பதில் சொன்னது. "ஹாய்! நீங்கள் ரஞ்சனின் மேசையை அடைந்திருக்கிறீர்கள். நான் தற்போது சீட்டில் இல்லை. பீப் ஒலி கேட்டவுடன் உங்கள் செய்தியை விட்டு வைக்கவும்" என்று பேசி விட்டு இயந்திரம் பீப்பியது.

"ரஞ்சன் யு ராஸ்கல், நீ சீட்டில் இருப்பது எனக்குத் தெரியும்! கமான் பிக் இட் அப்" என்றாள்.

கொஞ்ச நேரத்தில் ரஞ்சன் போனில் வந்து "ஹூ இஸ் இட்?" என்றான்.

"சுமித்ரா-உன் மனைவி. ஞாபகம் இருக்கிறதா?"

"சுமி, ஆபீசில் தொந்தரவு செய்யும்படியாக என்ன தலை போகிற விஷயம்?"

"ரஞ்சி பாபா க்ரேட் ந்யூஸ்! எனக்கு ஏஸிஎம் லருந்து அழைப்பு வந்திருக்கு! டிசம்பர் 24ம் தேதி கச்சேரி."

"லுக் சுமி, நான் ஒரு மீட்டிங்ல இருக்கேன். கம்பெனில பெரிய காஷ் க்ரஞ்ச். சுருக்கமா சொல்லு. வாட் இஸ் திஸ் ஏஸிஎம்? எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு ஏஸிஎம், அஸோசியேஷன் ஆஃப் கம்ப்யூட்டிங் மெஷினரி."

"ஏஸிஎம் என்கிறது சென்னைலயே மிக பெருமைக்குரிய கர்நாடக சங்கீத நிறுவனம்."

"ஓ வாய்ப்பாட்டு. மௌத் சாங்! சொல்லு."

"உன் பாமர மண்டைக்குப் புரியும் படியா சொன்னா நான் டிசம்பர் 24ம் தேதி மெட்ராஸ்ல இருக்கணும்."

"இருந்துக்க, முதல்ல ஏர்லைன்ஸ்க்கு போன் பண்ணி ரிசர்வேஷன் இருக்கா பாரு."

"இருந்தாகணும்!"

"இல்லைன்னா எப்படிப் போக முடியும்? நடந்தா?"

"நாட் ஃபன்னி. எப்படியோ நான் போயாகணும்."

"சாயங்காலம் பேசலாமே? பப்லுவை இன்னிக்கு ஸ்கூல்லருந்து நீதான் பிக் அப் பண்ணிக்கணும். அவளுக்கு ஸ்விம்மிங் க்ளாஸ்

இருக்கு. முதல்ல டிக்கெட் இருக்கா பாரு."

"உனக்கு சந்தோஷமா இல்லையா."

"சந்தோஷம்! ரொம்ப சந்தோஷம்! ஹா ஹா ஹா."

"குரல்ல தெரியலையே."

"என்ன பண்ணணும்? மேஜைமேல ஏறிக் குதிக்கணுமா? கமி யு ஆர் வேஸ்டிங் மை டைம். தேர் இஸ் எ கான்ஃபரன்ஸ் கால் வெய்ட்டிங்."

சுமித்ரா போனை வைத்து, ட்ராவல் ஏஜெண்டை ஒத்தினாள்.

# ஹஜா

"வெரி சாரி மிஸஸ் சுமித்ரா. இந்தியா செல்லும் டெல்ட்டா, யுனைட்டட், ஏர் இண்டியா, லுப்தான்சா எல்லா ஃப்ளைட்டுகளும் புக் ஆகிவிட்டன. ப்ரிட்டிஷ் ஏர்வேசில வெய்ட் லிஸ்ட் 52 போடவா?"

"எப்படியோ சாப என்னை இந்தியா அனுப்ப வேண்டியது உன் பொறுப்பு. நான் போய்த் தான் ஆக வேண்டும்."

"கல்யாணமா?"

"இல்லை! என்னை ஒரு மிகப் பெருமை வாய்ந்த சபையில் அழைத்திருக்கிறார்கள். பாடப் போகிறேன்."

"கூல்... என்னால் முடிந்ததைப் பார்க்கிறேன்."

"அப்படிச் சொல்லாதே! என்னை அனுப்பியே ஆக வேண்டும். இல்லையெனில் உன் ஆபீசுக்கு வந்து உட்கார்ந்து ஸ்ட்ரைக் பண்ணுவேன்."

"யு ஆர் வெல்கம்."

ராத்திரி ரஞ்சன் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த உடன் சாப்பிட்டுவிட்டு, என்பிசி நியூஸ் பார்த்து விட்டு கம்ப்யூட்டரில் உட்கார்ந்துவிட்டான். காலைக்குள் ஒரு ஸ்ப்ரெட்ஷீட் தயாரித்தே ஆக வேண்டும்.

கண் முன்னால் கடிதத்தைத் திணித்தாள்.

"என்ன விஷயம்? சொல்லு கண்ணு" என்று அவளை வாசனை பார்த்தான்.

"அழைப்பு. ஏசிஎம்லிருந்து... யு நோ? ஏசிஎம்.ங்கறது மெட்ராஸ்லயே- இந்தியாவிலேயே..."

"டிக்கெட் என்ன ஆச்சு?"

"எந்த ஏர்லைனிலும் டிக்கெட் இல்லை. இடம் இல்லை."

"பின் எப்படிப் போவாய்? ப்ராப்ளம் சால்வ்டு."

"நான் போயாகணும்."

"எப்படி?"



"எப்படியோ."

"நானே ஒரு ஏர்லைன் ஆரம்பிச்சாத்தான் உண்டு. அப்படி கிடைச்சாலும் பப்லு? அவளை தனியா விட்டுட்டுப் போவியா?"

"அம்மாவை வரச் சொல்லேன்."

"கனடாவிலிருந்தா? டிக்கெட் நானூறு டாலர் ஆகும்!"

"அவள் சந்தியாவுக்குப் பிரசவம் பார்க்க வந்திருக்கிறாள்."

"அதுக்கு இன்னும் டயம் இருக்கே? ஜனவரிலதானே உங்க தங்கைக்கு ட்யூ?"

"இருந்தாலும் சந்தியா தனியா இருக்க பயப்படுவா."

"என்ன பயம். நான் பப்லுவை பெத்துக் கறப்ப யார் வந்தா?"

"பப்லுவைப் பத்தி அப்புறம் கவலைப் படலாம். அது நீ இல்லாமயே பிறந்திருக்கும். தனியா சமாளிக்கும்! எனக்கு காப்பி கூடப் போட்டுக் கொடுக்கும். பாரு, முதல்ல டிக்கெட் கெடைக்கட்டும். சாம் என்ன சொன்னான்?"

"எல்லாம் புக் ஆயிருக்கு... ஆனா கிடைச் சுரும்னான்."

"பின்ன என்னை ஏன் உரசறே. டிக்கெட் கிடைக்கட்டும்; அதுக்கப்புறம் யோசிக்கலாம்."

**கா**லை சாம் போன் பண்ணி, "சுமித்ரா ஒரே ஒரு க்ளப் க்ளாஸ் சீட் இருக்கிறது. டிசம்பர் 21ம் தேதி. உடனே ப்ளாக் செய்து வைத்தால்தான் உண்டு. இல்லை அதுவும் போய்விடும்."

"விலை என்ன ஆகும்?"

"இக்கனாமி க்ளாசைப் போல ஒண்ணரை மடங்கு. எதற்கும் ரஞ்சனை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு புக் பண்ணட்டுமா?"

"இல்லை சாம்! நான் ரஞ்சனிடம் பேசிக் கொள்கிறேன். அதை மடக்கிப் போட்டுவிடு."

"அப்ப க்ரெடிட் கார்டு நம்பர் சொல்லு."

**ர**ஞ்சனுக்கு போன் செய்தபோது, அவன் கொதித்தான். "நோ வே! அம்மாவுக்கு டிக்கெட் ஐநூறு டாலர். உனக்கு ஆயிரத்தைநூறு. இரண்டாயிரம் டாலர். நம்மால்...."

"அம்மா வர வேண்டாம்! பப்லுவை நீயே சமாளிப்பியே."

"இருந்தாலும்... இரண்டாயிரம் டாலர்ங் கறது பிக் சம்..."

"கதை!.... ஃப்ளாரிடாவுக்குப் போய் கால்ஃப் ஆட எத்தனை டாலர் ஆச்சு?"

"மைகாட்! ஆறு வருஷத்துக்கு முன்னால் நான் வாழ்வில் செய்த ஒரே ஒரு தண்ட செலவும்மா. அதைச் சொல்லிச் சொல்லிக் காட்டாதே."

"பேட்டண்ட் லெதர்ல பை வாங்கினியே அது எதோட சேர்த்தி?"

"அய்யோம்மா, ஆளைவிடு. இப்ப போயே ஆகணுமா? அடுத்த வருஷம் கொஞ்சம் நிதானமா ப்ளான் பண்ணி ஜூலை மாதமே டிக்கெட் புக் பண்ணிட்டு, ரெண்டு பேரும் போகலாமே?"

"அடுத்த வருஷமும் போகலாம்! இனிமே ஒவ்வொரு வருஷமும் கூப்பிடுவா."

"அப்ப சொல்றதைக்கேளு. இந்த வருஷம் வேண்டாம்! ரொம்ப செலவு."

"அப்ப ஏசிஎம்ல இவங்க அழைப்பு கொடுத்திருக்காங்களே, என்ன சொல்றது?"

"டியர் சார், சாரி, என்னால் இந்த வருஷம் முடியாது. அடுத்த வருஷம் நிச்சயமா வந்து கலந்துக்கறேன்னு எழுதிரு."

"இந்த வருஷம் வரலைன்னா அடுத்த வருஷம் கூப்பிட மாட்டாங்க."

"ஸோ வாட்? ஏசிஎம் இல்லைன்னா பிசிஎம். யாராவது குடுமி இருப்பானே? ஸோ வாட்!"

"ஸோ வாட்! ரெண்டு வார்த்தையில என் வாழ்க்கைல மிகப் பெரிய ஆசையையே நசுக்கறே ரஞ்சன்!"

"சுமி கேளு, என் காரியர் இருக்கற இந்த நிலையில் நம்மால் இதை அஃபோர்ட் பண்ண முடியுமா சுமித்ரா?"

**அ**ன்றிரவு வீட்டுக்கு வந்த போது பப்லு "டாட், ஒய் இஸ் ஷி ஸோ க்ராங்கி டுடே?" என்று கேட்டான். அவள் கண்களில் கண்ணீர் தெரிந்தது.

"என்ன செஞ்சா உங்கம்மா?"

பத்மினியிடம் தமிழில்தான் பேசுவான். அவனுக்குத் தமிழ் புரியும். பேச வராது.

"ஷி கேவ்மி எ க்ரம்மி டோஸ்ட் அன் பீனட் பட்டர் ஃபார் ஸப்பர். தட் இஸ் மீன். கோபம் அவன் உதடுகளில் துடித்தது.

"சுமித்ரா எம்மேல கோபம்னா ஏன் குழந்தைகிட்ட காட்டறே. "

"அவ குழந்தை இல்லை. இப்பவே பாய் ஃப்ரெண்டு தடியன் தடியனா வரான்."

"மம்மி ஸ்டாப் இட்!"

"என்னை அதட்டு. எனக்கு யார் மேலயும் கோபிக்க உரிமை இருக்கா என்ன? உங்க ரெண்டு பேருக்கும் சமைச்சு போடறதுதான்

● மாம்பழத்தை உண்ணும் பொழுது பலாப்பழத்தை நினைத்துக் கொண் டிருப்பவன் இரண்டின் சுவையையும் இழந்து விடுகிறான்.

—குணாபார்த்திபன்

வாழ்க்கையா?"

"டாட் லெக் ஹர் கோ டாட். ஷி வில் ஸல்க் ஃபர் த்ரீ மன்த்ஸ்."

"எப்படி தூக்கி எறிஞ்சு பேசறா பாரு. இப்படி செல்லம் கொடுத்து வச்சிருக்கே. ஒண்ணுலயும் இண்ட்ரஸ்ட் இல்லை. பரத நாட்டியம், பாட்டு... இருபத்து நாலு மணி நேரமும் பாப் மியூசிக் சானல் தான்!"

"தட்ஸ் நாட் ட்ரூ."

"கமான், ஸ்வீட் ஹார்ட். ஐல் கெட்யு என் ஐஸ்க்ரீம்."

"நீ வரலையா சுமி."

"நான் துணி தோய்க்க வேண்டாமா? அயர்ன் பண்ண வேண்டாமா? எத்தனை.."

"இப்ப என்ன? இண்டியாவுக்குப் போகணும்; அவ்வளவுதானே?

"எல்லாம் அடுத்த வருஷம் போகலாம். ஒண்ணும் அவசரமில்லை. நான் கச்சேரி பண்ணாட்டா என்ன தட்ட கெட்டுப் போறது?"

"தட்ஸ் தி ஸ்பிரிட்" என்று அவளைத் தோளைத் தொட்டு திருப்ப...

"தொடாதிங்கோ" என்று நெருப்பாய்ப் பொறிந்தாள் அவள். கன்னங்களில் நீர் கோடிட்டிருந்தது.

மாலில் ஐஸ்க்ரீம் பார்லரில் ஒரு சாக்லேட் சண்டேயும் தனக்கு ஸ்விட் அண் லோ போட்ட வானில்லாவும் வாங்கிக் கொண்டு வட்ட மேசையில் உட்கார்ந்தார்கள்.

"டாட்! லெட் ஹர் கோ! ஷி ஹஸ் பீன் ப்ராக்டிஸிங் தி ஹோல் இயர்!"

"நீயும் போய்ட்டு வாயேன்."

"மீ? டு இண்டியா? ஆர்யு ஜோக்கிங்? நோ வே!"

"ஹாய் பாப்ஸ்" என்று ஒரு இளைஞன் ஒரு காதில் கடுக்கனும் தொப்பிகிராப்பும் கையில் பச்சை குத்தி, முழங்கால் கிழிந்த பாண்ட்டுமாக அவளருகில் வந்து உட்கார்ந்து, கன்னத்தில் முத்தமிட்டான். "யு .ஆர் டேக்கிங் ஐஸ்க்ரீம்?" என்றான் ஆச்சரியத்துடன். ஐஸ்க்ரீம் சாப்பிடுவது, மஹா பாவம் போல.

பத்மினி சங்கடத்துடன் "டாட், திஸ் இஸ் ப்ரையன்; ப்ரையன் திஸ் இஸ் மை டாட்."

"கூல்!"

"இவன் எப்பவுமே முத்தம் கொடுப்பானா கண்ணு? எனக்கு ஏன் கொடுக்கலை?"

"டேக் இட் ஈஸி டாட்."

இரவு மனைவியை எழுப்பி, முத்தமிட்டு சமாதானம் செய்ய முற்பட்டான். முரட்டுத் தனமாகத் தள்ளினாள்.

பக்கவாட்டில் படுத்துக்கொண்டு மௌனமாக அழுதாள். கொஞ்ச நேரம் கழித்து அவன் பேசினான்:

"ஆல்ரைட் சுமி! நான் உன் கோணத்தி லிருந்து இதை யோசித்துப் பார்க்காத மடையன். உனக்கு இது பெரிய வாய்ப்பு. அவ்வளவு பெரிய சபையில் போய், அவ்வளவு பேர் நம்ம மனுஷா முன்னால பாட வாய்ப்புன்னா அது, அது நனவான கனவுதான். எல்லாருக்கும் வராது! நீ இங்க அமெரிக்கா வந்து என்னையும் குடும்பத்தையும் பார்த்துண்டு, உன்னுடைய ஆசைகளையெல்லாம் தியாகம் பண்ணிட்டு அல்லது ஒத்திப் போட்டுட்டு பொண்ணை ஸ்கூல்ல கொண்டு விட்டு எனக்கு சமைச்சு போட்டு டிஷ், வாஷிங், லாண்டரின்னு உழல்ற வாழ்க்கையிலருந்து உனக்கு ஒரு தற்காலிக விடுதலை மாதிரி. உனக்கும் ஊருக்குப் போய் உங்க மனுஷாளை நாலு பேரை பார்த்துட்டு நல்ல தமிழ்ல பேசி நிறைய கச்சேரி கேட்டு, ஒரு வருஷத்துக்கு தாங்கும்படியா பாட்டரியை சார்ஜ் பண்ணிண்டு வர சந்தர்ப்பம். இதை நான் புரிஞ்சிக்காம கேவலம் ரெண்டாயிரம் டாலர் பெரிசா போயிட்டுது எனக்கு. உனக்கு கிடைக்கப் போகும் சந்தோஷம் தான் எவ்வளவு பெரிசு!" என்றான். சுமித்ரா மௌனமாகத் திரும்பி அவனை இறுக்க அணைத்துக் கொண்டு "என் நகையை வித்தாவது..."

"போடி பைத்தியம்! உன் நகையை வித்தா உங்கப்பா கழுத்துருவார்."

ராத்திரி இரண்டு மணிக்கு ப்ரிட்டிஷ் ஏர்வேஸ் ப்ளேன் சென்னைக்கு வந்தது. நீண்ட வரிசையில் நின்று கஸ்டம்ஸ் இமிக்ரேஷன் எல்லாம் முடிந்து வெளிவர மூன்று மணியாகி விட்டது. அவள் தம்பி ஏர்போர்ட் வந்திருந்தான்.

"ஏசிஎம் ப்ரொக்ராம் ஹிந்துல போட்டிருந்தானே? உன் பேரையே காணமே சுமி?"



"என்ன அந்த ஆளு வீட்டுக்கு வெளியில நின்னுக்கிட்டு காசு வாங்கிக் கிட்டு எல்லாத்தையும் உள்ளே போக விடறாரு...?"

"மாமியார் மருமகள் சண்டை நடக்குதாம்!"

– பொன். குமார்

திபெத்தியரின் ஒரு வருடத்திய பன்னிரெண்டு மாதங்களின் பெயர்கள் என்ன தெரியுமா? தாவா டாம்பா, தாவா நிப்பா, தாவா ஷும்பா, தாவா சிப்பா, தாவா நாபா, தாவா டுப்பா, தாவா டிங்பா, தாவா கேபா, தாவா கூபா, தாவா சூபா, தாவா சுக்கிபா, தாவா சுனிப்பா.

- வயலூர் ஆர். பார்த்திபன்

---

"லெட்டர் எழுதிருக்கா மூர்த்தி."

"காலைல விசாரிச்சுரலாம். நான் சரியா பார்க்கலை. ஒவ்வொரு சபாவிலயும் நூறு கச்சேரி நடக்கறது இந்த சீஸன்ல. பக்க வாத்தியக்காராளை ஏற்பாடு பண்ணணுமா?"

"ஆமாம் மூர்த்தி."

"அவாளையே கேட்டுப் பார்க்கலாம். நீ மட்டும் தான் வந்தியா? அத்திம்பேர், குழந்தை வரலையா?"

"அவருக்கு ஆபீஸ்ல நெக்குவாங்கறது. புது வேலையா? எம் பொண்ணு இந்தியாவே வரமாட்டா. இங்க வந்த உடனே டயரியா வந்துரும்."

"பத்மினி உசந்துட்டான்னு கேள்விப்பட்டேன்."

"அதான் ப்ராப்ளம்! இப்பவே பதினெட்டு வயசு மாதிரி இருக்கா."

"வயசுக்கு வந்துட்டாளா?"

"அமெரிக்காவில அதெல்லாம் சீக்கிரமாவே ஆய்டும்."

"ஃபேட்ல என்னவோ இருக்கு."

"ஏசிஎம் சான்ஸ்னா பெரிய விஷயம் இல்லையா மூர்த்தி?"

"ஆமாமா" என்றான் மூர்த்தி. "புதுசு புதுசா ரொம்ப பேர் பாடறா. மைலாப்பூர் மாமி எல்லாம் சபாவுக்கு சபா அலையறா. தப்பு தப்பா தாளம் போட்டுண்டு."

ஆழ்வார்பேட்டையில் டிடிகே ரோடிலிருந்து விலகின தெருவில் இருந்தது ஹால். இசைவிழா என்று பெரிசாகத் திரை. காற்றில் ஆடியது. சமீபத்திய மழையால் ரோடு பொளிந்து வைத்திருந்தது. க்ரானைட் வேய்ந்த நவீன கட்டடத்தருகே ஒரு தெருப்பிள்ளை வெளிக்கிருந்து கொண்டிருந்தது. பரீட்சை ரிசல்ட் போலப் பாடும் வித்வான்களின் பட்டியல் எழுதியிருந்தது. காண்டீனில் பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ருத்ரபட்ணம் பிரதர்ஸ்னு ரொம்ப நன்னா பாடறா" என்று மாமி, மாமியிடம் பேசிக் கொண்டே வெளியே வந்த இருவரிடமும் ஒரே மாதிரி கைப்பை. சாகேதராமன் வருவதற்காக அந்த சிறிய அறையில் ஃபைபர் நாற்காலியில் காத்துக் கொண்டிருந்தார்கள், சுமித்ராவும் அவள் சகோதரனும். மேசை நிறைய காஸெட் அடுக்கியிருந்தது.

'எப்படி மிஸ் ஆகும்? சாகேதராமன் வந்ததும் கண்ணாடியணிந்து கொண்டு ஃபைலைப் பார்த்து. "அ! இப்ப புரியறது! உங்ககிட்டருந்து கன்பர்மேஷனே வரலை. அதனால் அந்த ஸ்லாட்ல கிருஷ்ண ப்ரேமிக்கு குடுத்துட்டம். சேஷகோபாலன் சிஷ்யன்."

"என்ன சார், அமெரிக்காவிலிருந்து அடிச்சு புடைச்சுண்டு வந்திருக்கா என் சிஸ்டர்."

"ஏம்மா! ஒரு சின்ன கார்ட்டசிக்காக ஒரு பதில் போடக் கூடாதோ?"

சுமித்ரா, "சார் ஐம் வெரி ஸாரி. நான் டிக்கெட் புக் பண்ற அவசரத்தில கன்பர்மேஷன் லெட்டர் அனுப்ப மறந்துட்டேன்."

"இப்ப வேற அரேஞ்மெண்ட் பண்ணிட்டமே."

"ப்ளீஸ் சார், பத்தாயிரம் மைல் வந்திருக்கேன்."

சுமித்ராவின் கண்களில் நீர் தயாரானது.

"கொஞ்சம் இருங்கோ! ப்ரெசிடெண்ட்டை கேட்டுர்றேன்."

அவர் தடுப்புக்கு அந்தப் பக்கம் போய் போனை எடுத்து தாழ்ந்த குரலில் பேசினது கேட்டது.

"அந்தம்மா அமெரிக்காலருந்து வந்தாச்சு! இப்ப அதே ஸ்லாட் வேணும்னு வொள்ளு பண்றாங்க."

"வாட்ஸ் வொள்ளு?" என்றாள் சுமித்ரா.

"கிருஷ்ணப்ரேமி களுக்கு எடுத்துருவார் கான்சல் பண்ணா."

சுமித்ரா அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்திருந்த டவ் க்ரீம், ஹெட் அண் ஷோல்டர் ஷாம்பு, பர்ஃப்யும் போன்றவற்றை மேசை மேல் எடுத்து வைத்தாள்.

சாகேதராமன் வந்ததும், "காம்ப்ளிமெண்ட்ஸ் ஃப்ரம் அமெரிக்கா" என்றாள்.

"இருக்கட்டும். அதெல்லாம் இண்டியாலயே கிடைக்கறது மிஸஸ் ராகவன்."

"ரஞ்சன்... என்பேர் சுமித்ரா ரஞ்சன்!"

"ஸாரி. ரஞ்சன். நீங்க அனெக்ஸ் பாடறீங்களா?"

"அனெக்ஸ்னா?"

"அதும் பெரிய ஹால்தான்!"

"எப்ப?"

"டயம், டேட் அதேதான். நல்ல ஆடியன்ஸ். கனாய்சியர்ஸ்தான் வருவா. தேர்ந்த ரசிகாள்."

"சரி ஸார்! தாங்ஸ். உங்களுக்கு ரொம்ப

சிரமம் கொடுத்துட்டேன்."

"யு ஆர் வெல்கம். பத்தரைக்கு வந்துருங்கோ. பக்கவாத்தியம் யாராரு?"

"நீங்கதான் ஏற்பாடு பண்ணணும்."

"அது வேறயா. சரி நம்ம வைதேகி, "ரவிஷங்கர் ரெண்டு பேரையும் ஏற்பாடு பண்றேன். ஸார் தம்புரா மீட்டுவாரோல் லியோ? அவங்களுக்கு ஆளுக்கு ஒரு அண்டரட் அண்ட்ரட் கொடுத்துருங்க இஃப்யு டோண்ட் மைண்ட். கடைசி நிமிஷ ஏற்பாடு பாருங்க."

"இல்லை ஸார்! ஐ ரியலி அப்ரிஷியேட் யுர் எஃபர்ட்" என்றாள் சுமி. "நான் கன்பர்ம் பண்ணிருக்கணும்" என்று அவர் கையைக் குலுக்கினாள். அவர் சற்றே ஆச்சரியப்பட்டார்.

"அடுத்த வருஷம் நல்ல ப்ளான் பண்ணி மெய்ன் ஹால்லயே வச்சுக்கலாம்" என்று பரிசுப் பொருள்களை டிராயரில் செலுத்தினார்.

ஜெட் லாக் விளைவால் அகாலமாக கண்ணைச் சுழற்றியது. சிரமப்பட்டு தூக்கத்தை தள்ளிப் போட்டுவிட்டு குருஜியின் காஸட்டுகளை அத்தனையும் போட்டு உடன்பாடினாள். சிட்டை சுவரங்களை மீண்டும் மீண்டும் பழகிக் கொண்டாள். "நன்னாத்தான் பாடறே" என்றான் மூர்த்தி. "அமெரிக்கால போய் எல்லாம் வேஸ்ட்"

என்ன வரிசையில் என்ன என்ன பாடுவது என்று காகிதத்தில் எழுதிக் கொண்டாள். ரஞ்சனுக்கு ஒருமுறை போன் செய்தாள். அங்கே ராத்திரியாக இருக்கும். ரஞ்சன் ஆபிஸிலிருந்து வந்திருக்க வேண்டும்.

"அலாவ்" என்று ஆண்குரல் கேட்டது.

"இம் சுமித்ரா. ஹூ இஸ்திஸ்?"

"ப்ரையன்."

"ப்ரையன், கால் பப்லு."

"பாப்ஸ் யுர்மாம்!"

"ஹாய் மாம்மி."

"பப்லு அந்த ப்ரையன் அங்க என்ன பண்றான்?"

"டுவின் பாட்டனி ஹோம்ஒர்க் மம்மி."

"அப்பாவைக் கூப்பிடு."

"ஹி இஸ் நாட் ஹோம் யெட்."

"அப்பா இல்லை. நீ அந்தப் பையனோட தனியா இருக்கியா? அப்பாவுக்குத் தெரியுமா?"

"கூல் இட் மாம்! டோண்ட் ஒர்ரி மாம். யுர் கான்ஸர்ட்- ஹௌ டிட் இட் கோ?"

"நாளைக்குத்தான் கான்ஸர்ட். முதல்ல அந்தப் பையனை வீட்டுக்குப் போகச் சொல்லு."

"டோ' ஒர்ரி மாம்!"

"அப்பா வந்த உடனே என்ன டயமா இருந்தாலும் போன் பண்ணச் சொல்லு."

"பை மாம். ஐ லவ் யு! ஸே ஹலோ டு பட்மா பாட்டி."

வியாழக்கிழமை பத்து மணிக்கே போய் விட்டாள் பக்கவாத்தியக்காரர்கள் ஐந்து நிமிஷம் முன்னால்தான் வந்தார்கள். சரியா ஒன்னரை மணில கச்சேரி முடிச்சுரலாம். இந்த வர்ணத்தில கர ராகமாலிகா வரும். கொஞ்சம் சிக்கலா இருக்குமே."

"பாடிருவேன்."

ஸ்டேஜுக்கு வந்து உட்கார்ந்து சுருதி சேர்த்து, திரை திறக்குமுன் மனசில் வெங்கடாசலபதியை எண்ணிப் பார்க்கும் தியான வேளையில் ஒரு முள் உறுத்தியது. பப்லுவைப் பற்றிக் கவலை. கணவன் ஏன் போன் செய்ய வில்லை? திரை திறந்தபோது திடுக்கிட்டாள். ஹாலில் மொத்தம் மூர்த்தியையும் அம்மாவையும் சேர்த்து பதினைந்து பேர் இருந்தார்கள். அதில் ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

கச்சேரி முடிந்து வீட்டுக்குப் போகும் போது ஆட்டோ ரிக்ஷாவில் மூனு பேரும் நெருக்கமாக உட்கார்ந்து கொள்ள, மூர்த்தி கேட்டு விட்டான். "கேக்கறேன்னு கோவிச்சுக்காதே சுமி. என்ன சாதிக்கணும்னு இங்க வந்தே? இவ்வளவு பணம் காசு செலவழிச்சு. ஒரு லட்சம் ஆயிருக்குமா? பத்தாயிரம் மைல் கடந்து ஒரு மத்யான வேளையில் பத்து பேருக்கு வருணாபரணம், தோடின்னு பாடிக் காட்றதில என்ன சாதிக்கறே சுமி? எனக்குத் தெரியலை."

"எனக்கும் தெரியலை மூர்த்தி."

"அடுத்த வருஷம் வருவியா?"

"வருவேன்." என்றாள்.

---

**● காக்கையின் பிடியிலிருந்து**
**நழுவிய கோழிக்குஞ்சு**
**கிணற்றில்!**

**● கூடவே வந்தன**
**பூக்கள்**
**தோட்டக்காரனின் இறுதி ஊர்வலம்!**


**● மீன்களெல்லாம் சேர்ந்து**
**கடித்ததில் மிச்சமோ...**
**குளத்தில் பிறைநிலா.**

**- ஜெயந்திகுமார்**

காலேஜ் ஸ்டார் - புதிய பகுதி

# மேனகா காந்தியின் மாணவப் பதிப்பு!

• கல்லூரி முதல்வருடன்



ஜெமினி அருகே எம்.ஓ.பி. மகளிர் வைஷ்ணவக் கல்லூரி வாசலில் போய் 'வனஜா' என்ற பெயரைச் சொன்னால் வினாடிகளில் அந்தப் பெயர் வேகமாக ஒலிபரப்பாகி நிமிடத்தில் வனஜா வந்து நம் முன் நிற்பார். சக மாணவிகளிடையே வனஜா அவ்வளவு பாப்புலர்.

கல்லூரி மாணவியர் பேரவையின் தலைவியும் கூட.

முதல் வருட மாணவியாகச் சேர்ந்ததிலிருந்தே திறமையுள்ள மாணவிகளை சீனியர்களும், ஆசிரியைகள் குழுவில் சிலரும் தீவிரமாகக் கண்காணிப்பார்கள். பிறகு அந்த மாணவிகளில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை மற்ற மாணவிகள் முன்பாக நிற்கவைத்து பேசச் சொல்வார்கள். அதில் வடிகட்டி இறுதியில் இரண்டு மூன்று பேரை மீண்டும் பேச வைத்து அவர்களில் யாரை மற்ற மாணவிகள் அங்கீகரிக்கிறார்களோ அவரே கல்லூரிப் பேரவையின் தலைவர். இப்படி ஒரு வித்தியாசமான 'தேர்தல் முறை' எம்.ஓ.பி. கல்லூரியில். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தான் வனஜா. (எம்.ஓ.பி = எம். ஓ. பார்த்தசாரதி).

பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயன்ஸ் இறுதியாண்டு படிக்கிறார், வனஜா. ஆர்வம் இல்லாத கலை இல்லை. கபடி தவிர மற்ற அனைத்து விளையாட்டுகளிலும் நாட்டம். பேச்சு, எழுத்து, நாடகம் என்றால் போட்டியாளர்களில் முன் வரிசை. வாங்கித் தந்த கோப்பைகள் கல்லூரிக்குப் பெருமை.

முதல்வர் டாக்டர். ஏ. திருவேங்கடத்தான் மகிழ்ந்து போகிறார். "வனஜா எல்லா பாராட்டுகளுக்கும் மிகவும் தகுதியானவள். வி ஆர் ப்ரவுட் ஆஃப் ஹர்."

செல்லப் பிராணிகள் மேல் கொள்ளை ஆசை. வனஜாவின் வீட்டில் இரண்டு நாய்கள். புறாக்களும் வளர்க்கிறார்.

"மிருக வதையை நான் தீவிரமாக எதிர்க்கிறேன். தாங்க முடியாத அளவுக்கு சுமையை வண்டியில் ஏற்றி நுரைதள்ளும் மாட்டை அடிக்கும் காட்சியை பார்க்கும்போது ரத்தம் கொதிக்கிறது..."

வனஜா இதுபற்றிப் பேசும்போது மேனகா காந்தியின்



• தோழிகள் நடுவில்...

மாணவப் பதிப்பாகத் தெரிகிறார்.

இன்டர் காலேஜ் நாடகப் போட்டியில் ஒருமுறை 'சண்டாளிகா' என்ற நாடகம் போட்டார் வனஜா.

"அதற்காகப் போடப்பட்ட பெரிய அரங்கத்தின் பகுதிகளை ஸ்கூட்டரில் எடுத்துப் போனேன். என் தோழி வண்டி ஓட்ட, அவள் பின்னால் அவள் முதுகும் என் முதுகும் கட்டியிருக்கும்படி திரும்பி அமர்ந்து கொண்டு கைகளில் 'அரங்க'த்தை ஏந்திக் கொண்டு ரோடில் போனேன். எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். நாடகப் போட்டியில் எங்கள் கல்சருக்குத்தான் முதல் பரிசு"



• வனஜா

பெண் சிசுக்கொலை பற்றிய தெருக்கூத்தும் வனஜா போட்டிருக்கிறார்.

**வ**னஜா எதைச் சொன்னாலும் உடனே நிறைவேற்ற மாணவிகள் தயாராக இருப்பது இவரின் பாப்புலாரிட்டிக்கு சாட்சி.

பாய்ஃபிரண்ட்?

"இந்த வார்த்தை எனக்குப் பிடிப்பதில்லை. என் ப்ரண்ட்ஸ்களில் பாய்ஸ் இருக்கலாம். கேர்ள்ஸ் இருக்கலாம். அப்படிச் சொல்வதுதான் சரி. நட்பாக இருப்பதில் ஆணென்ன பெண்ணென்ன? தப்பே இல்லை! தப்பு நட்பாக இருக்கக்கூடாது. அவ்வளவு தான்."

வனஜாவின் தீர்மானமான முடிவு :

"நான் காதல் திருமணம்தான் செய்து கொள்வேன். வரப்போகிறவர் இன்ட்டலக்சுவலாக இருக்க வேண்டும். மனஉறுதி படைத்தவராக இருப்பது அவசியம். முக்கியமாக அவர் உயரமாக இருக்க வேண்டும். நான் எப்போதுமே உயரத்தை நேசிக்கிறவள்."

- ராணிமைந்தன்

படங்கள் : யோகா

# குறையொன்றுமில்லை

ராம : என்றால், எல்லோரையும் ரமிக்கப் பண்ணுகிறவன் என்று பொருள். யோகிகளின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகிறவன் ஸ்ரீராமன்!

குழந்தை ராமன் பிறந்து தொட்டிலில் படுத்திருக்கும் போது, வசிஷ்டர் கிட்டே போனார் – குழந்தையைப் பார்ப்பதற்கு... அந்தக் குழந்தையைப் பார்த்தபோது வசிஷ்டருடைய ஹ்ருதயத்தையே அது கொள்ளை கொண்டுவிட்டது!

'இந்த மாதிரி குழந்தை ஒன்று நமக்கு இல்லையே...' என்று தோன்றிவிட்டதாம் முனிவருக்கு!

தோன்றிய கணத்திலேயே அந்த எண்ணத்தின் தவறும் அவருக்குப் புரிந்ததாம். 'நமக்கே இப்படி ஒரு எண்ணம் வரலாமா...? எவ்வளவு தப்பான எண்ணம்!'

உடனே தப்பு தன்னுடையதில்லை என்று உணர்ந்து விட்டார் அவர். 'இவன் இவ்வளவு அழகாய் இருக்கிறானே! அதனாலல்லவா நமக்கு அப்படியொரு எண்ணம் உண்டாயிற்று...' என்று பழியை அவன் மேலேயே போட்டு விட்டார்!

அகலிகை வெண்பா என்றொரு கிரந்தம் இருக்கிறது. அதில் என்ன சொல்லியிருக்கிறது பாருங்கள் :

நல்லார் உளத்தும், நல்லார் புல்லாதார் உளத்தும் பொல்லாங்கு புகுவது இயல்பே... நல்லார், புகுந்தவுடன் விட்டிடுவர்; அல்லாதார் மிகுந்துரைய விட்டிடுவர் வேட்டு...'

நல்லோருக்குக் கூட தீய எண்ணம் வருமாம்! ஆனால் அவர்கள் அதை உடனே விட்டு விடுவார்கள். தீயவர்களோ அந்த எண்ணத்தை மிகுந்துரைய விட்டு விடுவர்!

வசிஷ்டருக்கும் பொருந்தாத எண்ணம் ஒன்று தோன்றியது. ஆனால் உடனே அதைக் கைவிட்டார். ராமனுடைய சௌந்தர்யமே தன்னை அவ்வாறு பேச வைத்தது என்று உணர்ந்து கொண்டார்.

அலகிலா விளையாட்டுடையவன் பரமாத்மா! நம்மையெல்லாம் ஒரு பந்தாக வைத்துக் கொண்டு அவன் விளையாடுகிறான்! வசிஷ்டரோடும் விளையாடியிருக்கிறான்!

குழந்தையைப் பார்த்த வசிஷ்டர் ராம : என்கிற பரம மங்களமான பெயரை அதற்குச் சூட்டினார். எல்லா பலன்களையும் தரவல்லது அந்த நாமம்.

காச்யாந் மரண முக்தி : (காசியில் மரணமுற்றால் முக்தி நிலை அடையலாம்.) என்பார்கள். எதனால் முக்தி...? காசியில் உரையும்படியான விச்வேச்வரன், அங்கு மரிப்பவர்களின் செவியிலே ராம நாமாவைச் சொல்வதனாலே...!

'பரமமான, உயர்ந்த ப்ரும்ம ரூபமான ராம நாமாவை பஜிக்கிறேன் பஜிக்கிறேன்' என்று நான்கு தடவை ஆதி சங்கர பகவத்பாதாள் சொல்கிறார். இதனாலேயே அந்த நாமத்தின் ஏற்றம் நமக்குத் தெரிகிறது. நம்முடைய பிறப்பின் வித்தை அது பொசுக்கிவிடும். எல்லா சொத்துக்களையும் சம்பாதித்துக் கொடுக்கும். யம தூதர்களை விரட்டியடிக்கும். எப்போது விரட்டியடிக்கும்...?

'ராம ராமேதி' என்று கர்ஜனம் செய்யும் போது... அந்தச் சமயத்தில் யமதூதர்கள் கிட்டே வர முடியுமா!

யமன் யம தூதர்களைக் கூப்பிட்டு ரகசியமாகச் சொன்னானாம். "இந்த ராமநாமத்தைச் சொல்லக்கூடிய விஷ்ணு பக்தர்களிடத்திலே போகாதீர்கள். ஏனென்றால், நாமெல்லாம் அதைச் சொல்லாதவர்களுக்குத்தான் அதிகாரிகளேயொழிய அதைச் சொல்லக் கூடியவர்களுக்குக் கிங்கரர்கள்!"

இந்த விஷயத்தை யமன் ஏன் ரகசியமாய்க் காதிலே சொல்ல வேணும்? இதை உரக்கச் சொல்வது கூட அபசாரம் என்பதால்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி விஷ்ணுசித்தர் வியாக்யானம் பண்ணியிருக்கிறார். அவர் எழுதுகிறார் : 'ஒரு ராஜகுமாரத்தி – இளவரசி... "நான் இளவரசியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்..." என்று யாராவது உரக்கச் சொல்ல முடியுமா...? அந்த மாதிரிதான், விஷ்ணு பக்தாளிடம் போகாதே என்று சொல்வது கூட – உரக்கச் சொல்வது கூட அபசாரமாகும்...'

இதுதான் பகவான் நாமாவின் உயர்த்தி. 'ராம' என்ற இரண்டு எழுத்துக்கள் எல்லா நலனையும் உண்டாக்கக் கூடியது. எல்லோரையும் ஒய்யுரச் செய்யக்கூடியவன் பரமாத்மா. எல்லோரையும் அடக்கி ஆளக்கூடியவன். அவன்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஒருத்தன் இருந்துவிட்டால் எல்லோருமே அடங்கி விடுவார்கள். அதனால்தான் சுவாமி தேசிகன் அந்த பகவானை 'ஜெய ஜெய மஹா வீர!' என்று கொண்டாடினார்.

ஒருத்தர் வித்யாரண்ய சுவாமியிடம் போய் 'ருத்ர



இன்னொரு விசேஷத் திருநாமமும் ராமனுக்கு உண்டு.

தர்ம :


விஷ்ணும் தர்மம் சனாதனம்.

தர்மம் எது என்று பார்த்தோமானால், அதற்குப் பல பொருள் சொன்னார்கள். ஆனால் 'தர்மம்' என்கிற சமஸ்க்ருத சொல்லின் பொருளை அப்படியே அடக்கிய இன்னொரு சொல் அகப்படவில்லை. எந்த மொழியிலும் அகப்படவில்லை!

ஏனென்று கேட்டால், தர்மம் என்கிற சொல்லுக்கு 'பகவான்' என்று பொருள். தர்மம் என்கிற சொல்லுக்கு வேதம் என்று பொருள். தர்மம் என்கிற சொல்லுக்கு வேதோச் சாரணம் என்றும் பொருள். அவரவர் நிலைக்கு ஏற்ப சொல் பிரயோகமாகிறது.

அந்தணர்களின் தர்மம் எது என்று கேட்கிறோம். அப்படியென்றால் என்ன...? 'பிராமணர்களுடைய தெய்வம் எது?' என்று கேட்பதாகவா அர்த்தம்...? கிடையாது! பிராமண தர்மம் என்று ஆறு விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. வேதத்தைக் கசடற கற்க வேண்டும் என்பது ஒன்று. இது அவ்வளவு சுலபமான காரியமா...? கிட்டே நெருங்கி உட்கார்ந்து ஆசார்யர் சொல்லிக் கொடுக்கும்போது கஷ்டப்பட்டு கிரஹித்துக் கொள்ள வேண்டும். எத்தனையோ கடினமான விஷயங்கள் வேதத்திலே உண்டு.





தாண்டவத்தைக் காட்ட முடியுமா?' என்று கேட்கிறார். அதற்கு அவர் சொல்கிறார் :'ருத்ர தாண்டவத்தைக் காட்டுவதென்ன? பார்ப்பது என்ன...? நீர் அத்யயனம் பண்ணியவர்தானே? வேதத்திலே கனம் சொன்னாலே அந்த ஒலிக ளிலேயே ருத்ர தாண்டவத்தைப் பார்க்க லாமே...' என்றார் சுவாமிகள்.

'வேத மந்திரங்களிலே ருத்ர தாண்ட வத்தைப் பார்ப்பதோடு நந்திகேசுவரரின் மிரு தங்க வாத்ய ஒலியையும் கேட்கலாம்' என்றார் வித்யாரண்யர்.

அந்த வேதத்தில் இல்லாதது என்பதே கிடையாது.

நீர் நிலைகளில் ஜலமே இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்திரனை ஸ்துதிக்க வேண்டும். அவன்தான் மழைக்கு அதிகாரி. வருணனை ஏவுவான். மழையைப் பொழிவிக் கச் செய்வான்.

அதற்காக ஓதப்படும் மந்திரத்தின் ஒலியைக் கேட்டால், மழைக்காலத்தில் நிரம்பிய நீர் நிலைகளில் தவளைகள் ஓசை எழுப்புவது போலவே இருக்கும்! மந்திரத்தின் த்வனியைக் கொண்டே, 'ஓஹோ! இவர்களுக்கு ஜலம் வேண்டும் போலிருக்கிறது... நீர் நிலைகள் மொத்தத்தையும் நிறைத்து விடுவோம்...' என்று தேவதைகள் எண்ணமிடுவார்களாம்!

## ஜாலி போட்டி - 20 முடிவு

**அந்த பத்து இசையமைப்பாளர்கள் :**

1. **ரகுமான்**
2. **தேவா**
3. **கீரவாணி**
4. **அனுமாலிக்**
5. **பப்பி லஹரி**
6. **அம்சலேகா**
7. **தேவேந்திரன்**
8. **விசுவநாதன்**
9. **கண்டசாலா**
10. **யுவன் சங்கர்**

**சரியான விடை எழுதியவர்களுள் குலுக்கலில் தேர்வாகி, ரூ. 5000 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :**

**கே. சரஸ்வதி,**
**55, சிதம்பரனார் தெரு,**
**விருதுநகர் – 626 001.**

**வாழ்த்துக்கள்!**

இப்படி ஒலியின் பங்கு முக்கியமாய் இருப் பதால் உச்சாரணமும் மிகவும் முக்கியம்.

உச்சாரணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒரு சரித்திரம் வேதத்திலேயே வரு கிறது.

திருமேதா என்று ஒருத்தர். பரிச்சேபர் என்று இன்னொருத்தர். இரண்டு பேரும் குருகுலவாசம் செய்து ஏக காலத்தில் வேதம் பயின் றார்கள்.

சமித்திலே அக்னி வளர்த்து, அக்னியை உபாஸிக்கும்படியான வித்யை, மந்த்ரம் கற்றார் கள். பதினைந்து ஆண்டுகள் அதைக் கற்றார் கள். 15, 17, 21 என்று கூட்டம் கூட்டமாக மந்த்ரங்கள் இருக்கும். எல்லாவற்றையும் கற் றார்கள். ஆசார்யரும் ஒர வஞ்சனையில் லாமல், இரண்டு பேருக்கும் சமமாகக் கற்றுக் கொடுத்தார்.

குரு தக்ஷிணையைச் சமர்ப்பித்து விட்டு இருவருமே புறப்படும் காலம் வந்தது. காட் டின் வழியே நடந்து போனார்கள். காட்டைக் கடந்தால் இவர் இவர் ஊருக்கும் அவர் அவர் ஊருக்கும் பிரிந்து போக வேண்டும். பிரிய வேண்டிய கட்டம்! பதினைந்து வருடங்கள் ஒரு குருகுலத்திலே இருந்தவர்களுக்குப் பிரிவு ரொம்ப வருத்தத்தைத் தந்தது. 'இருந்தாலும் நாம் இரண்டு பேரும் பரீட்சை பண்ணிப் பார்ப்போம்...' என்று தீர்மானம் செய்தார்கள்.

இந்தக் கால பரீட்சைக்கும் அந்தக் கால பரீட்சைக்கும் வித்தியாசமுண்டு! இந்தக் காலத் தில், வேதத்தைச் சரியாகச் சொல்கிறானா? உச்சாரணம், உச்சரிப்பு சரியாக இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அந்தக் காலத்திலோ, வித்யை பரீக்ஷிப்பது என்றால், தேவதையையே எதிரில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்!

திருமேதரும் பரிச்சேபரும் நடந்து வந்த காட்டில் மரங்கள் முறிந்து கீழே விழுந்து விட் டன. ஒரு கட்டை, ஜலத்திலே நனைந்து கிடந் தது. 'இந்தக் கட்டையில் நீரும், நானும் கற்ற மந்திரத்தைப் பரீட்சிப்போம்' என்று முடிவு செய்து கொண்டார்கள். "இதிலே அக்னியை உண்டுபண்ணி விடுவோம்..."

"பண்ணலாமா...?"

"ஆஹா, பண்ணலாம்!"

இரண்டு பேரும் ஒன்றாகக் கைகூப்பி மந் திரம் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்புறம் யோசனை வந்தது.

"இப்படி இரண்டு பேரும் ஒன்றாகச் சொன்னால், யார் சொன்னதற்குப் பலன் என்று கண்டுபிடிக்க முடியாது... எனவே நீர் முன்னே சொல்லும்... நான் அப்புறமாக தனித் துச் சொல்கிறேன்..." என்று முடிவாயிற்று.

தனித்துச் சொல்வதில் ஒரு விசேஷமுண்டு! எங்கள் ஊர் முக்கூரில் ஒரு ஸ்ரீமந்தம் பண்ணி

வைத்துக் கொண்டிருந்தார் என் தாத்தா. அப்போது அஹோபில மடத்து நாற்பத்து நாலாவது பீடாதிபதியானவர், பூர்வாசிரம வாசியாய் அங்கு இருந்தார்.

அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் வேத வித்துக்கள் வந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவராக மந்த்ரமே தெரியாத ஒருத்தர்! மற்றவர்கள் கூட்டமாக வேதம் சொன்னபோது இவர் மட்டும் 'ஜிகுபுகு' 'ஜிகுபுகு' என்று சொல்லிக் கொண்டிருந்தார்!

கடைசியில் 'ஹரி : ஓம்' என்று முடித்த பிறகும் 'ஜிகுபுகு ஜிகுபுகு...' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்! சபையிலே உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் சிரித்து விட்டார்கள்.

பீடாதிபதி சுவாமி மட்டும் சிரிக்கவில்லை. மற்றவர்களைப் பார்த்துச் சொன்னார் : "இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை! பதினைந்து வருஷம் அத்யயானம் பண்ணியவர்கள் எந்த இடத்தில் என்ன மந்திரம் சொல்வதென்று உணர்ந்து சொல்வதில் ஆச்சரியமில்லை... இப்படி ஜிகுபுகு சொல்வதுதான் கஷ்டம்! ஒரு இடத்திலே உட்கார்ந்து இரண்டு மணி நேரம் சொல்லியிருக்கிறாரே! ஆகையினாலே, மற்றவர்களுக்கெல்லாம் என்ன சம்பாவனையோ அதைவிட இரண்டு பங்கு இவருக்குக் கொடுக்க வேண்டும்..." என்று இரண்டு மடங்காக சம்பாவனை வாங்கிக் கொடுத்து விட்டார்!

கொடுத்துவிட்டு, அவரைத் தனியே அழைத்துப் போய்ச் சொன்னார் : "இப்படி ஒவ்வொரு இடத்துக்கும் நான் வந்து சம்பாவனை வாங்கித்தர முடியுமா? அதனால் ஜாக்கிரதையாய் இரும். உரிய மந்திரங்களை நெட்டுரு பண்ணி வையும்..."

பிற்பாடு, அவர் பீடாதிபதியானபோது, அவரை சேவிக்க இந்த ஜிகுபுகுக்காரர் போயிருந்தார். "உதக சாந்தி வந்து விட்டதோ யில்லையோ! இப்போது நான் சன்னியாஸாசிரமத்திலே இருப்பதனாலே முன் போல் வந்து காப்பாற்ற முடியாதே!" என்று வேடிக்கையாகச் சொன்னார்!

இதனால் என்ன தெரிகிறது? பல பேர் உரக்கச் சொல்லும்போது ஒருத்தர் தனியாகச் சொல்லும் மந்திரம் காதில் விழாது! அதனால்தான் காட்டில் இரு நண்பர்களும் தனித் தனியே மந்திர சக்தியைச் சோதிக்க முடிவு செய்தார்கள்.

முதலில் த்ருமேதர் கைகூப்பி மந்த்ரத்தை ஓதினார். கட்டையிலிருந்து வெறும் புகைதான் வந்தது!

பரிக்ஷேபர் ஓங்கி, சுச்சிதமாக மந்த்ரத்தை உச்சாரணம் பண்ணி அக்னியை உண்டு பண்ணிவிட்டார்.



''உன் பையன் படிச்சி முடிச்சிட்டு இப்ப என்ன செய்துகிட்டிருக்கான்?''

''ஒரு ரூபாய் சம்பளத்துல ஏதாவது வேலை கெடைக்குமான்னு தேடிக்கிட்டிருக்கான்.''

— பெண்ணை சி. முருகன்.

---

'ரிஷி' என்று பரிக்ஷேபரை அப்போது அழைத்தார் த்ருமேதர்! ரிஷி என்கிற வார்த்தையே அப்போதுதான் உண்டானது!

மந்திரத்தை வாயால் சொன்னால் போதாது. அதன் உள்ளீடான தேவதையை மனத்தால் நினைக்க வேண்டும். மந்திரத்தை உபதேசித்த ஆசார்யனை முதலில் ஆராதிக்க வேண்டும் – இவ்வாறு, மந்திரத்தினிடத்திலும் அதை உபதேசித்த ஆசார்யனிடத்திலும், தேவதையிடத்திலும் சமானமான பக்தி யாருக்கு இருக்கிறதோ... அவருக்குத்தான் மந்திரம் சித்திக்கும். அப்போர்ப்பட்ட சித்தி பெற்றவர்கள் மந்த்ரம் சொல்லி ஆசிர்வாதம் பண்ணிவிட்டால் அந்த ஆசிர்வாதத்துக்கு மறுப்பு உண்டோ!

இவ்வாறு வேதோச்சாரணம் என்பதிலேயே பெரிய தபஸ் இருக்கிறது! இந்த வேதம் ஓதும் காரியத்தை அத்தனை தர்மம் என்று சொல்வது.

தர்மம் என்றால் என்ன என்று ஒரு கேள்வி ஆரம்பத்தில் வந்தது. இவ்வாறு, ஆற்ற வேண்டிய நியமங்களை, கடமைகளை அர்ப்பணத்துடன் ஆற்றுவது தர்மம் என்பது ஒரு பொருள்.

எல்லாவற்றுக்கும் மேலான தர்மம் என்ன என்று கேட்டால்... பரமாத்மாதான்!

'தர்மத்துக்கே கை, கால் முளைத்து பூமியில் சஞ்சாரம் பண்ணினால், அதுதான் ராமன்' என்று விவரித்தார்கள். அப்படிப்பட்ட சக்ரவர்த்தி திருமகனுடைய பரிபூரண அனுக்ரஹம் எல்லோருக்கும் இருக்க வேண்டும்.

(தொடரும்)

# உள்ளே வரலாமா?

## 24

"இந்தா, உனக்கு 'மீடா பான்' பிடிக்குமே..." அம்மாவிடம் பொட்டலத்தை நீட்டினான் சேகர்.

"எங்கடா சாப்பிடப் போனீங்க...?"

"சவேரா..."

"அதுக்கா இவ்வளவு நேரம்...?"

வசந்தி உடை மாற்றும் சாக்கில் உள்ளறைக்குள் போய் விட்டாள். "உட்காரு சுகன்யா" சோபா குஷனை சரி செய்து போட்டுவிட்டுத் தொடர்ந்தாள் ராஜேஸ்வரி.

"இங்கயிருக்கற சவேராவுக்குப் போயிட்டு வர மூணு மணி நேரமா... அப்படி என்ன சாப்டீங்க...?"-சாதாரண தொனியுடன்தான் கேள்வி வந்தது.

"அதைக் கூடச் சொல்லியாகணுமா!' உங்க கேள்விக்கெல்லாம் அளவே இல்லாம போயிடுச்சு..." வழக்கத்துக்கு மாறாக கோபப்பட்டவனை வியப்புடன் பார்த்தாள் ராஜேஸ்வரி.

சுகன்யா சங்கடத்துடன் எழுந்த கணத்தில் "ஏன்டா கத்தறே?... என்னாயிடுத்து இப்போ...?"

தூங்கிக் கொண்டிருந்த வைத்தியநாதன் எழுந்து வந்துவிட்டார்.

"விடுங்க அவனை-என்னவோ 'மூட்' சரியில்லை..."

"நான் கிளம்பட்டுமா...?" சுகன்யா ஹாண்ட் பேகைத் தோளில் மாட்டிக் கொண்டாள்.

"இரும்மா... காப்பி கலந்து தரேன். வெயில் தாழ்ந்ததும் போலாம்... நானே 'டிராப்' பண்ணிடறேன். சேகருக்குத்தான் திரும்பவும் ஆபீஸ் போகணும் - அவசரம்..." வைத்தியநாதன் வற்புறுத்திய போது போன் அடித்தது.

சோபா மேல் கிடந்த கார்ட்லெஸ்ஸை ராஜேஸ்வரி எடுக்க, அவர் கை வைர மோதிரம் பளீரென்று மின் வெட்டியது.

"ஹலோ..."

எதிர்முனைக் குரலின் கோபம் தெளிவாகவே கேட்டது.

"இல்ல ஆனந்த்... இரு. இங்க இருக்கான் சேகர்... அவன்கிட்டப் பேசு..." சமாதானப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்த ராஜேஸ்வரியின் முக பாவனைகள் மாறுவதைக் கூர்ந்து கவனித்தாள் சுகன்யா.

எதிர்முனை ஆனந்த். டாக்டர் மகேஷ் வீட்டை விட்டுப் புறப்படும் போது முட்டிக் கொண்ட இளைஞன் என்பதை யூகிப்பது கஷ்டமாக இருக்கவில்லை.

இறுதியான கூச்சலுடன் 'லைன்' துண்டிக்கப்பட்டது.

"உண்மையைச் சொல்லுடா சேகர்... எங்க போயிருந்தே...? என்ன ஆச்சு...?"

வீட்டு உடைக்கு மாறியிருந்த வசந்தி பயத்தில் கண்கலங்கி நின்றாள்.

"ஒன்றுமில்லைம்மா விடேன்..." பார்வையால் மனைவியைச் சமாதானப்படுத்த முயன்றான் சேகர்.

"ஒன்றுமில்லாத்துக்கு ஏன்டா சோளிங்கநல்லூர் வரைக்கும் போறணும்...? எதுக்காக டாக்டர் மகேஷ்?"

"என்னாச்சு ராஜி...?" வைத்தியநாதன் தம் பங்குக்குக் கேள்விச் சுமையேற்றி அந்த அறையின் அழுத்தம் கூட்டினார்.

"எல்லாருமா சேர்ந்து



?

## கி. கஸ்தூரிரங்கன்

ஸைகியாட்ரிஸ்ட் டாக்டர் மகேஷைப் பார்க்கப் போயிருக்காங்க... சவேராவுல சாப்பிடப் போறேன்னு சொல்லிட்டு..."

"ஏன்டா சேகர்...?"

"அவர் வீட்டுத் தோட்டம் அழகாயிருக்கும். பார்க்கணும்னு சுகன்யா ஆசைப்பட்டாங்க... அதான் சாப்பிடப் போறதுக்கு முன்னாடி பார்க்கலாம்னு போனோம்..."

தனது பொய் தாமதமாய்ச் சொல்லப்பட்டதால், பலமிழந்து சோகையாய் ஒலிப்பதை தானே உணர்ந்தான்.

"சொல்லு... வசந்திக்கு என்ன பிரச்னை...?"

"அது எங்களுக்குள்ள இருக்கட்டும். விட்டுடு..."

"அதெப்படி....?"

"எங்களுக்கும் உரிமை இருக்கு தெரிஞ்சுக்க..."

"ஏதாவது பிராப்ளம்னா கல்யாணத்துக்கு முந்தியே சொல்லியிருக்கலாமே...?"

"மூத்த பையன் தன் இஷ்டத்துக்குக் கல்யாணம் பண்ணிண்டான்றதை மட்டும் ரொம்ப யோக்கியமாய் சொன்னாரே...?"

- கணவனும் மனைவியும் மாறி மாறி குற்றச்சாட்டுகளில் சுருதி உயர்த்த, சுகன்யாவுக்குள் கவலையுடன் பயமும் திரண்டது.

வெண்ணெய் திரளும் நேரத்தில் தாழி உடையும் கதையாக வசந்தியை ஒருவாறு தெளிவித்து வழிக்குக் கொண்டு வரும் சமயத்தில் இப்படியொரு சிக்கல். இந்தத் தாக்குதலில் அவள் மீண்டும் சுருண்டு வாடிவிடுவாள். அந்த வாட்டத்தைப் போக்கி, திரும்பவும் தன்னம்பிக்கை தந்து தயார்ப்படுத்தி... முடியுமா...?



"கல்யாணத்தன்னிக்கு ராத்திரியே ஏதோ சுசமுசான்னு ரகளை... அப்பவே நான் சரியாத்தான் சந்தேகப்பட்டுக் கேட்டேன்..."

வசந்தி விசித்து விசித்து அழ ஆரம்பித்திருந்தாள். அவள் முகத்தில் தெரிந்த மெய்யான வேதனையும் பயமும் குற்ற உணர்வும் சுகன்யாவின் பலத்தை விசிறி விட்டுப் புதிய வேகம் தந்தன.

சோபாவை விட்டு எழுந்து கைகட்டி நின்ற சேகரிடம் போனாள்.

"சேகர்! வித் யுவர் பர்மிஷன்... ஐ வில் ஹான்டில் திஸ்..."

அவன் பதிலுக்குக் காத்திராமல் "வசந்தி இங்கே வா..." உறுதியாக அவளைப் பற்றியிழுத்து இருவரையும் பெட்ரூமுக்குள் அனுப்பி கதவைச் சாத்தி வெளிப் பக்கம் தாழிட்டாள்.

"என்னம்மா! பொண்ணு மாப்பிள்ளையைப் பூட்டி வைச்சுட்டா பிரச்னையெல்லாம் தீர்ந்து போயிடுமா...?"

"ஷ்ஷ்! அனாகரிகமா பேசாதீங்க..."

"வார்த்தைய அளந்து பேசுமா...நீங்க செஞ்சது தான் அனாகரிகம். மனநிலை சரியில்லாத பொண்ணை..."

"ஐயோ! அவசரப்படாதீங்களே. வசந்திக்கு ஒண்ணும் இல்லை... ஒண்ணுமே இல்லை..."

"ஒண்ணுமில்லைன்னா

எதுக்கு சைக்யாட்ரிஸ்ட்...?"

"அது— அவளுக்கு ரொம்ப பயந்த சுபாவம். கோழிக்குஞ்சு மாதிரி பொத்திப் பொத்தி வளர்த்துட்டாங்க... உலகம் தெரியலை. இயற்கை புரியலை... தாம்பத்யத்தை அருவருப்பில்லாம ஏத்துக்கற மனசு இல்லை... அதைச் சரி பண்ணத்தான் டாக்டர் உதவி தேவைப்பட்டது. அதுக்குத்தான் டாக்டர் மகேஷ்கிட்டே போனோம்... வெறும் கவுன்சலிங்தான்..."

அவநம்பிக்கையுடன் பார்த்த தம்பதியை நோக்கிக் கை குவித்தாள் சுகன்யா.

"ப்ளீஸ்... இந்த விஷயத்தைப் பெரிசு பண்ணாதீங்க... பிரச்னை ரொம்ப சிக்கலாப் போயிடும். எதுவுமே நடக்காதது போல பேசாம விட்டுட்டா தானா சரியாயிடும்..."

"ஆஹா! எவ்வளவு சுலபமா சொல்லிட்டே... இருந்திருந்து பையனுக்குக் கல்யாணம் பண்ணியிருக்கோம். அவன் சந்தோஷம் எங்களுக்கு முக்கியமில்லியா... எங்களுக்கும் பேரன் பேத்தி எடுத்துக் கொஞ்சணும்னு ஆசையிருக்காதா..." ராஜேஸ்வரி அழுது விடுவார் போலிருந்தது.

"எல்லாம் நடக்கும் மாமி! கொஞ்சம் பொறுமையா இருங்க... நீங்க நினைக்கிற மாதிரி இது தீர்க்க முடியாத சிக்கல் இல்லே... டாக்டரே என்னைக் கூப்பிட்டுச் சொன்னார்."

"அதெப்படி, எங்களுக்குத் தெரியாம நீ அவங்களை ட்ரீட்மெண்டுக்கு அழைச்சுட்டுப் போகலாம்...? என் பையனுக்கு எந்தப் பிரச்னையுமில்லே... அவனை வேற கட்டியிழுத் திருக்கே."

"அம்மா... உங்களுக்குக் கல்யாணமாகி முப்பது வருஷமாவது இருக்கும்னு நினைக்கறேன்... ஆனாலும் சில விஷயங்கள்ல நீங்க ரொம்ப பின் தங்கியே இருக்கீங்க... புருஷனோட உதவி இல்லாம இந்த மாதிரி ஒரு சிடுக்கை விடுவிக்க முடியுமா...?"

பொறுமையிழந்த சுகன்யாவின் குரலில் நியாயமுணர்த்தும் உத்வேகத்துடன் நக்கலும் சேர்ந்து கொண்டது.

முகம் சிவந்து உதடு துடிக்க குரல் உயர்த்தினார், ராஜேஸ்வரி... "போதும்மா உங்கிட்டே பாடம் கேட்டது. நான் நேரடியா டாக்டர்கிட்டே பேசிக்கறேன்... நம்பர் கொடு..."

"தரேன்... கொஞ்சம் அமைதிப்படுத்திக்குங்க..."

"அவ குடுக்காட்டா போறா! நீங்க யெல்லோ பேஜஸ்ல நம்பர் பாருங்கோ... டாக்டர் மகேஷ் - சோளிங்கநல்லூர்..." டைரக்டரியைக் கணவனிடம் நீட்ட, அவர் பக்கங்களைப் புரட்டியபடியே சொன்னார். முதல்ல சம்பந்திக்கு போன் போட்டு அவரை வரச் சொல்லலாமே..."

பாய்ந்து எழுந்து டெலிபோன் ரிசீவரை எடுத்து எண்களை அழுத்திக் கொண்டிருந்தாள் சுகன்யா.

பெங்களூர் எஸ்.டி.டி. இணைப்பு அதிர்ஷ்டவசமாக உடனே கிடைத்தது.

"ஹலோ! மே ஐ ஸ்பீக் டு கிரிஷ்... கிரிஷ் சக்ரவர்த்தி... யெஸ்."

சென்னையிலிருந்து எஸ்.டி.டி. அவசரம் என உணர்த்தியதும் கிரிஷிடம் தொடர்பு கொடுத்தார்கள்.

"கிரிஷ்! நான் சுகன்யா... நல்லாயிருக்கேன்... அவசரமா ஒரு உதவி. இன்னிக்கு ஈவினிங் ஃபிளைட்ல மிஸ்டர் அண்ட் மிஸஸ் சந்திரசேகர் வர்றாங்க... ஹனிமூன் தம்பதி. மனுஷ வாசனையே இல்லாத இடமா பார்த்து அவங்களுக்கு ஏற்பாடு பண்ணணும்... ஐயோ! எம்.ஜி.ரோடெல்லாம் வேண்டாம்..."

"........"

- கிரிஷ் ஒரு புறநகர் ரிசார்ட்டின் பெயரைச் சொல்ல "வெரிகுட்.... பார்த்துக்கோ... அதுக்காகப் போய் போய் நின்னு தொந்தரவு பண்ணாதே... ஏர்போர்ட்டுக்கு நீயே போறியா...? 'ஃபார் சேகர்'னு நினைவா கார்டு எடுத்துட்டுப் போ..."

டாக்டர் மகேஷிடம் பேசத்தான் சுகன்யா முற்படுகிறாள் என சில கணங்கள் ஏமாந்த வைத்தியநாதன் அதிர்ந்தார்.

"என்ன நினைச்சுக்கிட்டிருக்கே நீ... இந்த நிலைமைல அவங்களை எப்படித் தனியா அனுப்பறது...?"

"உன் இஷ்டத்துக்கு என்னென்னவோ செய்யறியே, அவங்களைக் கேக்க வேண்டாமா? அந்தப் பெண்ணோட அப்பா அம்மா

## தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

# மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம்

கௌரவமான வருமானம்

மரியாதையான சேவை

வங்கியல்லாத கம்பெனிகள் (ரிசர்வ் பேங்க்) வழிமுறைகள் 1977, பகுதி - 1 விதி - 3 உபவிதி - Xiஇன் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

## REGISTERED EDUCATIONAL TRUST NO. 1488.

**வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)** 30 தினம் 18% PA, 45 தினம் 19% P.A.
60 தினம் 20% PA, 90 தினம் 21% P.A.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம். புதுப்பிப்பதற்காக வர வேண்டிய அவசியமில்லை.

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர். 100 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள்.

**வருமானவரி இல்லை**

**மாதப் பென்ஷன் திட்டம் (TM)**

| டெபாசிட் | காலம் | மாதவட்டி ரூ. |
|---|---|---|
| 5000 | 1 வருடம் | 125 |
| 10000 | 1 வருடம் | 250 |
| 10000 | 3 வருடம் | 300 |
| 10000 | 5 வருடம் | 320 |

**சேமிப்பு கணக்கு: 15%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.**

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, TOEFL, etc

**சட்ட ஆலோசகர்**

ஸ்ரீ V.S. சந்திரசேகரன், B.A;B.L.
அட்வகேட், உச்சநீதி மன்றம்,
26, ரங்கநாதன் தெரு, சென்னை - 17.

**ஆடிட்டர்**

M/S. வேல் முருகன் அண்ட் கோ
சார்ட்டர்ட் அக்கவுண்ட்டன்ட்ஸ்
30/A 2 பர்கிட் ரோடு, சென்னை - 17.

## ஆல் வேல்டு அக்கவுண்டிங் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)(TM)

## All-World Accounting Administrative and Technological Academy.

**தலைமை காரியாலயம்:** "வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம், Next to DAV School, T. நகர், சென்னை - 17.

கிளை: 7, முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.

கிளை: 5, 2வது மெயின் ரோடு, நியு காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.

கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

சொத்து பாதுகாப்பு. மாத வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.
AAAAA — பாதுகாப்பின் சின்னம்.

Prof. V. **விவேகானந்த்**
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB (All India First), EKSAMD (Germany) (Distn), B.L.,Topper in IAS Exam.
**Managing Trustee.**

Dr. **பரமேஸ்வரி,** MBBS,
**Managing Trustee.**

**Sunday Working Day**

(TM) :Trade Mark



# சிறுநீரகக் கோளாறா! புற்றுநோயா! சர்க்கரை வியாதியா! ஆஸ்த்மாவா! அல்சரா! மூட்டுவலியா!



## இனி கவலையே வேண்டாம்!

நமது உணவு பொருட்களில் நாள்தோறும் சேர்க்கும் ரசாயனப் பொருட்களாலும், T.B., B.P., Sugar, Asthma போன்றவைகளுக்காக உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளை அதிகம் உபயோகிப்பதாலும் நமது உடலில் உள்ள சிறுநீரகங்களில் தற்காலிக அடைப்பு ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு தற்காலிக அடைப்பு ஏற்பட்டு செயல்படாமல் இருப்பதை நிரந்தரமாக சுருங்கி பழுதடைந்து (Kidney Failure) விட்டதாக முடிவு செய்து டயாலிஸிஸ் செய்து கொண்டிருப்பவர்களும், உடனடியாக டயாலிஸிஸ் செய்ய வேண்டும் என்ற நிலைமையில் உள்ளவர்களும், மாற்று சிறுநீரகங்களை தேடி அலைந்து கொண்டிருப்பவர்களும் உடனே கவலையை விட்டு விடுங்கள்.

சிவனுக்குரிய வில்வ இலை, சக்திக்குரிய வேப்பிலை, பிரம்மாவுக்குரிய அத்திஇலை, விநாயகருக்குரிய அருகம்புல், திருமாலுக்குரிய துளசி இலை, கங்கைக்குரிய மாவிலை போன்ற தெய்வீக மூலிகைகளுடன் அற்புத மருத்துவ குணம் கொண்ட பக்க விளைவு, பின்விளைவுகளை ஏற்படுத்தாத ஆடாதொடை, கீழாநெல்லி, குப்பைமேனி, தும்பை ஆகியவைகளையும் பொடி செய்து தக்க அளவில் கலந்து உட்கொண்டும் இயற்கை உணவுகளான பச்சையாக சாப்பிடும் காய்கறிகள், பழங்கள் போன்றவைகளை உட்கொண்டு வருவதாலும் சிறுநீரகங்களில் ஏற்பட்டுள்ள தற்காலிக அடைப்பினை நீக்கி மீண்டும் சீராக செயல்பட செய்திடலாம். மேலும் நீரிழிவு, மூட்டுவலி, அல்சர், ஆஸ்த்மா, புற்றுநோய் போன்ற நோய்களில் இருந்து வியக்கத்தக்க வகையில் விடுபடவும் விரிவான ஆலோசனையை கீழ்கண்ட முகாம்களில் தெய்வீக மூலிகை வைத்தியர் Dr. C.K.M. சபாபதி அவர்களிடம் நேரில் ஆலோசனை பெறலாம். ஆலோசனைக்கு :

*மூலிகை வைத்தியர்*

**Dr.C.K.M. சபாபதி,**
**S/o. Dr.C.K. மாணிக்கவாசகம்**
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
(பிரின்ஸ் மேனர் பக்கத்தில்)
கெல்லீஸ், சென்னை - 600 010.
போன் : 6424285, 6427638



*மூலிகை வைத்தியர்*

**Dr.C.K.M. குருபரன்**
**S/o. Dr.C.K.மாணிக்கவாசகம்**
P.B. No: 30, (காலேஜ் எதிரில்)
திருப்பத்தூர் (N.A.A.) 635 601
போன் : 04179-20469, 22769.

## வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

| | | |
|---|---|---|
| 2-ந் தேதி | - வேலூர் (N.A.) | : பிற்பகல் 1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060. |
| 3,10ந்தேதி | - சென்னை | : காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638. |
| 4-ந் தேதி | - கடலூர் (S.A.D.) | : காலை 9 to 11 ஆர்த்தரு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717 |
| 4-ந் தேதி | - விழுப்புரம் | : பிற்பகல் 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962. |
| 4-ந் தேதி | - திருவண்ணாமலை | : மாலை 5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536. |
| 5-ந் தேதி | - பெங்களூர் | : காலை 11 to 12.30 ஹோட்டல் பிரசிடென்ட், (கல்பனா தியேட்டர் அருகில்) லெம்பே கவுடா ரோட் ✆ : 2266374 |
| 9-ந் தேதி | - ஓசூர் | : மாலை 3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22699. |
| 9-ந் தேதி | - கிருஷ்ணகிரி | : மாலை 5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120. |
| 12-ந் தேதி | - சேலம் | : காலை 11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333. |
| 12-ந் தேதி | - ஈரோடு | : மாலை 4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 70761. |
| 13-ந் தேதி | - கோயம்புத்தூர் | : காலை 9.30 . to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220 |
| 14-ந் தேதி | - மதுரை | : காலை 9 to 11 ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 743941 |
| 14-ந் தேதி | - தஞ்சாவூர் | : மாலை 5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021. |
| 15-ந் தேதி | - திருச்சி | : காலை 9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்), ✆ : 0431 / 460545. |
| 15-ந் தேதி | - நாமக்கல் | : பிற்பகல் 2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433 |
| 18-ந் தேதி | - ஆம்பூர் | : காலை 10 to 11 சம்பங்கி லாட்ஜ், ✆: 04176 / 43311. |
| 18-ந் தேதி | - காஞ்சிபுரம் | : மாலை 4 to 5 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519. |
| 19-ந் தேதி | - சென்னை | : காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638. |
| 22-ந் தேதி | - தர்மபுரி | : காலை 9 to 10 ஸ்ரீ மஹேஷ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226. |
| 22-ந் தேதி | - திருப்பூர் | : பிற்பகல் 2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418. |
| 22-ந் தேதி | - உடுமலைபேட்டை | : மாலை 6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353. |
| 23-ந் தேதி | - திண்டுக்கல் | : காலை 9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆:27017. |
| 23-ந் தேதி | - தூத்துக்குடி | : மாலை 5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780 |
| 24-ந் தேதி | - திருநெல்வேலி | : காலை 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 23312. |
| 24-ந் தேதி | - நாகர்கோவில் | : பிற்பகல் 2 to 3 ஹோட்டல் சரவணா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25669. |
| 25-ந் தேதி | - விருதுநகர் | : காலை 9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537. |
| 25-ந் தேதி | - கரூர் | : பிற்பகல் 2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763. |

**DIVINE HERBAL CENTRE**
**CKM**

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 20 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.30/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.45/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.37/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

வுக்குச் சொல்லியாகணும்..."

சுகன்யா தனது போன் புக்கைப் பார்த்து மீண்டும் டயல் செய்து கொண்டிருந்தாள்.

"அம்மு..! நான் சுகி பேசறேன்.. எனக்கு ஒரு உதவி.. எப்படியாவது இன்னிக்கு பெங்களூர் ஃப்ளைட்ல இரண்டு பாசஞ்சர்ஸ்- மிஸ்டர் அண்ட் மிஸஸ் சந்திரசேகர் - அனுப்பியா கணும்.."

"..."

"அந்த ஃப்ளைட் நாலரை மணிக்கு இல்லே..? இப்பவே மூணேமுக்கால் ஆயிடுத்து.. அவங்க நாலேகாலுக்குத்தான் செக்இன் பண்ணுவாங்க. கவுண்டர்ல சொல்லிடறயா... ப்ளீஸ்.. அப்புறம் பில்லை எனக்கு அனுப்பிடு.."

அத்தனை அமர்க்களத்திலும் ராஜேஸ்வரி, வைத்தியநாதனுக்கு ஆச்சர்யம் உண்டானது. தங்கள் கேள்விகள் மட்டும் பதிலின்றி அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்க... எந்தக் கேள்வியும் கேட்காமல் பளிச் பளிச்சென்று இந்தப் பெண்ணுக்கு உதவ ஒரு தனியுலகம் காத்திருக்கிறது...

**சு**கன்யா, சேகருடைய அறைக் கதவைத் திறந்து "கிளம்புங்க..." என்றாள்.

"எங்க...?"

"சேகர்! ப்ளீஸ் கேள்வி எதுவும் கேட்காதே. உடனே ஆட்டோ பிடிச்சு ஏர்போர்ட் போ. ஸ்வான் ஏர்வேஸ் கவுண்டர்ல உங்க இரண்டு பேருக்கும் டிக்கெட் காத்திருக்கும். நாலரை மணிக்கு ஃப்ளைட். நீங்க நாலேகாலுக்கு செக் இன் பண்ணுவீங்கன்னு சொல்லியிருக்கேன். பெங்களூர் ஏர்போர்ட்ல கிரீஷ் சக்ரவர்த்தி தாடிக்காரன் உனக்காகக் காத்திருப்பான். அவனோட போ. இரண்டு வாரத்துக்குத் திரும்பி வராதே."

"சுகன்யா, என்ன இது? ஆபீஸுக்கு நான் தகவல் சொல்லணும். அப்பாயின்ட்மென் ஸெல்லாம் கான்ஸல் பண்ணணும்."

"எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். தயவு செஞ்சு கிளம்பு."

"மன்னி, துணி எதுவும் எடுத்துக்க வேண்டாமா?"

டிரெஸ்ஸிங் டேபிள் மேலிருந்த சேகரின் பர்ஸை எடுத்து அவன் கையில் கொடுத்து, தரதரவென்று வாசலுக்குத் தள்ளினாள்.

"பர்ஸுல கிரெடிட் கார்டு இருக்கில்லே... எதுனாலும் அங்க போய் வாங்கிக்கங்க."

"ஹலோ! சம்பந்தியா? நீங்க இங்க உடனே வந்தா தேவலையே? கொஞ்சம் பிரச்னை. உங்க மாட்டுப் பொண்ணு..."

வைத்தியநாதன் போனில் இரைந்து கொண்டிருந்தார்.

"போகாதேடா! சேகர், சொன்னா கேளு. இந்தப் பொண்ணு ஏதோ அதிகப் பிரசங்கித் தனமா காரியம் பண்றதுன்னா, உனக்கு மூளை வேணாம்?"

ராஜேஸ்வரியின் இடிக்குரல் அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து தலைகளை எட்டிப் பார்க்கச் செய்தது.

"கத்தாதேம்மா. எல்லாரும் வேடிக்கை பார்க்கறாங்க."

"ஐயோ! இப்படி நாலு பேர் பார்த்துச் சிரிக்கறாமாதிரி ஆயிடுத்தேடா..."

"சேகர், இனியும் இங்கே இருந்திங்கன்னா பெரிய ரகளை ஆயிடும்..." கெஞ்சிய சுகன்யாவைக் குழப்பத்துடன் பார்த்தான்.

"என்கிட்டே நம்பிக்கை இருக்கா இல்லையா...?"

வசந்தியையும் சேகரையும் ஒருசேர நோக்கி வீசப்பட்ட கேள்வியின் தொனியும் உடன் செலுத்திய பார்வையின் தீவிரமும் சாவி கொடுத்ததுபோல் அவர்களை இயக்கின. யதேச்சையாய் விரைந்த காலி ஆட்டோவை நிறுத்தி, இருவரையும் உள்ளே தள்ளி, "சீக்கிரம்... ஏர்போர்ட் போங்க. டொமஸ்டிக் டெர்மினல்." என்று உத்தரவிட்டு, கையசைத்து விடை கொடுத்தாள் சுகன்யா. வசந்தியின் கண்களில் நன்றியைப் பார்க்க முடிந்தது. தனக்காக ஒரு முடிவெடுக்கப்பட்டு விட்ட நிம்மதியில் சேகர்கூட முழுமையாய் புன்னகை செய்தான்.

**போ**னை வைத்துவிட்டு வாசலுக்கு வந்திருந்த வைத்தியநாதன், ஆங்கிலத்தில் திட்டிக் கொண்டிருந்தார்.

"ஏய் வசந்தி! உங்கப்பா வரார். இரு... இறங்கு..."

குழப்பத்துடன் பார்த்த ஆட்டோ டிரைவரை முதுகில் அடித்து, "கிளம்புங்க" என்று சுகன்யா கத்தியபோது பக்கத்து, எதிர் வீட்டுக்காரர்கள் தெருவுக்கு வந்திருந்தார்கள்.

"You are the most impertinent upstart I have seen! " இடுப்பில் இரு கைகள் இறுத்தி நாடகப் பாணியில் கத்தினார் வைத்தியநாதன்.


"தேங்க் யூ!"

ஹேண்ட்பேகைக்கூட எடுத்துக் கொள்ள மறந்து, அப்படியே தெருவில் நடந்தாள் சுகன்யா.

(தொடரும்)

பெருமைக்காரன் கடவுளை
இழக்கிறான்.
பொறாமைக்காரன் நண்பனை
இழக்கிறான்.
கோபக்காரனோ தன்னையே
இழக்கிறான்.
— மாக்த்ஸலேஸா

தகவல் : குணா பார்த்திபன்



'டொரிகல்' என்றாள் அவர் மகள். அந்தக் கடற்கரையின் பெயர். சிட்னியில்.

'இயற்கை அளிக்கும் செல்வத்தை நாசமாக்கவும் முடியும், நாம் சென்னையில் 'மெரினா'வைச் செய்திருப்பது போல்' என்று அவர் தமக்குள் சொல்லிக் கொண்டார்.

இங்கு அழகுக்கு அழகு சேர்த்திருந்தார்கள் வெள்ளைக்காரர்கள். ஒவ்வொரு கணத்தையும் வாழத் துடிக்கும் ஆர்வத்தில், இயற்கையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மனிதனின் கைவண்ணத்தில் - இயற்கையின் இயல்பான சீற்றம் தணிந்து, மனத்துக்கு இதம் தருகிறது.

அவர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

நேற்று சூரியனுக்கு ஓய்வு. சாம்பல் பூசிய நாளாய் இருந்தது. இன்று, நேற்று பெற்ற ஓய்வில் களைப்பு நீங்கி புதுப்பொலிவுடன் வானத்தில் பவனி வந்தான் சூரியன். அவனை வாரி உடம்பில் பூசிக் கொள்ள மணலில் மல்லாந்து கிடந்தன பல வெள்ளை உடல்கள். இளைஞர்கள், வயதானவர்கள், பால் வேறுபாடின்றி, கண்களில் மட்டும் கறுப்புக் கண்ணாடி திரையிட்டு உடம்பின் மற்றைய பகுதிகளை சூரியனின் அரவணைப்புக்குச் சமர்ப்பித்திருந்தனர்.

அவரால் இப்படிப் படுத்துக் கொள்ள முடியுமா? 'நமக்குத்தான் எத்தனை மனத் தடைகள்?' என்று நினைத்தார் அவர். இந்த 'மனத்தடைகளு'க்குத்தாம் கலாசாரம் என்ற

இந்திரா பார்த்தசாரதி

# குன்று

பெயரா?

'இவர்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை யில்லை; ஒரே பிறவி, அனுபவிக்க வேண்டு மென்ற அவசரம். நமக்கு ஒரு பிறவிதான் என்ற 'சீலிங்' இல்லை... இப்பிறவியில் நம்மை வருத்திக் கொண்டால், அடுத்த பிறவி சொர்க் கம் என்ற நம்பிக்கை... விரும்பியதைச் செய்யக் கூடாது என்று உணர்ச்சிகளுக்குத் தடையிட் டால் அது 'வருத்துவதை'த் தவிர வேறென்ன? அடுத்த பிறவியிலும் இதைத்தான் செய்வோம். சொர்க்கம் என்பது தொடுவானம்... அல்லது தொட முடியாத வானம்...

அப்பொழுது அந்தக் குன்று அவர் கண்களில் பட்டது. அதன் மீது ஏறி, பலர் கடற் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தனர்.

அவருக்கும் அங்கு போக வேண்டும் போலிருந்தது. அவர், தம் மகளும் மருமகனும் எங்கிருக்கிறார்கள் என்றறிய திரும்பிப் பார்த்தார்.

கடல் பறவைகளுடன் கொஞ்சிக் கொண்டிருந்தனர். அவர் தம் மகளைச் சற்று உரத்த குரலில் கூப்பிட்டார். திரும்பிப் பார்த்த அவள் முகத்தில் சிறிது எதிர்ப்பு தெரிந்தது. உரக்கக் கூப்பிட்டிருக்கக்கூடாது. மல்லாந்து கிடந்தவர்களின் நிச்சலனமான அமைதி நீரோட்டத்தில் கல்லெறிவது போல்.

பக்கத்திலிருந்த ஒரு வயோதிகத் தம்பதிகள், கண்ணாடியை விலக்கி அவரைப் பார்த்ததினின்றும், இது அவருக்குத் தெரிந்தது.

"ஐ ஆம் ஸாரி" என்றார் அவர், அவர்களிடம். கண்ணாடி யதாஸ்தானத்துக்குச் சென்றது.

அவர் தம் கைக் குறிப்பு மூலம் குன்றின் மீது ஏறப் போவதாக மகளுக்குத் தெரிவித்தார். குன்றையும், அவரையும் மாறி மாறிப் பார்த்த அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். அவரால் ஏற முடியுமா என்ற அவநம்பிக்கை அவளுக்கிருக்கலாமென்று அவருக்குத் தோன்றிற்று. இந்தச் சவாலை ஏற்க வேண்டுமென்ற உந்துதல் அவருக்கேற்பட்டது.

அவர் வாழ்க்கையில் எதையும் சவாலாக ஏற்று, செய்து முடித்த கதாநாயகரல்லர். சாலை விதிகளை என்றும் மீறாத, நேர்வழிக் குடிமகன், ஆசாரநெறிகள் தவறாத அப்பாவும், அப்பாவால் தவறு செய்ய முடியாது என்று தீவிரமாக நம்பிய அம்மாவும் அவரை வளர்த்த விதத்தில், அவருடைய 'அடி'மனம் இறுகப் பூட்டப்பட்டிருந்தது.

அடிமனம் என்று ஒன்றிருக்கிறதென்று, அவருக்கு சம்பத்தோடு பழகிய போதுதான் தெரிந்தது. சம்பத், கும்பகோணத்தில், அவருடைய நெருங்கிய பள்ளி, கல்லூரி நண்பன். குணத்தில் இவருக்கு நேர்மாறானவன். இருவரும் எப்படி நெருங்கிய நண்பர்களாக இருக்க முடிந்தது என்பது, பலருக்கு மட்டுமின்றி, அவர்களுக்கே பல சமயங்களில் ஆச்சர்யமாகவிருந்தது.

சம்பத் நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் தாத்தா ஆதீனங்கள், மடங்கள்; ஜமீன்கள் போன்ற பெரிய பெரிய இடங்களுக்கு ஆஸ்தான வக்கீல். கொள்ளை வருமானம். அந்தக் காலத்தில், தஞ்சாவூர் ஜில்லாவில் முதன் முதல் 'பான்டியாக்' கார் வாங்கியது அவன் தாத்தாதான் என்று சொல்வார்கள்.

சம்பத்தின் அப்பாவும் வக்கீல். தாத்தாவின் ஒரே வாரிசு. கட்சிக்காரர்களும், அவன் தாத்தா தொழிலிலிருந்து ஓய்வு அடைந்ததும், கட்சி மாறவில்லை. பரம்பரை வருமானத்துக்குப் பழுது இல்லாமலிருந்தது.

சம்பத்தின் தாத்தா கும்பகோணம் 'எக்ஸ்டென்ஷனில்' ஒரு பெரிய பங்களாவில் தனியாக இருந்தார். சம்பத் மேட்டுத் தெருவில் ஒரு பெரிய வீட்டில் அப்பா, அம்மாவுடன் இருந்தான். பூமா என்ற ஒரு தங்கை. சின்னக் குடும்பம். வீட்டில் வேலைக்காரர்கள் தாம் அதிகமிருந்தனர்.

சம்பத்தின் தாத்தா 'தனியாக' இருந்தார் என்றால், சம்பத்தின் பாட்டி உயிருடன் இல்லை என்றுதான் அர்த்தம். அவன் தாத்தாவை 'எல்லாவிதங்களிலும்' கவனித்துக் கொள்ள ஓர் அழகான துணை இருந்தது. சேர நன்னாட்டு இளம்மங்கை. முப்பது வயதிருக்கும். சம்பத் தாத்தாவின் வயது எழுபத்தைந்து.

பார்த்தால் நிச்சயமாய் அந்த வயது தெரியாது. நெடிய கம்பீரமான தோற்றம். செக்கச் செவேலென்று பழம் போலிருப்பார்.

ஒருசமயம் சம்பத்துடன், அவன் தாத்தாவின் பங்களாவுக்குப் போனது அவர் நினைவுக்கு வந்தது.

**பெ**ரிய தோட்டம். 'தோப்பும் துரவும் தொங்கவிட்ட மாம்பழமும்' என்பார்களே அந்த மாதிரி. விஸ்தாரமான பங்களா வாசலில் ஒரு பெரிய ஊஞ்சல்.

அவரும் சம்பத்தும் போனபோது, அந்தப் பெண் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள்.

சம்பத்தைக் கண்டதும் முகம் மலர்ந்து, 'வாடா என் கண்ணா' என்று கூறிக் கொண்டே அவனை இறுகக் கட்டி முத்தம் கொடுத்தாள்.

அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. சம்பத்துக்கு அப்பொழுது பதினெட்டு வயதிருக்கும். நல்ல வாட்டசாட்டமான உடல். சம்பத்தும் 'பாட்டி' என்று சொல்லிக் கொண்டே அவளுக்கு முத்தம் கொடுத்தான்.

'பாட்டியா?' என்று அவர் சற்றுத் திடுக்கிட்டார்.

இளமையின் தலைவாசலில் நிற்கும் அவள்.

'பாட்டியா?' பிறகுதான் அவருக்குத் தெரிந்தது.

அவளை அவன் அப்படித்தான் கூப்பிட வேண்டுமென்று அவள் கட்டளை.

அப்பொழுதுதான் அவனுக்கு அடிமனம் இருப்பது அவருக்குத் தெரிந்தது. அடி மனம் கேட்டது: 'இது சரியா?'

இதற்குப் பிறகு இந்த 'சரி, தப்பு'ப் பற்றிய விவாதங்கள் அவர்களுக்கிடையே அடிக்கடி ஏற்படும். சம்பத்தின் கருத்துப்படி குற்ற உணர்வு இல்லாமல் செய்யும் காரியம் எதுவுமே சரிதான். அப்பொழுதெல்லாம், இவனுடன் நட்பை முறித்துக் கொள்வதே தமக்குச் சரி என்று அவருக்குத் தோன்றும். இரண்டு மூன்று நாட்கள் அவனுடன் பேச மாட்டார். அவன் அவரைத் தேடிக் கொண்டு அவர் வீட்டுக்கு வந்து விடுவான். அவனை அவரால் ஒதுக்கி விட முடியவில்லை.

"**எ**க்ஸ்கியூஸ் மீ..."

தம் சிந்தனையில், படகு ஒன்றை எடுத்துச் சென்ற ஓர் இளம் தம்பதியின் வழிக்குத் தடையாக நின்று கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார்.

"ஐ ஆம் ஸாரி..." என்று கூறிக்கொண்டே அவர் ஒதுங்கினார். அவர் 'வருத்தத்தை' அவர்கள் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டனர்.

நடந்து கொண்டிருந்தவர் எதற்காக நின்றார்? அவருக்கே தெரியாது. களைப்போ? இருக்கலாம். தன்னிச்சையாக நின்றிருக்க வேண்டும்.

அவர் குன்றை நோக்கி மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

சம்பத், கல்லூரிப் படிப்பு முடித்த இரண்டு, மூன்று வருஷங்களுக்குப் பிறகு, அவர் வாழ்க்கையிலிருந்து திடீரென்று மறைந்து போனான். எங்கே போனான் என்று யாருக்கும் தெரியாது. அவன் தாத்தா அவன் கல்லூரியில் படிக்கும்போதே போய் விட்டார். கல்லூரிப் படிப்பு முடித்த அடுத்த வருஷம் அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. அம்மா 'கான்சரி'ல் போனாள். அவனுக்கு அம்மாவின் மீது அசாத்திய பிரியம்.

சம்பத், அவர் வாழ்க்கையினின்றும் மறைந்து போனான் என்று சொல்வது சரியா? அவருக்குள் எப்பொழுதும் அவன் ஒளிந்து கொண்டிருந்தான் என்றே அவருக்குத் தோன்றிற்று. சரி, தப்பு பிரச்னை வரும்போதெல்லாம், அவருக்கு சம்பத் குரல் கேட்கும்.

அவன் எங்கே போயிருப்பான்? வெளிநாடு போய் விட்டதாகச் சொன்னார்களே தவிர, அவனைப் பற்றிய சரியான தகவல் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை.

அவனுடைய அப்பா, அவன் அம்மா போன பிறகு 'அவளை'த் தம் வீட்டிலேயே கூட்டி வைத்துக் கொண்டார்.

யார் 'அவள்'?... அதுவும் அவருக்கேற்பட்ட சுவாரஸ்யமான அனுபவம்.

**அ**வர் சம்பத் வீட்டில் பாதி சமயங்களில் இரவு உறங்கி விடுவதுண்டு. சம்பத் அம்மாவுக்கு அவரை மிகவும் பிடிக்கும்.

ஒரு சமயம், நள்ளிரவில், சம்பத்தின் அம்மா அவனை எழுப்பினாள். அவரும் எழுந்து விட்டார்.

'அப்பா அந்தாத்திலேருக்கார்... பூமாவுக்கு 105 டிகிரி. எனக்கு பயமாருக்கு... அப்பாவைக் கூட்டிண்டு வா...'

அந்த 'அகம்' என்பது இந்தக் காலத்திய 'சின்ன வீடு...' அவருக்கு அதைப் பற்றியும் நன்றாகத் தெரியும், சம்பத் சொன்ன தகவல். அந்தப் பெண் திருமணமானவள். அவளை அவர் பார்த்ததில்லை. அவள் கணவரைப் பார்த்திருக்கிறார். நாட்டு வைத்தியர்.

---

"அந்த ஆளுக்கு ரொம்ப ஞாபகமறதி..."

"எப்படிச் சொல்றே?"

"உங்களுக்குக் கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆகுதுன்னு கேட்டேன். தன் குழந்தைகளை எல்லாம் கூப்பிட்டு எண்ணிப்பார்த்துட்டு பதினாலுன்னு சொல்றார்!"

— வெ. ராஜாராமன்



வயதானவர். சம்பத்தின் அப்பாதான் அவருக்கு இளம்பெண்ணைக் கல்யாணம் செய்வித்ததாகச் சம்பத் அவரிடம் சொல்லியிருக்கிறான்.

"வாடா போகலாம்..." என்றான் சம்பத் அவரிடம்.

"அவன் எதுக்குடா?" என்றான் அவன் அம்மா.

"போனா அவனோட போவேன், இல்லாட்டா போக மாட்டேன். டாக்டரை நான் கூட்டிண்டு வரேன்."

"டாக்டர் ஊரிலில்லே... அதான் எனக்கு பயமாருக்கு... ஆஸ்பத்திரிக்கு போகணும்னா..."

"வாடா போகலாம்" என்று இரண்டாம் தடவையாக உறுதியான குரலில் சொன்னான் சம்பத் அவரிடம்.

அவர்கள் வீடு, காமாட்சி ஜோஸ்யர் தெருவிலிருந்தது. 'சைலன்ஸர்' இல்லாத மோட்டார் சைக்கிளில் அவரையும் பின்னால் ஏற்றிக் கொண்டு, மிக ஆர்ப்பாட்டமாய் அந்த வீட்டெதிரே 'பைக்'கை நிறுத்தினான் சம்பத்.

சிறிதும் பெரிதுமில்லாத நடுத்தரமான வீடு. வாசல் மரக்கதவைப் பலமாகத் தட்டினான் சம்பத்.

"யாரு?" என்ற குரல், ஆண்குரல், உள் பக்கத்திலிருந்து மிகச் சன்னமாக ஒலித்தது.

சம்பத் பதில் சொல்லவில்லை. அதிக வேகமாகக் கதவைத் தட்டினான் இரண்டாவது தடவையாக.

சில விநாடிகளுக்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. 'அரிக்கேன்' விளக்கைக் கையிலேந்தியவாறு, கண்களை இடுக்கிப் பார்த்தார் வைத்தியர். அந்த மங்கலான வெளிச்சத்தில் அவர் நாமம் 'பளிச்'சென்று தெரிந்தது.

"யாரு? சம்பத்தா... வாடா வா."

"அப்பாவைக் கூப்பிடுங்க..."

"யா...ரு? அ...ப்...பாவா? இங்கேயா...?"

"ஆமாம்... இங்கேதான். கூப்பிடுங்க..."

"அவர் வந்து..." அவர் தயங்கித் தயங்கிச் சொல்லி முடிப்பதற்குள் அவரைத் தாண்டி உள்ளே சென்றான் சம்பத்.


"அப்பா..." வீடு எதிரொலிக்கும்படியான குரலில் உரக்கக் கூப்பிட்டான் சம்பத்.

கூடத்தை ஒட்டியிருந்த அறையிலிருந்து கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியே வந்தார் சம்பத்தின் அப்பா.

"எங்கே வந்தே?" என்றார் அவன் அப்பா. குரலில் எரிச்சல் தெரிந்தது.

"பூமாவுக்கு நல்ல ஜுரம். 105 டிகிரி. அம்மா கூட்டிண்டு வரச் சொன்னா உங்களை. டாக்டர் ஊரிலில்லே."

"என்னடா ஆச்சு குழந்தைக்கு?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார் வைத்தியரின் மனைவி.



"நம்ம மகன் கணக்குல கெட்டிக்காரனா இருக்கலாம்; ஆனா பொது அறிவிலே பூஜ்யமா இருக்கான்."

"ஏன், என்ன ஆச்சு?"

"400/2 சுரேஷ்நகர், கோவைன்னு விலாசம் எழுதச் சொன்னா, 200 சுரேஷ் நகர்னு எழுதித் தொலைச்சிருக்கான். கடிதம் திரும்பி வந்துடுச்சு!"

– ஓ. என். சதாசிவன்

அவன் குரலில் கண்ட பரிவு, பாசாங்கு இல்லை என்று அவருக்குப் பட்டது.

"நீ போ உள்ளே..." என்று அதட்டல் போட்டார் சம்பத்தின் அப்பா.

"நல்ல ஜுரம், சித்தி..." என்றான் சம்பத். அவன் அவளைச் 'சித்தி' என்று கூப்பிடுவான் என்பதை அவன் அப்பா எதிர்பார்க்கவில்லை என்று தோன்றிற்று.

அவர் அவனை எரித்து விடுபவர் போல் பார்த்தார். பிறகு மிகக் கோபமாகக் கேட்டார். 'உன் சிநேகிதனையும் கூட்டிண்டு வரணுமா?"

"வொய் நாட்? அவன் என் பாட்டியைப் பார்த்திருக்கான் எக்ஸ்டென்ஷன்லே, சித்தியைப் பார்க்கக் கூடாதோ?"

சம்பத்தின் அப்பா அளவற்ற சினத்துடன் அவன் அருகில் வந்து அவனை அடிக்கக் கையை ஓங்கினார்.

சம்பத் அவர் கையை அப்படியே இறுகப் பற்றிக் கொண்டான்.

"செய்யறதைத் துணிஞ்சு செய்யணும்.. வேஷம் கூடாது. ஒரு அடி என் மேலே விழுந்தது, அப்புறம்... என்ன ஆகும்னு எனக்கே தெரியாது." என்றான் சம்பத்.

அந்த ஒருகணம் உலகம் ஸ்தம்பித்து நின்றது போல இருந்தது அவருக்கு. அவன் அப்பாவுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.

கை தானாகவே கீழே இறங்கியது. அவர் கண்களில் பயம் தெரிந்தது.

சம்பத் வெளியே வந்தான். அவரும் அவனைத் தொடர்ந்தார்.

அவர் சொன்னார், வெளியே வந்தவுடன்: "அப்பாகிட்டே நீ இப்படிப் பேசியிருக்க வேணாம்..."

"என் தாத்தா தைரியமா செஞ்சார். இதென்ன, கோழைத்தனம், இன்னொருத்தனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சு, ராத்திரி வேளையிலே முட்டாக்குப் போட்டுண்டு நுழையறது? அவளை வச்சிண்டிருக்கார், ஆனா அவரோட சொந்த வீட்டு விஷயம் பத்தி அவ

விசாரிக்கக் கூடாது. அவர் சொந்த வீடு 'ஒரு புனிதமான விஷயம்'. அவ வப்பாட்டிதானே, அவளுக்குக் கேக்க உரிமையில்லே... அவ நல்ல மனுஷியாத்தான் எனக்குப் படறது. பாவம், காசில்லாத கொடுமை..."

"உங்கம்மாவுக்கு அவர் துரோகம் பண்றாரே, அது 'இஷ்ஷியு'வே இல்லியா?" என்றார் அவர்.

"எங்கம்மாவை எனக்கு நன்னா தெரியும். வீட்டுக்குக் கூட்டிண்டு வராத வரைக்கும் அவளுக்கு இது 'இஷ்ஷியு'வேயில்லே... அவளுக்கும் வீடு 'ஒரு புனிதமான விஷயம்' டாமிட். நம்ம 'கல்சர்'லே, ஆட்களுக்கு முக்கியத்துவமே கிடையாது... 'அப்ஸ்டராக்ட்' விஷயங்கள், கற்பு, கிற்பு, தாலி பாக்கியம்... சச்ஸ்டன்ஸ் அன்ட் நான்ஸென்ஸ்' இதுக்குத்தான் முக்கியத்துவம்..."

சம்பத் அம்மா போன பிறகு அவனுடைய அப்பா அவளைத் தம்முடைய வீட்டிலேயே அழைத்து வைத்துக் கொண்டார். வைத்தியர் என்ன ஆனார் என்ற விவரம் யாருக்கும் தெரியாது.

அன்று அந்தச் சம்பவத்துக்குப் பிறகு சம்பத் அவர் உள் மனத்தை ஊடுருவி நின்றான் என்று அவரால் உணர முடிந்தது.

குன்று ஏறுவது கொஞ்சம் சிரமமாகத் தானிருந்தது. செங்குத்தாக இருந்ததினால் கொஞ்சம் மூச்சு வாங்கிற்று.

உச்சிக்குச் சென்று, சுற்றிப் பார்த்ததும், குன்றேறிய பலன் அவருக்குக் கிடைத்தாற் போலிருந்தது. அற்புதமான காட்சி!

மேலிருந்து சரிந்த நீலமும், கீழே விரிந்து கிடந்த நீலமும் ஒன்றோடு ஒன்று இணைந்து, ஒரு ராட்சச நீல வாய் திறந்து, அவரை விழுங்க வருவது போல் அவருக்குத் தோன்றிற்று. அலைகள் எச்சில்களாக வழிந்தன.

அவர் கண்களை மூடிக் கொண்டார். எத்தனை நேரம் அப்படியே நின்றார் என்று அவருக்குத் தெரியாது.

கண்களைத் திறந்து, பக்கவாட்டத்தில் பார்த்தபோது...

"வாட் எ கோய்ன்ஸிடன்ஸ்!"

பக்கத்தில் நின்றவர் சம்பத் போலவே இருந்தார். சம்பத்தாக இருக்க முடியாது. இருபத்தைந்து வயது இளைஞன். அவனருகில் ஓர் இளம்பெண். வெள்ளைக்காரப் பெண். தென் அமெரிக்கப் பெண் போல் தோன்றினாள்.

ஏன் சம்பத்தின் மகனாக இருக்கக்கூடாது என்று அவருக்குத் தோன்றிற்று. அதே நீண்ட நாசி, கூர்மையான கண்கள், சுருள்முடி... நாற்பது வருஷங்கள் கரைந்து அவருக்கும் இளமை வந்து விட்டாற்போல், அவர் உற்சாகத்தின் கொடுமுடியில் நின்றார்.

**"இந்த ஆபரேஷன்லே நான் பிழைப்பேனா டாக்டர்?"**
**"அட, உங்களுக்கும் அதே சந்தேகம்தானா?"**
**— வெ. ராஜாராமன்**

அவர் அவனருகே சென்றார். "எக்ஸ்கியுஸ் மீ..." என்று அவர் சொன்னதும், அவன் அவரைத் திரும்பிப் பார்த்தான்.

"எஸ்...?" என்றான் அவன்.

"என்னுடைய நெருங்கிய நண்பன் சம்பத் மாதிரி நீங்கள் இருக்கிறீர்கள்..." இதற்கு மேல் என்ன சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. அவனையே பார்த்துக் கொண்டு அவர் நின்றார்.

அவன் அவரை உற்றுநோக்கினான். உடனே அவன் பதிலேதும் சொல்லவில்லை. அவர் முகத்தில் அவன் ஏதோ தேடுவது போலிருந்தது.

சில விநாடிகள் கழித்து, அவர் பெயரைச் சொல்லி அவரைக் கட்டிக் கொண்டான்.

"நம்பவே முடியலே... நீ சம்பத்தா? அன்னிக்குப் பார்த்த அதே மாதிரி... நோ... நோ..."

"இப்போ நீ எனக்கு அன்னிக்கு எப்படி இருந்தியோ அப்படியேதான் இருக்கே. ஒரேயொரு வித்தியாசம், நம்ம ரெண்டு பேருக்கும் அன்னிக்கும் சரி, இன்னிக்கும் சரி, நான் இளைஞன்தான்... உனக்கு அப்பவே வயசாயிடுத்து... ஓ.கே.. இது என் மனைவி, வில்மா... இவன் என் பால்ய சிநேகிதன்..." அவன் அவருடைய பெயரையும் சொன்னான்.

"மைகாட்! அதெப்படி அவளும் இவ்வளவு இளமையா இருக்காளே?" என்றார் அவர்.

"எனக்கு 'புரு'ன்னு ஒரு பிள்ளை. அவன்கிட்டேயிருந்து நான் இளமையை வாங்கிண்டேன். இவ, அவன் வொய்ஃப் கிட்டேயிருந்து வாங்கிண்டா... போறுமா?" என்று கூறிவிட்டு, உரக்கச் சிரித்தான் சம்பத்.

"நிஜமா சொல்றேன். இன்க்ரெடிபில்... நீ இப்போ எங்கே, ஆஸ்திரேலியாவிலேதான் இருக்கியா?" என்றார் அவர்.

"எஸ்... இப்போ.. ஆறு மாசமா இங்கே.. எத்தனை நான் இங்கே இருப்பேன்னு எனக்குத் தெரியாது. வட அமெரிக்காவிலே அஞ்சு வருஷம், தென் அமெரிக்காவிலே பத்து வருஷம், யு.கேவிலே அஞ்சு வருஷம். நைஜிரியாவிலே அஞ்சு வருஷம்... ஐ ஆம் எ க்ளோப் ட்ராட்டர்... நாப்பது வருஷத்துக்கு முன்னாலே கால்லே ஏறின சக்கரம் ஓடிண்டேயிருக்கு. என்ன செய்யறேன்னு கேக்காதே... எல்லாவிதமான வேலையும் செய்யத் தெரியும். 'ப்ரொஃபஸர்,' 'ப்ரொஃபஷனல்'.... எல்லாம். நீ என்ன செய்யறே... 'தி ஸேம் ஓல்ட் வீபிங் ஃபிலா



ஸபர்?' வாழ்க்கையிலே அழறதை நிறுத்தியாச்சா, இல்லே, இன்னும், 'மாரல்', சீரல்னு சொல்லிண்டு அழுதுண்டிருக்கியா?'' என்று சொன்னவன், மனைவி பக்கம் திரும்பி, "மன்னித்துக் கொள்... நாங்கள் எங்கள் மொழியில் பேசுவதை..." என்றான் ஆங்கிலத்தில்.

அவள் புன்னகை செய்தாள்.

"ஆர் யு ஹாப்பி?" என்றார் அவர்.

''குட்... இது நல்ல கேள்வி. இந்தக் கேள்வியைக் கேட்டுண்டேயிருந்து, 'ஆமாம்'னு நாம 'ஃபீல்' பண்ணா... அது போறும். உனக்கு இப்பொ கேள்வி கேட்க தெரிஞ்சுருக்கு... நல்ல ஆரம்பம்... 'வால்யு ஜட்ஜ்மென்ட்' அது இதுன்னு சொல்றதெல்லாம் காலாவதியாயிடுத்து... பழசைப் பத்தி என்னை ஒண்ணும் கேக்காதே, நானும் உன்னைக் கேக்க மாட்டேன். ஓ.கே...?"

அவன் மறுபடியும் என்னைக் கட்டிக் கொண்டான்.

''சரி... வா... அதோ இருக்கு. எங்க மோட்டார் - போட்... ஒரு 'ரைட்' போயிட்டு வருவோம்.

அவர் அவர்களை மாறி மாறிப் பார்த்தார். காயகல்பம் சாப்பிட்டவர்கள் போல... இல்லை, அமுதத்தை விழுங்கியவர்கள் போல இருந்தார்கள்.

"என்ன வரயா, சொல்லு" என்றான் சம்பத்.

"எங்கே?"

''ஜஸ்ட் எ ஜாலி ரைட்... அந்தத் தொடுவானம் மட்டும், அதைத் தொட்டுட்டுத் திரும்பி வந்துடலாம்..."

"தொடுவானத்தைத் தொட முடியாது,'' என்றார் அவர்.

"தொடணும்னு அவசியமில்லே... பயணந்தான் முக்கியம். அதுதான் சந்தோஷமான அநுபவம். மைகாட், இது கூடவா உனக்குத் தெரியாது...?"

"நௌ யு ஆர் ஆன் காட், நான் ஒண்ணு உன்னைக் கேக்கலாமா?"

"அப்ப ஒரு கேள்வி கேட்டியே, 'ஆர் யு ஹாப்பி?'ன்னு அந்தக் கேள்வியிலே, எல்லாம் அடங்கிடுத்து. என்ன கேள்வி கேட்டாலும், அந்தக் கேள்வியோட துணைக்கேள்விதான்..."

"உனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கா?" என்றார் அவர்.

அவன் பலமாகச் சிரித்தான்.

அவர் பயந்து விட்டார்.

பிறகு சொன்னான் : "வாட் எ கொச்சின்? நான் பிரபஞ்சத்தை நம்பறவன். நான்தான் பிரபஞ்சம்னு நம்பறவன். கடவுள் பிரபஞ்சம்னா, கடவுள் பிரபஞ்சத்துக்குள்ளே ஊடுருவி இருக்கார்னா, நான் கடவுளையும் நம்பித்தான் ஆகணும். அப்படி நம்பலேன்னா, எனக்கு பிரபஞ்சத்துப் பேரிலே நம்பிக்கையில்லே, என் பேரிலேயே நம்பிக்கையில்லேன்னு அர்த்தம். அப்படி எனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கான்னு நான் என்னை நானே மீண்டும் மீண்டும் கேட்டுண்டேருக்கணும்னு ஒரு கடவுள் விரும்பினார்னா, அவர் கடவுளே இல்லே... அவர் ஒரு போகஸ் கடவுள் 'பொய்த் தேவு'. இதுதான் 'ஸர்மன் ஆன் தி மௌண்ட்' ஸாங் ஆஃப் குருக்ஷேத்திரா...! சரி... ஓ.கே. போகலாம் வரயா...?"

''இப்பொ வர முடியும்னு எனக்குத் தோணலே. என் 'டாட்டரும்' மாப்பிள்ளையும் என் கூட வந்திருக்கா. நான் திரும்பிப் போயாகணும். இன்னொரு நாளைக்கு..."

அவன் இடைமறித்தான்... ''சரி... என் டெலிஃபோன் நம்பரைத் தரேன்... காண்டாக்ட் பண்ணு, ஓ.கே...?"

அவன் அவர் பையிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தையும் 'பால் பாய்ண்ட்' பேனாவையும் எடுத்து அவசர அவசரமாக அவன் டெலிஃபோன் நம்பரை எழுதி, அந் துண்டுக் காகிதத்தை அவர் பையில் போட்டான்.

அவர் குன்றிலிருந்து கீழே இறங்கியதும், அங்கு அவர் மகளும், மருமகனும் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தனர்.

"என்ன யோசிச்சிண்டிருந்தீங்க, ரொம்ப நேரமா, தனியா நின்னுண்டு?'' என்றாள் அவர் மகள்.

"தனியாவா?"

"ஆமாம்... நாங்க அப்பவே வந்துட்டோம். நீங்க இறங்கி வருவீங்கன்னு காத்திண்டிருந்தோம்..." என்றாள் அவர் மகள்.

அவர் தனியாக இல்லை என்று அவர்களுக்குச் சொல்வதற்காகத் தம் பையிலிருந்த துண்டுக் காகிதத்தை எடுத்து அவர் மகளிடம் நீட்டினார்.

அவள் அதைப் பார்த்துவிட்டு, "இது நம்ம வீட்டு டெலிஃபோன் நம்பர். உங்களுக்கு ஞாபகம் இருக்கே, அதுவே ஆச்சர்யந்தான்" என்றாள்.

அவர் குன்றைத் திரும்பிப் பார்த்தார்.

விசைப்படகுச் சவாரிக்கு ஒத்துக் கொண்டிருக்கலாமென்று அவருக்குத் தோன்றிற்று. ஆனால் விசைப்படகு கண்ணுக்குத் தெரியவில்லை. குன்றின் மீது ஏறிப் பார்த்தால் அது தெரியக்கூடுமென்று அவருக்குப்பட்டது.


பிரிந்து போனவர்கள் கட்சிக்குத் திரும்பினர்!
இந்தியன் ஃபீச்சர்ஸ் ஸிண்டிகேட்
"ஹலோ மைக் டெஸ்டிங் ஒன் டூ த்ரீ.... எல்லா குளறுபடிக்கும் பி.ஜே.பி.தான் காரணம்... மைக் டெஸ்டிங்... ஒன் டூ...."
"சொன்னா நம்ப மாட்டீங்க... ஆனா கட்சியில தொடர்ந்து இருக்கிறவங்களை விட, கட்சி விரோத நடவடிக்கைக்காக வெளியே அனுப்பினவங்கதான் ரொம்ப விச்வாசமா இருக்காங்க..."
ஆஹ்ஹாஹ்ஹா...
"யாருக்கு பெயில் யாருக்கு ரிமாண்ட் என்கிற இரண்டு 'விஷயம் தவிர வேற எதையும் தீர்மானிக்கறதில்லைன்னு நீதி மன்றங்கள் முடிவு செய்திருக்கோ....!"
நீதிமன்றங்கள்
NEW YEAR SALES
SUPER STORES
"இந்த வருஷம் பிஸினஸ் ரொம்ப 'டல்' சும்மா சுட்டுட்டுப் போகறதுக்காக வர்றவங் களைக் கூட காணும்..."



பதவி : குடும்பத் தலைவி (திருமதி . பத்மா பரமசிவம்)
பொறுப்பு : குடும்ப நிர்வாகம், குழந்தை படிப்பு மற்றும் நலன், குடும்ப சேமிப்பு

**சிறந்த சேமிப்பிற்கு இவர் சிபாரிசு TDFC.**

குடும்பப் பொறுப்புகளில் சேமிப்பினையும் முக்கியமானதாகக் கருதி அதற்கான முடிவை எடுக்கும் குடும்பத் தலைவிகளுக்கு திருமதி பத்மா பரமசிவம் அவர்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அபரிமிதமான ஈட்டுத்தொகையைத் தருவதாகக் கூறும் நிதி நிறுவனங்களை அவர் என்றைக்குமே நம்பியதில்லை. முதலீட்டிற்கு முழுபாதுகாப்பு, நிலையான, நல்ல ஈட்டுத்தொகை இவற்றிற்கும் மேல், சிறந்த சேவை அளிக்கும் உறுதியான நிறுவனம் இவைதான் ஒரு நம்பகமான நிதி நிறுவனத்தின் அடிப்படைத் தேவைகள் என்று கருதுகின்றார், திருமதி. பத்மா பரமசிவம்.

"முதலீட்டுக்கு நியாயமான வட்டியும் நிலையான பாதுகாப்பையும் தர அரசுத்துறை நிதி நிறுவனமான TDFC இருக்கும்போது பணத்தை முதலீடு செய்ய நான் ஏன் வேறு ஒரு நிதி நிறுவனத்தை நாட வேண்டும்" என கூறுகின்றார்.

குறிப்பு : P.T. Consultancy Service நடத்திய ஆய்வின் படி இந் நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களில் 32% இல்லத்தரசிகள்.

**திட்டம் - 1** - தவணை முறையில் வட்டி அளிக்கும் திட்டம்
(குறைந்தபட்ச வைப்புத் தொகை - ரூ. 5,000/-)

* 15 சதவிகிதம் வருட வட்டி மாதந்தோறும் கூட்டு வட்டி முறையில் கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்தில் வட்டி வழங்கும் திட்டத்தின்கீழ் குறைந்த பட்ச டெபாசிட் தொகை 12 மாதம் ஒரு நாளுக்கு ரூ.10,000-ம் மற்றவைகளுக்கு வழக்கம் போல் ரூ.5,000 ஆகும்.

**15%** ஒரு வருடத்திற்கு
வட்டி மாதந்தோறும் வழங்கப்படும்.

**திட்டம்-2** - முதலீடு பெருக்கும் திட்டம்
(குறைந்தபட்ச வைப்புத் தொகை - ரூ.3,000/-)

மேற்கண்ட உங்கள் முதலீட்டுப் பெருக்கம் 15% வருட வட்டியில் கூட்டு வட்டி முறையில் பிரதி மாதம் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு வைப்புத் தொகை இரண்டு திட்டத்திலும் ரூ. 1000-ன் மடங்குகளில் மட்டும் ஏற்கப்படும்.

**22.16%** ஐந்து வருடத்திற்கு திட்டம் 2-ல்

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை, அலுவலக வளாகம், சென்னை-600 006.
தொலைபேசி : 8278351/8272917/8276059, தந்தி : TAFCON. P.B.No.719.

கிளைகள் * மூ.சி பேருந்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044. தொலைபேசி : 437102 * மூ.சி பேருந்து நிலைய வளாகம், திருச்சி-620 001. தொலைபேசி:464188 * ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை-625 001. தொலைபேசி:741686 * முனிசிபல் அலுவலக வளாகம், காமராஜர் சாலை, ஈரோடு-638 001. தொலைபேசி : 78204

இந்த விளம்பரம் கம்பெனியால் 6.10.96 தினமணியில் வெளியிடப்பட்ட சட்டபூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

**உங்களது முதலீடு "டிடிஎப்சி" யில் பாதுகாப்பானது - பத்திரமானது**

DIPR/934/DIS/96/ELEGANT

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.
*? 'ஜெ' கைது, பழிவாங்கும் நடவடிக்கை அல்ல. நானோ எனது அமைச்சர்களோ, ஏன்... என் மகனோ தவறு செய்தால் கூட தண்டனை உண்டு... என்பதை உணர்த்தும் எச்சரிக்கை அந்த நடவடிக்கை...' என்று கருணாநிதி கூறியுள்ளாரே?*
! சரியான வார்த்தை. இப்படிப் பேசவும் ஒரு துணிச்சல், கறைபடாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்கிற தன்னம்பிக்கை வேண்டும். புத்தாண்டில் அமைச்சர்கள், அதிகாரிகளெல்லாம் இந்த வாக்கியத்தை மேஜை மேல் எழுதி வைத்துக் கொண்டு, தினமொரு முறை படித்துவிட்டு வேலையைத் தொடங்கலாம்.


• விஷப் பரீட்சை

● ஆர். பார்த்திபன், சேத்துப்பட்டு.
*? சமீபத்தில் படித்து ரசித்த கவிதை...?*
! பார்க்க : இந்த இதழின் எண்பதாவது பக்கம்.

● கே. ஆர். ரவிக்குமார், கும்பகோணம்.
*? சேஷன் போன்று கில் செயல்படுவாரா?*
! பஞ்சாப் தேர்தல் அறிவிப்பு விஷயத்தில் காட்டியிருக்கும் வேகம் அப்படித்தான் நம்பச் செய்கிறது.

● ஜி. சேதுராமன், சென்னை – 91.
*? கோதுமை விலை உயர்வு பற்றி தங்கள் கருத்து...?*
! நடப்பு ஆண்டில், தொழில் துறையில் தேக்க நிலை இருந்தாலும் விவசாய உற்பத்தி காரணமாக மொத்தத்தில் பொருளாதார வளர்ச்சி காட்டி விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. இப்போது அதிலும் மண்! ஏற்றுமதிக்குக் கோதுமை அனுப்பிய நிலை போய், இப்போது இந்திய அரசே கோதுமையை இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறதே!


• மிகைப்படுத்தல்

● ச. தேவி, விருதுநகர்.
*? ராகுல், ப்ரியங்கா – இருவரில் யாரிடத்தில் 'ராஜ' களை தென்படுகிறது?*
! இருவரிடத்திலும் இருக்கிறது – 'ராஜீவ்' களை!

● அஜார், தேனாம்பேட்டை.
*? கடந்த ஆண்டின் கதாநாயகனாக யாரைச் சுட்டுவீர்கள்...?*
! சந்தேகமென்ன, ரஜினிதான்! அவரது வார்த்தைகள் மட்டுமல்ல; மௌனம் கூட அல்லவா பரபரப்பாகப் பேசப்பட்டது!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.
*? என் மீது அவதூறு பரப்புவது விலைவாசி உயர்வை திசை திருப்பும் முயற்சிதான் என்று 'ஜெ' கூறியிருக்கிறாரே? ஏற்றுக் கொள்கிறீர்களா?*
! பொழுது விடிந்து பொழுது போனால் வாழ்க்கையை நேரடியாக பாதித்துக் கொண்டிருக்கும் விலைவாசி உயர்விலிருந்து மக்களைத் திசை திருப்ப எதனாலும் முடியாது!


• இனி உயரும்!

● எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் – 6.
*? ரயில் விபத்துகள் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டனவே...?*
! விபத்துகள் மட்டுமா? குண்டு வெடிப்புகள் வேறு கொடூரமாக பயமுறுத்துகின்றன. பிரம்மபுத்ரா மெயில் குண்டு வெடிப்பில் ஏராளமானவர்கள் பலியாகியிருக்கிறார்கள்.

● கே. கணேசன், கிருஷ்ணகிரி.
*? பத்திரிகைத் துறையின் தரம் இப்போது அதல பாதாளத்துக்குச் சென்று விட்டது என்கிறாரே சேஷன்?*
! அவர் எழுத ஆரம்பித்து விட்டார் அல்லவா... இனி உயர்ந்து விடும்!


• ராஜகளை...?

# கடந்த ஆண்டின் கதாநாயகன் யார்?





• அர்த்தமுள்ள மௌனம்



• திசைதிருப்பல்!



• சேஷன் வழி...?



• புத்தாண்டு அறிவுரை!



• பார்க்க
- பக்கம் 80

● **கே. எம். ஸ்வீட் முருகன், கரடிகொல்லப்பட்டி.**

*? சிறையில் இருக்கும் ஜெயலலிதாவை சிவாஜி குடும்பத்திலிருந்து யாரும் போய்ச் சந்திக்கவில்லையே?*

! வளர்ப்பு மகன் வாபஸ் ஆன பிறகு சம்பந்தி உறவு முறையும் வாபஸ் ஆகாதா என்ன...?

● **ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 84.**

*? தமிழக தலைநகரை திருச்சிக்கு மாற்ற வேண்டும் என்று திராவிடர் கழக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதே... இதைத் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்வார்களா...?*

! தலைநகரை மாற்றுவதென்பது உணர்வுபூர்வமாக எடுக்க வேண்டிய முடிவு அல்ல... அறிவுபூர்வமாகப் பார்க்கும்போது, சென்னையே தலைநகராகத் தொடர்வதுதான் உசிதம்.

● **மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.**

*? 'தி.மு.க. ஆட்சியில் தவறு நடக்காது என உறுதியாகச் சொல்வேன்' என்கிறாரே வீரபாண்டி ஆறுமுகம்?*

! தவறு நடக்காது என்று சொல்வது மிகை. 'தவறுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்போம். அதில் பாரபட்சம் காட்ட மாட்டோம்' என்று சொன்னால் ஏற்கலாம்.

● **எஸ். அருள்மொழி, காட்டூர்.**

*? 'பதவிக்கு வர மறுத்த மூன்றாவது நபர் ரஜினி' என காந்தியுடனும் ஜெயபிரகாஷ் நாராயணனுடனும் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறாரே ஆர்.எம். வீரப்பன்?*

! ஒப்பீடு அதோடு நின்றால் சரி; அதற்கு மேல் என்றால் ஓவர்!

● **க. குழந்தைவேல், கிருஷ்ணராயபுரம்.**

*? கவர்னரே தேவையில்லை என்று கேரள முதலமைச்சர் நாயனார் சொல்லியிருக்கிறாரே?*

! அடுத்ததாக, 'முதல்வரே தேவையில்லை, அமைச்சரவையின் முடிவுகளே போதும்' என்று சொல்லக்கூடும். அப்புறம் 'மெஜாரிட்டி எம்.எல்.ஏக்கள் சேர்ந்து முடிவெடுத்தாலே போதுமே... அமைச்சரவை எதற்கு...?' என்று கேள்வி வரலாம். இதுபோன்ற விஷப் பரீட்சைகளில் தலைவர்கள் இறங்காமலிருப்பதே நல்லது.

● **எஸ். குமரன், மதுரை - 20.**

*? சிறையில் ஜெயலலிதாவைப் பார்க்க அனுமதி மறுத்ததற்காக சட்ட அமைச்சர் தந்திருக்கும் விளக்கம் சரியா...?*

! 'சிறைக்குள் இருப்பவர்களிடையே சம உரிமை கோரப்படலாம். ஆனால் சுதந்தரப் பிரஜைகளுக்கு உள்ளது போன்ற அடிப்படை உரிமைகளைச் சிறைக் கைதிகள் கோர முடியாது. சிறையில் இருப்பவர்களின் உரிமை கட்டுப்பட்டுத்தான் இருக்கும்,' என்று சிறைச்சாலைகளின் முன்னாள் டைரக்டர் ஜெனரல் ஹாண்டா அளித்துள்ள சட்ட விளக்கம், ஜெ. தொடர்பான ஜெயில் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

● **மு. முத்துவெங்கிட ஆனந்தன், வந்தவாசி.**

*? மும்பையில் சேலை அணிந்து கொண்டு டிஸ்கோ நடனமாட அனுமதி இல்லையாமே...?*

! சேலை பிழைத்தது போங்கள்! அதன் பாரம்பரியப் பெருமையும் கௌரவமும் நிலைக்கட்டும். டிஸ்கோ நடனமாடும் அளவுக்குப் போய்விட்ட பெண்கள் அதற்கு வசதியாக ஜீன்ஸ் அணியத் தயங்க வேண்டியதில்லையே...!

● **எஸ்.ஏ.என். செந்தில்குமார், சூலூர்.** ❐

*? தமிழகத்தில் கள்ளச் சாராய வழக்குகளில் மட்டும் 1.34 லட்சம் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களாமே?*

! கள்ளச் சாராயத்தினால் மிக அதிகமான துன்பத்துக்கு உள்ளாகிறவர்கள் பெண்களும் குழந்தைகளும்தான். குடும்ப வருமானம் குடும்பத் தலைவனின் குடிப்பழக்கத்துக்கே சரியாய்ப் போய்விடுகிறது. இந்த நிலையில் பெண்களே கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபடுவது என்பது சோகம்தான். வறுமை காரணமாகத் தொடங்கும் இந்த அக்கிரமத்திலிருந்து மீள முடியாமல் சிக்கிக் கொள்கிறார்கள். கள்ளச் சாராய மன்னர்களின் ஆணைகளுக்குக் கீழ்ப் பணியும் அடிமைகளாகி விடுகிறார்கள்.

❐ **ரூ. 25 பரிசு பெறுபவர் : எஸ்.ஏ.என். செந்தில்குமார், 14, கட்டேரித் தேவர் வீதி, சூலூர் - 641 402.**

# பொங்கல் திருநாளில் சீண்டல் பேட்டிகள்!

"ஊழலோ ஊழல்! ஊழலோ ஊழல்!" என்று கூவியபடியே திருநாவுக்கரசு பொங்கல் பானையைச் சுற்றி வந்து கும்மியடித்துக் கொண்டிருந்தார்.

"என்ன இது? பொங்கலோ பொங்கல்னு தானே எல்லாரும் கோஷம் போடுவாங்க..." என்பதற்குள்,

"புரட்சித் தலைவி ஆட்சியிலே ஊழல் பொங்கின மாதிரி வேற எப்பவாவது பொங்கிச்சா? அதான்..." என்றார்.

"ஆமாமாம், முதல்வர் கூட 'முன்பு திருநாவுக்கரசு கூறிய குற்றச்சாட்டுகள் பேரில்தான் இப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்று சொல்லியிருக்காரே!"

"அவரை மாதிரியே நீயும் பிரச்னையை திசை திருப்பப் பார்க்கறே" என்றார் கோபமாக. "ஊழலா பிரச்னை? அதன் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கை பற்றித்தான் பேச்சு! நான் அ.தி.மு.க.வுல திரும்பச் சேர்ந்தப்புறம் புரட்சித் தலைவி மேல நடவடிக்கை எடுத்தா வேடிக்கை பார்த்துட்டா இருக்க முடியும்?"

"அதானே!" என்று அவரைப் புரிந்து கொண்டுவிட்ட திருப்தியில் மொபெட்டை விரட்ட, அது மழையினால் பல்லாங்குழியாக மாறி விட்டிருந்த சாலையில் துள்ளிக் குதித்துச் சென்றது.

மேயரைப் பார்த்துப் புகார் பண்ணலாம் என்று பார்த்தால் அவர் வீட்டு வாசலில் ஒரே புகைமண்டலம். 'லொக்கு புக்கு' என்று தும்மி, இருமியபடியே, "கண் எரியுதே என்னத்தைக் கொளுத்தறீங்க, போகிக்கு?" என்று கேட்டேன்.

"புதுசா வீடு மாறி குடி வந்திருக்கேனா, கொளுத்தறதுக்குக் குப்பையே கிடைக்கலே. அதனால கார்ப்பரேஷன் குப்பை லாரியை அரை லோடு கொண்டு வந்து கொட்டச் சொல்லிக் கொளுத்திக்கிட்டிருக்கேன்" என்றார்.

"மாநகராட்சியிலே ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் வந்து குவியற புகார் மனுக்களைக் கொண்டு வந்து கொட்டியிருக்கப் போறாங்க, பார்த்துக் கொளுத்துங்க" என்று எச்சரித்துவிட்டு புகைமூட்டத்திலிருந்து தப்பினால் போதுமென்று அவ்வை சண்முகி வீட்டுக்கு விரைந்தேன்.

அடுத்த படத்துக்கு ஐடியா தேட அவர் கேஸட்டுகள் சூழ, டெக் முன்பு அமர்ந்திருந்தார். "பொங்கலையொட்டி இன்னிக்கு ஷூட்டிங் இல்லியாக்கும்; அதான் சாவகாசமாக வீடியோ பார்க்கறீங்க. அடுத்தாப்பல ஆங்கிலப் படத் தழுவலா, இல்லே, ஹிந்தியா?" என்று கேட்டவாறே நெருங்கினேன்.

"பிரெஞ்சு, லாட்டின், கிரீக் எதுவானால் என்ன? அழுத்தமான கதை அம்சத்தோட படம் எடுத்தா, 'வன்முறை'ன்னுவீங்க; லைட்டா தமாஷ் படம் எடுத்தா 'ஆபாசம்'னுவீங்க" என்று அலுத்துக் கொண்டார்.

"ஏன், ஆபாசம், வன்முறை இரண்டும் இல்லாம படம் எடுக்கிறது!"


"ஆமா, அடுத்தாப்பல 'காமிரா, ஸவுண்ட் டிராக் இரண்டும் இல்லாம படம் எடுங்க'ன்னுவீங்க! வெல்லமும் இல்லாம அரிசியும் இல்லாம சரிகாவை சர்க்கரைப் பொங்கல் செய்து தரச் சொல்றேன், சாப்பிடுறியா?" என்றார்.

"உங்க வெறுப்புக்குக் காரணம் புரிஞ்சு போச்சு, இந்தாங்க" என்று கையோடு கொண்டு போயிருந்த சர்க்கரைப் பொங்கல் பாக்கெட்டை அவரிடம் கொடுத்துவிட்டு, "கூல், கூல்" என்று கூறிப் புறப்பட்டேன்.

"பொங்கல் வாழ்த்துக்கள்" என்றதும் நிமிர்ந்து பார்த்தார் கலைஞர். "ரொம்பக் கோபமா இருக்கீங்க போலிருக்கே" என்றேன்.

"இருக்காதா பின்னே; பத்திரிகைகளை மதிக்கணும்னு நினைக்கிறேன், நான். ஆனா ஒரு பாரம்பரியப் பெருமைமிக்க பத்திரிகை இப்படியா நடந்துக்கிறது? ரகசியமா அந்தம்மாவோட உதவியாளர்கிட்டே ஜெயிலுக்குள் கேள்விகளைக் கொடுத்து

**செம்பியன்**



அனுப்பி பதிலைப் பெற்று பிரசுரித்து... சேச்சே!"

"அப்படி பிரசுரித்ததிலே ஒரு ஸ்கூப் ஆதாயம்; அப்புறம் நீங்க கண்டிக்கிறதால கிடைக்கிற பப்ளிசிடி இன்னொரு ஆதாயம்... போகட்டும், பொங்கலுக்கு ஒரு வாழ்த்து சொல்லுங்க; கவிதை வேண்டாம்... கவிதை நடை போதும்..."

"கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்கள், பொங்கல் தினத்தில் அறுவடை பாதிக்கப்பட்டிருந்தாலும் இந்த ஆட்சியில் லஞ்ச ஊழல் அறுவடை நடக்க வில்லை என்பதில் மகிழ்ச்சி அடைய வேண்டும்."

"மும்பாய்ல பார்த்தீங்களா, 'சக்கிலியர் கூட்டுறவுச் சங்கம்'னு ஆரம்பிச்சு, நாலு காலணி கடைக்காரர்கள் ஆயிரம் கோடிக்கு மேல் சுருட்டியிருக்காங்க...!"

"கூட்டுறவுத் தத்துவம் என்பது பொங்கல் கரும்பு மாதிரி. அதை லாகவமா கடித்தால் இனிய சாறு வரும்; தாறுமாறா கடித்தால் ஈறில் ரத்தம்தான் வரும்!"

தப்பினால் போதும் என்று தோன்றி விடவே, "அடக்கடவுளே!" என்று வாய் தவறிச் சொல்லி விட்டேன்.

"அப்படி அழைக்காதே என்று தி.மு.க. தொண்டர்களுக்குக் கூட கடுமையான உத்தரவு போட்டிருக்கேனே" என்றார்.

"நான் உங்களை அழைக்கலை; நிஜமாகவே நான் வணங்கும் தெய்வத்தைத்தான்" என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் தலைதெறிக்க ஓடினேன்.

இதற்குள் பேஜரில் "பீப்பீப்" ஒலித்தது. "இதழ் அச்சேறணும்; சீக்கிரம் வா" என்று ஆசிரியரின் உத்தரவு கிடைத்தது. மூப்பனார், வாழப்பாடி என்று பலரையும் சந்திக்க நினைத்திருந்தவன், எல்லாருக்கும் மனசுக்குள் "ஸாரி" சொல்லிவிட்டு கடைசியாக சேஷன் முன் போய் இறங்கினேன்.

"எங்க வந்தே?" என்றார்.

"நாட்டைத் தூய்மைப்படுத்த ஐடியா கேட்டிருக்கீங்களே, சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்."


"என்ன பிரமாத ஐடியா? சீக்கிரம் சொல்லித் தொலை!"

"காலைல தூங்க விடாம கோயில்கள்ல மைக் அலறுது; கச்சேரிகள்ல மைக்கைத் தூக்கு தூக்குன்னு ஜாடை காட்டி வித்வான்கள் காதைக் கிழிக்கிறாங்க; பக்கத்து வீட்டுக்காரர் எட்டாயிரம் ரூபா கொடுத்து ஸவுண்ட் ஸிஸ்டம் வாங்கியிருக்கிற பெருமைல உயிரை எடுக்கறார்; ஒரு கல்யாணம்னா அந்தப் பேட்டை பூரா சினிமா பாட்டைக் கேட்டே ஆகணும்; செத்துப்போன, உசிரோடு இருக்கிற தலைவர்கள் பிறந்த நாள்னா தெரு முழுக்க மைக் சத்தம்; பொதுக் கூட்டம்னா இரைச்சல்; ஹோட்டல்கள்ல டிஸ்கோ கூச்சல்; தேர்தல் சமயத்துல ஆட்டோ, சைக்கிள் ஊர்வலத்தோடு ஒலிபெருக்கி கோஷம்... இந்த மைக்-ஸ்பீக்கர் சமாசாரமே நாட்டில் இருக்கக் கூடாதுன்னு ஒழிச்சுக்கட்ட, ஒரே ஒரு சட்டம் எப்படியாவது நிறைவேற்றிடுங்க. தேசமே அமைதியா இருக்கும்; சாந்தி நிலவும்!"

"அடப்பாவி! கடைசில நான் மைக் முன் நின்று பேசவே முடியாம வாயை மூடிக்கிட்டிருக்க சதியாலோசனை பண்றியா! முதல்ல உன்னை ஒழிச்சுக்கட்டணும்" என்று என்னிடமிருந்த டேப் ரிகார்டரைப் பிடுங்க வந்தார்.

மொபெட்டை ஸ்டார்ட் பண்ணக் கூடத் தாமதியாமல் தள்ளிக் கொண்டே திரும்பிப் பாராமல் ஓடினேன். சேஷனால் ரொம்ப தூரம் பின் தூரத்தியிருக்க முடியாது, நிச்சயம்!

# TV மர்சனம்



●● பெப்ஸி உமாவை 'ஆன்ட்டி' என்று கூப்பிடக் கூடாதாம்! "அக்கா, இல்லைன்னா உமா..." என்கிறார். போனில் பேசி தங்கள் சாய்ஸ் கேட்போர் என்னவோ 'ஆன்ட்டி' யாக அவரை அழைக்கும் அளவுக்குப் பொடிசுகள்! ("செகண்ட் ஸ்டான்டர்ட் படிக்கறேன்"). அவர்கள் விரும்பிக் கேட்கும் பாட்டுகள்...? 'ரங்கிலா ரங்கிலா' ரகம்! அதிர்ச்சி அடைபவர்கள் அசடுகள்!

●● நகைகளை மட்டும்தான் விருப்பப்படி டிசைன் செய்து வடிவமைத்து அணிய முடியுமா...? கார்களையும் அப்படி பிரத்யேகமாய் டிசைன் செய்யலாம்! இருபத்தோராம் நூற்றாண்டின் சூப்பர் கார் என்பதாக ஒன்று வடிவமைக்கப்பட்டிருப்பதை 'டிஸ்கவரி'யில் காண்பித்தார்கள். The Ultimate Super Car. உடல் பாகம் கார்பன் இழைகளால் ஆனது. யானைக் கால் கனத்தில் டயர்கள். பஞ்சரே ஆகாதாம்; அதனால் ஸ்டெப்னியே கிடையாது! டிரைவர் இருக்கை மத்தியில் நினைத்தபடி அட்ஜஸ்ட் செய்து கொள்ளக்கூடிய முன்பக்க கண்ணாடி அமைப்பு. 850000 அமெரிக்க டாலர்கள் கொடுத்து இந்தக் காரை வாங்கினால் இலவசமாக இரண்டு டூல் கிட்டுகள் (அதான் – ரிப்பேர் பார்க்கும் கருவிகள்); சுமார் ஒரு டஜன் பெட்டி, பைகள் அடங்கிய luggage kit; ஒரு மோடம்! மோடம் எதற்கு என்று கேட்பீர்கள். உலகின் எந்தப் பகுதியிலிருந்தாலும் மோடம் மூலம் கார் உற்பத்தி ஸ்தாபனத்துடன் கம்ப்யூட்டர் தொடர்பு கொள்ளலாம். கம்ப்யூட்டர் மூலமாகவே ரிப்பேர் பார்த்து சீர்செய்யலாம். அல்லது சந்தேகம் தீர்த்துக் கொள்ளலாம்.

இப்படி ஒரு காரை உற்பத்தி செய்ய மூவாயிரம் மனித மணி நேரம் ஆகுமாம். வருடத்துக்கு 36 கார்கள்தான் செய்கிறார்கள். மணிக்கு 231 மைல் வேகம் வரை போகும்... எங்காவது இடித்துத் தொலைத்தால்...?

இடித்தாலும் அடிபடாமலிருக்க, மிக உறுதியான கார்பன் படிமங்களைக் கொண்ட பெட்டி ஒன்று முன்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கிறது. ஒரு செங்கல் சுவர் மீது ஐம்பது மைல் வேகத்தில் மோதிப் பார்த்து 'எதுவும் ஆகாது' என உறுதி செய்திருக்கிறார்கள்!

●● உலகம் ஏன் ஒருதரம் நின்று இயங்கவில்லை? மூச்சு ஏன் 'கப்'பென்று அடைத்துக் கொள்ளவில்லை? கடல் ஏன் வற்றவில்லை? எப்பேர்ப்பட்ட அதிர்ச்சிச் செய்தி! "அநேகமாக இந்த வருஷத்துடன் நான் நடிப்புக்கு குட்பை சொல்கிறேன்" என்றார் குஷ்பு. புத்தாண்டில், சன் டீவியில். சுந்தரோடு டும்டும் – இது அநேகமாக அருணாசலம் முடிந்த பின்பாம். அநேகமாக ஸ்டேட்மென்ட்டை வாபஸ் வாங்கிக் கொண்டு நடிக்க வந்து விடுவார் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்களில்லையா? அநேகமாக அது பொய்யாகிவிடும் என்று குஷ்பு பேசியதிலிருந்து தெரிகிறது.

●● முன்னாள் அம்பயர் ஸ்வரூப் கிஷன் மாதிரி இரண்டு சைஸுக்கு ஒரு ஆசாமி இந்திய – தெ. ஆப்பிரிக்கா கிரிக்கெட் மேட்ச் நடக்கிற எல்லா கிரவுண்டுக்கும் தவறாமல் வந்து ஒரு ஹூட்டி அடிக்கிறார் பாருங்கள். இரண்டாவது டெஸ்டின் முதல் நாள், இந்தியர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட கிரிஸ்டன் ஒவ்வொரு ஃபோர் அடிக்கும் போதும் கேமரா இந்த இரண்டு கால் அப்புவிடம் போய் விடுகிறது. அத்தனாம் பெரிய உடம்பு என்னமாய் வளைந்து, நெளிந்து, குதித்து ஆடுகிறது? கேலரி வாட்ச்மேன் போல இறங்கி நின்று, அத்தனை பேருக்கும் பாட, ஆட, பயிற்சி கொடுத்து உற்சாகம் கூட்டிக் கொண்டே இருந்தார், ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சானலில். அவருக்காக நமக்கு மூச்சுவாங்கியது!

- டிஷ்

# இவைகளால் எய்ட்ஸ் பரவாது



# இவைகளால் எய்ட்ஸ் பரவும்

எய்ட்ஸ் கிருமி உள்ளவருடன்...

- வீட்டில் ஒன்றாகப் பழகுவதன் மூலம்.
- வேலை செய்யுமிடத்தில் ஒன்றாகப் பழகுவதால்.
- தட்டு, தம்ளர், கப், ஸ்பூன் ஆகியவற்றை சேர்ந்து உபயோகிப்பதால்.
- உணவு, தண்ணீர் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதால்.
- அவர் உபயோகிக்கும் கழிவறை அல்லது குளியல் தொட்டியை பயன்படுத்துவதன் மூலம்.
- முத்தமிட்டுக் கொண்டால்.
- இருமல் மற்றும் தும்மல் தெறித்துவிட்டால்.
- நோயினால் பாதிக்கப்பட்டவருடன் சேர்ந்து விளையாடுவதன் மூலம்.
- கை குலுக்குவதன் மூலம்.
- நோயாளிகளைக் கடித்த கொசு, மூட்டைப் பூச்சி உங்களைக் கடித்துவிட்டால்.
- கண்ணீர், உமிழ்நீர் அல்லது வியர்வை உங்கள்மேல் படுவதால்.
- எய்ட்ஸ் கிருமி உள்ளவரின் சிறுநீர், மலத்தை மிதித்துவிட்டால்.

---

- எய்ட்ஸ் கிருமி கொண்டோருடன் ஆணுறை இல்லாமல் உடலுறவு கொள்வதன் மூலம்.
- எய்ட்ஸ் பரிசோதனை செய்யாத இரத்தத்தை செலுத்துவதன் மூலம்.
- கொதிக்கிற நீரில் சுத்தரிக்கப்படாத ஊசி, கத்தி, பிளேடு மற்றும் பிறவற்றைக் கொண்டு சவரம் செய்வதால், மொட்டை அடித்தல், காது குத்தல், மூக்கு குத்துதல் மற்றும் பச்சை குத்திக் கொள்வதன் மூலம்.
- எய்ட்ஸ் கிருமி கொண்ட கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து குழந்தைக்கு, கர்ப்பிணிப் பெண்ணுக்கு எய்ட்ஸ் நோய் வந்திருந்தால், அவளால், அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் வரலாம்.

மேலும் விவரங்களுக்கு:

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008. போன் : 8255261 / 8255467 / 8254917

24 மணிநேரமும் இயங்கும் ஹாட் லைன் : 8256882 / 8256864

## எய்ட்ஸ்த் தடுக்க ஆணுறை உபயோகியுங்கள்

R K SWAMY/BBDO TNSACS 10022 TAM

✉ தலையங்கம் படித்தேன். இப்படி 'மக்களுக்கு எதிரான மாபெரும் மோசடி'த்தனமான திட்டத்திற்கு பி.ஏ. சங்மா போன்ற 'மிஸ்டர் கிளீன்'களே முன்நிற்பது வேதனையளிக்கிறது. இது நிறைவேறினால்... அரசியல் எலிகள் இனி பாதுகாப்பு பொந்துக்குள் சுகமாகப் பதுங்கிக் கொள்ளும். மக்களாகிய நாமாவது விழிப்போடு இருப்பது மிக அவசியம்!
சேலம், சூர்யநிலா.

✉ சபாநாயகர் சங்மாவின் ஆலோசனை நடவடிக்கைகளும், பிரதமர் தேவேகௌடாவின் கோபமும் அதிர்ச்சியூட்டுகிறது. எம்.எல்.ஏக்களும், எம்.பிக்களும் ஊழல் தடுப்பு சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கும் வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க என்ன அவசியம்? இது மக்களுக்கு எதிரான மாபெரும் மோசடி இல்லாமல் வேறு என்ன?
திருச்சி - 20,
அ. அனீஸ் ஃபாத்திமா.

## தாங்காதுடா சாமி!

✉ கிறிஸ்துமஸ் நேரத்தில் சகோதரர் பால் தினகரனின் பேட்டியை வெளியிட்டதோடு, போட்டி (ஜாலி)யையும் கிறிஸ்துமஸ் சார்ந்ததாகவே தேர்ந்தெடுத்த உம்மை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!
பெண்ணாடகரம்,
பெண்ணை சி. முருகன்.

✉ தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருக்கும் லெட்டர் பேட் கட்சிகள் போதாதென... எஸ்.எஸ்.ஆர். பேரில் இன்னொரு லெட்டர் பேடா? தாங்க முடியாதுடா சாமி...!
திருச்சி - 14, ராஜிராதா.

✉ எஸ்.எஸ்.ஆர். ஏன் இவ்வளவு குழப்பத்திலிருக்கிறாரோ! எம்.ஜி.ஆருக்குப் பிறகு இவர் தானாமா? ஹா... ஹா... ஹா. செம ஜோக்குங்க!
மயிலாடுதுறை,
தினாசனா. திருமலைராயன்.

✉ "எழுத்தாளர் அசோகமித்திரனுக்கு சாகித்திய அகாதமி விருது" - கட்டுரையில் சாகித்திய அகாதமி விருது பெற்ற அவரது "அப்பாவின் ஸ்நேகிதர்கள்" எனும் நூலினைப் பற்றிய விவரங்கள் ஒன்றும் குறிப்பிடாமல் விட்டு விட்டீர்களே!
திருவனந்தபுரம், ஜி. சுப்பையன்.

(ஒரு முழு நாவல், ஒரு நெடுங்கதை, சில சிறுகதைகள் அடங்கிய அத்தொகுப்பில் அசோகமித்திரனின் விஸ்வரூபத்தை வியப்போடு பார்க்கலாம். 'விழா மாலைப் பொழுதில்' என்கிற அத்தொகுதியிலுள்ள நெடுங்கதை - நெடுங்கதை முயற்சிகளில் ஒரு மைல் கல். - ஆர்.)

✉ 'அனந்து' என்பவர் யார் என்று நான் அவ்வப்போது யோசிப்பேன். விடை மட்டும் கிடைக்காது. அனந்துவைப் பற்றி சுருக்கமாக, நறுக்குத் தெறித்தாற் போல் தேவையான தகவல்களை வெளியிட்ட கல்கியைப் பாராட்டுவதைத் தவிர வேறு வழியில்லை.
திருப்பூர் - 4, திருப்பூர்பாசு.

✉ 'சசிகலாவுக்கு சட்டம் தெரியாது' என்று ஜெ. சொன்னதாக வாசகர் எழுப்பிய கேள்விக்கு, "சுருட்டத் தெரிந்திருக்கிறதே!" என்ற தராசுவின் பதில் நெத்தியடி! துலாக்கோல் சீர்தூக்கிப் பார்த்தே பதிலளித்திருக்கிறது!
பு. புளியம்பட்டி,
அ. கிருஷ்ணகுமார்.

✉ "சேனாதிபதி"யில் சத்யராஜ் நடிப்பை சரியான இடத்தில் பாராட்டி, படத்தின் மதிப்பினைக் கடைசி வரியில் சுட்டிக் காட்டி, நிறைவான விமர்சனம் எழுதிய ஆர்.பி.ஆரைப் பாராட்டுவோம்!
சிதம்பரம், தருபா. பட்டுதுரை.

✉ நிலாவில் குடியேற எண்ணி செயல்பட்டு வரும் ஜப்பானியர்களின் ஆர்வம் வியப்படையச் செய்தது. நமது அரசியல்வாதிகள் ஜப்பானியர்களை முந்தி விடுவார்களோ? எதில் என்கிறீர்களா? அங்கேயும் போய் எஸ்டேட் வாங்குவதில்தான்!
திருச்சி - 20,
இ. முஹம்மது ஹுசேன்.

✉ தமிழகத்திலேயே உயரமான நடராஜர் விக்கிரகம் பற்றிப் பிரசுரமாகியுள்ளது. அது தவறான செய்தியாகும். உலகிலேயே மிகப் பெரிய நடராசர் சிலை நெய்வேலியில் அமைத்துள்ளார்கள். 10 அடி உயரமும், எட்டேகால் அடி அகலமும் கொண்ட இச்சிலை முழுவதும் பஞ்சலோகத்தாலானது. இதன் எடை 2420 கிலோ. துண்டு துண்டாக இணைக்காமல் ஒரே வார்ப்பில் அமைக்கப்பட்டது.
புதுப்பேட்டை, க. இராமலிங்கம்.

### ரூ. 20/- பரிசு பெறும் கடிதம்

✉ 8.12.96 இதழ் தராசு பதில்கள் பகுதியில் புதிய அரசு தமிழ்நாட்டில் பதவியேற்ற பிறகு செய்துள்ள நல்ல காரியம் குறித்து எழுதியிருந்தீர்கள். சிகரம் வைத்தாற்போன்ற ஒன்று இருப்பதைக் குறிப்பிட மறந்து விட்டீர்கள். தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக உள்ள மாவட்டங்களில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து இருந்த இடைநிலை ஆசிரியர்களை (செகண்டரி கிரேடு) சீனியாரிடி அடிப்படையில் அவர்களின் வீட்டு விலாசத்திற்கு வேலை பெறும் உத்தரவினை அனுப்பி, அந்தந்த மாவட்டங்களில் பள்ளிகளில் காலியாக இருந்த இடங்களில் பணி நியமனம் பெறச் செய்த காரியம். இந்த வகையில் சுமார் பத்தாயிரம் இடைநிலை ஆசிரியர்கள் பணச் செலவு இன்றி பணி வாய்ப்பினைப் பெற முடிந்தது.
கே.ஆர். சொக்கலிங்கம்;
வட்டாரத் தலைவர், தமிழ்நாடு
ஆசிரியர் கூட்டணி,
தேவகோட்டை.

PATHI GROUP

கண்கவர் பட்டு
கண்ணுக்குத் தெவிட்டாத விருந்து.




from the House of Sreemathi

பதி பாஸ்கரையா அண்ட் பிரதர்ஸ்

148, நாகரத்பேட், பெங்களூர் - 560 002.
போன் : 2224093, 2237870, பேக்ஸ் : 080 2224093,
கிராம்ஸ்: 'பதிசில்க்ஸ்'

Sarees processed at PATHI DESIGN®

Creat/PB/025

**பா**கிஸ்தானிலிருந்து அந்தக் குடும்பத்தின் ஒரு பகுதியினர் 1951-ல் இந்தியா வந்தபோது, அவர்கள் நோக்கம் ஒன்றுதான்! பிஸினஸ். ஏற்றுமதி வியாபாரம். வாழ்க்கை, லட்சியம், கனவு, முயற்சி எல்லாம் அதில்தான்.

முயற்சி பலித்தது. ராஜிந்தர் வதேராவின் குடும்பம் நடத்திய ஏற்றுமதி வியாபாரம் அமோக வெற்றிகாண, இன்று தில்லியில் அவர்கள் குறிப்பிடத்தகுந்த பெரும்புள்ளி.

இந்தப் பெரும்புள்ளிக் குடும்பம், மிகப் பெரும்புள்ளிக் குடும்பமாகப் போகிறது. பிப்ரவரி ஐந்தாம் தேதிக்குப் பிறகு.

மொராதாபாத் நகரத்தில் பித்தளைப் பொருட்கள் தயாரிப்பு பிஸினஸ் நடத்தும் ராஜிந்தர் வதேரா, நேரு குடும்பத்தின் சம்பந்தி ஆகப் போகிறார். விஷயம் விளங்கியிருக்கும். பிரியங்காவின் காதலர் ராபர்ட்டின் தந்தைதான் இந்த ராஜிந்தர் வதேரா. ராபர்ட், முன்னாள் பள்ளி ஆசிரியையான தமது அம்மா மாரீனுடன் டெல்லியில் தங்கி நகை ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கிறார்.

"பிரியங்கா எங்கள் வீட்டுக்கு மருமகளாக வரப்போகிற தினத்துக்காக எங்கள் குடும்பமே ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறது"என்று பெருமை பொங்கச் சொல்கிறார் ராஜிந்தர்.

மகன், தாம் நடத்தும் பொன்நகை ஏற்றுமதி வியாபாரத்தில் மட்டுமல்ல; காதலிலும் வெற்றி கண்டதில் தந்தைக்கு ஏகப் பெருமை.

சும்மாவா? ஆறு வருடக் காதல். ராபர்ட், ராகுல்காந்தியின் நண்பர்; அதன் மூலம் பிரியங்காவுக்கு அறிமுகம் என்றெல்லாம் செய்தி வந்தது.

விஷயம் என்னவென்றால், ஒரு பார்ட்டியில்தான் இருவரும் முதல் முதலில் சந்தித்திருக்கிறார்கள். ராபார்ட்டின் குணம், பேச்சு, பழக்கம் எல்லாம் பிரியங்காவுக்குப் பிடித்துப் போக, கறுப்புப் பூனை பாதுகாப்புப் படை பின்தொடர, அடிக்கடி ராபர்ட்டை அவரது பட்டறையில் போய்ச் சந்திக்கத் தொடங்கியிருக்கிறார் – ராஜீவ் உயிரோடு இருந்தபோதே! அப்போது சற்று நெருக்கமான நட்பு மட்டும்தான்! காதலானதெல்லாம் பிறகுதான்.

"பிரியங்காவுக்கு நகை டிஸைன் செய்வதில் ஆர்வம் உண்டு. அதனால்தான் ராபர்ட்டின் கலைக்கூடத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கினார். தில்லியில் நடந்த சர்வதேசப் பொருட்காட்சி ஒன்றில் ராபர்ட் கலந்து கொண்டு கண்காட்சி

• பிரியங்கா



# காதல் சக்ஸஸ்!

வைக்க மிக உதவியிருக்கிறார்" என்கிறார் ராஜிந்தர்.

**ரா**பர்ட் தரப்பில் இந்தக் காதலுக்கு உற்சாகமான பச்சைக் கொடிதான் என்றாலும் சோனியாவின் சம்மதம் அத்தனை சுலபத்தில் கிடைத்து விடவில்லை.

அவர் மகா மௌனம் சாதித்துக் கொண்டிருந்த சமயத்தில் பத்திரிகைகள் தம் இஷ்டத்துக்கு 'சோனியா எதிர்ப்பு', 'கண்டனம்' என்று தலைப்புச் செய்திகள் போட்டுக் கொண்டிருந்தன.

"இந்த வருஷம் பிரியங்காவுக்கு அமோகமாக இருக்கும்" என்று பிரபல ஃபெமினா பத்திரிகை ஜோசியர் எந்த முகூர்த்தத்தில் சொன்னாரோ, சோனியாவின் மௌனம் கலைந்து, திருமணம் நிச்சயமாகி, தேதி அறிவித்து விட்டார்கள்.

நேரு குடும்பத்துக் கல்யாணம் என்றால் மிகப் பிரும்மாண்டமாக நடக்கும் என்று எதிர்பார்த்தால், அந்த நம்பிக்கை வீண். படு சிம்பிளாக நடத்தப் போகிறார்கள். அழைப்பிதழ்கள் கூட எண்ணி எண்ணியே அச்சிடப்படுகின்றன என்றால் பார்த்துக் கொள்ளவும்.

தேவேகௌடா, ராவ், சந்திரசேகர், அமிதாப் போன்ற சிலருக்கு மட்டுமே வி.ஐ.பிக்கள் லிஸ்டில் அழைப்பு.

முன்னாள் பிரதமர் வி.பி. சிங்குக்குக் கூட அழைப்பு போகுமா என்பது சந்தேகம்தான் என்கிறது டில்லி வட்டாரம்.

(ராஜீவ் கொலை வழக்கில் வி.பி. சிங் சாட்சி அளிக்க வந்த நாட்களில் பிரியங்கா படுசீரியஸாக அமர்ந்து அவரைக் கவனித்துக் கொண்டிருந்ததை மறக்க முடியுமா?)

**மு**க்கியமான விஷயம் – இருக்கிற சூழ்நிலையில் சோனியா வராவிட்டாலும் பிரியங்காவாவது அரசியலுக்கு வர வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் விரும்பிக் கொண்டிருக்க, "என் மருமகள் அரசியல் பக்கம் போக மாட்டாள்" என்று உறுதியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார் ராஜிந்தர் வதேரா. "சோனியாவே அதை விரும்பவில்லை" என்று பின்குறிப்பு வேறு.

"நாங்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. நேருவின் கொள்ளுப் பேத்தி, எங்கள் குடும்பத்துப் பெண் ஆகிறாளா! சந்தோஷம்! சந்தோஷம்!" என்று எகிறிக் குதிக்காத குறையாகப் புல்லரிக்கிறார் ராபர்ட்டின் தாய்மாமன் சுராஜ் பிரகாஷ் வதேரா.

பிற உறவினர்களோ இன்னும் புளகாங்கிதம் அடைகிறார்கள் : "ராபர்டின் அக்கா மைகேலின் கல்யாணத்தில்தான் நாங்கள் ப்ரியங்காவை முதன் முதலில் பார்த்தோம். ரொம்ப எளிமையான, ப்ரியமான பெண். இப்பவே எங்க குடும்பத்தில் ஒருத்தியா ஆயிட்டா. எங்க வீட்டுக்கெல்லாம் வந்தால், சமையல், எடுபிடின்னு எல்லா வேலையையும் இழுத்துப் போட்டுக்கிட்டுச் செய்வா..." என்கிறார்கள்.

நம் ஊர் ஜோசியர்களோ, இன்னமும் பிரியங்கா பிரதமராவார்; ராகுல் ஜனாதிபதி ஆவார் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**— சித்தார்த்**

அட்டை வண்ணப்படம் - நன்றி : **ஃப்ரண்ட் லைன்**

# நுக்கள்

## நாளையும் மனிதரும்

நேற்றிருந்தார். இங்கே நின்றிருந்தார். என்னோடு பேசினார். சர்க்கரை இல்லாத ஸ்டிராங் காப்பி கேட்டார். வசந்த பவனில் இருந்து ஜீரா ஒழுகுகிற ஜாங்கிரி வேணும் என்று குழந்தையைப் போலப் பிடிவாதம் பிடித்தார். இங்கே வீற்றிருந்தார். எமன் யாருக்கும் தெரியாமல், எருமை வாகனத்தில் வந்து இறங்கினான். அவன் தப்பான கதவுகளைத் தட்டுவதே இல்லை. அவன் அழைத்துச் செல்லும் நபர்கள் சரியான நபர்கள் என்றும் சொல்வதற்கில்லை. சில சமயம், கொழுந்துகளைக் கொய்து, சருகுகளை விட்டு வைப்பான். அவன் கணக்கு விசித்திரக் கணக்கு. பாவம்... ஆள் போய் விட்டார். உறவினர்கள் அரிசி இடுங்கள். பால் தெளிக்க எல்லோரும் வாருங்கள். நீரினில் மூழ்கி நினைப்பொழியுங்கள். ஆமாம். சுந்தா மாமா போய் 16 ஆயிடுத்தா... பாவம். நல்ல மனுஷ்யன். என்ன சாப்பிடுகிறீர்கள், காப்பி, டீயா, ஃபான்டாவா? மாமி. இந்த ஷிபான் என்ன விலை, ஆளைத் தூக்கி அடிக்கிறதே... என்னதான் சொல்லுங்கள். இந்த கோமு மாமி செலக்ஷன்னா, சூப்பர் செலக்ஷன்தான். 'கோரா' கட்டினாக் கூட, காஞ்சிபுரமா மாறிடுத்தே, மாமியண்டை!

தேவகி மாமி, சாப்பிட்டு முடித்து, வெற்றிலை போட்டுக் கொண்டாள். பிந்துவும், ஜானு மாமியும் அவள் முன் அமர்ந்து தேவகியை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கென்ன மாமி... கடவுள் கிருபையாலே, பட்டினி இருக்கணும்னு என் தலையிலே எழுதி இருக்கலை. பென்ஷன் வருது. ஹாய்யா, கால் மேல காலைப் போட்டுண்டு என் காலம் ஓடிடும். இந்தக் குட்டிக்கு என்ன பண்றதுங்கறதுதான் என் கவலை. அந்தக் கபோதி, திடுதிப்புன்னு காணாமே போயிட்டான், பார்த்தீங்களா?"

"இல்லேடி, தேவகி. பையன், பெரிய வேலைக்கு இன்டர்வியூவுக்கு பம்பாய் போனதா, ஜனனிதானே சொன்னாள்."

"இதுங்களுக்குள்ளே, என்ன திரிசமனோ? யாருக்குத் தெரியுது, சொல்லுங்க. இன்னும் பத்து நாள் பார்க்கப் போறேன். அந்த ஆல் பர்ட்டோ, ஆல்பகடாப்பழமோ வரலேன்னு வச்சுக்குங்கோ. கிராமத்திலேர்ந்து என் தம்பியை இட்டாந்து, கல்யாணத்தை நடத்தி வைக்கத்தான் போறேன். நீங்களே பாருங்கோ... அப்போ தெரியும், இந்த தேவகியோட சாமர்த்தியம்."

பிந்து ஆச்சர்யப்பட்டுப் போனாள். பழைய தேவகி எங்கே மறைந்தாள்? எப்போதும் வீட்டின் மூலையில், சோர்ந்து, தன்னால் என்ன ஆகும் என்று ஏங்கி, சிடுசிடுத்துக் கொண்டு, சண்டைக்கும், அழுவதற்கும் எப்போதும் தயாராக நிற்கிற அந்தப் பெண் எங்கே மறைந்து போனாள்? வீட்டுக்குத் தலைவியாக, கெத்தாக உட்கார்ந்து கொண்டு, இதைச் செய்தே தீருவேன் என்று சவால் விடுகிற புதிய பெண், எந்தத் தரையைப் பிளந்து கொண்டு தோன்றி இருக்கிறாள்? தேவகியை மாற்றிய மந்திரக் கோல் எது?

திரும்பி வருகிறபோது, பிந்து, ஜானு மாமியிடம் தன் ஆச்சர்யத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

"அதுவா? எனக்குப் புரியறது. தேவகி, உட்கார நாற்காலி தேடி



பிரபஞ்சன்

அலைஞ்சுகிட்டு இருந்தா. பாவம். அந்த வீட்டுக்குள்ளே ஒரே ஒரு நாற்காலிதான். அதுல, சுந்தா சார் ஏறிச் சட்டமா உட்கார்ந்துட்டார். அவர் வைச்சதே சட்டம். அவர்தான் கோடு கிழிப்பார். தாண்டமாட்டாத சீதையா இருந்தா, தேவகி. இப்போ, அந்த நாற்காலியில உட்கார யாரும் கிடையாது. இவன் ஏறி உட்கார்ந்துகிட்டா. இதுதான் தேவகி. இந்த உறுதியும், இந்தத் தீர்மானமும்தான் தேவகி. அதுக்கு வாய்ப்பு சுந்தா சார் இருக்கிற வரைக்கும் கிடைக்கல்லை. இப்போ கிடைச்சு இருக்கு. அமல்படுத்தறா. இதுதான் தேவகியோட முகம். நேருவுக்குத்தான் இந்திரா பிறப்பாளா, என்ன? வாய்ப்பு கிடைச்சா, தேவகி, நீ, நான் எல்லாருமே வேலுநாச்சியா, லட்சுமிபாயாத்தான் இருப்போம். என்ன பண்ண? நம்ம தலையெழுத்து வத்தக் குழம்பும், சுட்ட அப்பளமும், பிள்ளையார் மாதிரி வயித்தை வச்சுண்டு பிள்ளையாண்டிருக்கிற ஜென்மமா போயிடுத்து. நமக்கெல்லாம் ஏதுடி ஆகஸ்டு 15? நமக்கு இன்னும் அது வரல்லை..."

ஜானு மாமி சொல்லச் சொல்ல மத்தாப்பு பூச் சொரியல் மாதிரி, வண்ண வண்ணமாகக் கனவுகள் வெடித்தன பிந்துவுக்கு.

"புதுசு புதுசா என்ன என்னமோ சொல்றீங்க மாமி."

"சரியாத் தோணுதா, இல்லையா?"

"சரின்னுதான் படுது. தப்பாத் தெரியலை. ஆனா, தேவகி மாமிக்கு 'ஸ்வயம்', புருஷன் மரணத்திலே கிடைச்சிருக்கே..."

"கஷ்டமாத்தான் இருக்கு, எனக்கும். உண்மை அதுதானே? என்ன கார்வார், என்ன அலட்டல், அந்த சுந்தா சாருக்குத்தான். பெண்டாட்டியைப் பேச விட்டாரா, அந்த மனுஷன். அடக்கி வைச்சார். இப்போ,



வெடிச்சு மேலே வர்றது."

"பாவம்"

"யார்?"

"எல்லோரும்தான், தேவகி. நான், நீங்கள். எல்லாரும்தான். யார்தான் பாவம் இல்லை?."

"எனக்குச் சுந்தா சார்தான் பாவம்னு தோண்றது. அவர் எதையெல்லாம் இழந்தார்? தேவகி சிரிச்சா, கன்னத்திலே குழி விழறதே, அதை அந்த மனுஷன் அநுபவிக்க இருப்பாரோடி? நின்னா, ஆறடிக்கு உசரமா நிக்கறானே, அந்த ஆகிருதியை அநுபவிச்சிருப்பாரோ? சீன்னு சிணுங்கற பொய்க் கோபத்தை, 'ஐயே'ன்னு சொல்லற ஆசையை, உடம்பு விண்ணுன்னு தெறிக்கிற சந்தோஷத்தை, ஓடிவந்து மேலே தொப்புன்னு விழற உற்சாகத்தை, அன்பை, காதலை அநுபவிச்சிருப்பாரோ, அந்த அந்தகன் சுந்தா சார்? ஊஹும். எப்பவும் கையில பிரம்பை வச்சுண்டுன்னா கார்வார் பண்ணினார்? காதல், அடிமைத்தனத்திலே பிறக்காதுடி. பிந்து. கட்டற்ற சுதந்திரம்னா காதல்?"

"மாமி. எனக்கென்னு தோணுது. சொன்னா கோவிச்சுக்கப்படாது."

"என்ன?"

"நீங்க, நூறு ஆம்பிளைகளையாவது, குறைந்தபட்சம் காதலிச்சு இருக்கணும்."

"அடி செருப்பாலே."

பிந்து ஓட, மாமி சின்னக் குழந்தை மாதிரி அவளைத் துரத்திக் கொண்டு ஓடினாள்.

அதிகாரி பூஷணத்துக்கு முன்னால், அடக்கமாக அமர்ந்திருந்தார் சபேசன்.

பூஷணத்தின் மூக்கு, அதிகமாகச் சிவந்து போயிருந்தது. தேய்த்து, தேய்த்து, அந்த மூக்கு, கோவைப்பழத்தைக் கண்களுக்கிடையே வைத்த மாதிரி இருந்தது. அதைச் சற்றே உறிஞ்சிக் கொண்டார்.

"சபேசன். உம்மகிட்ட ஒரு உதவி ஆகணும்."

## கதைச் சுருக்கம்

அனுவும் சபேசனும் புதுமணத் தம்பதிகள். காலனிக்குள் குடி இருக்க வருகிறார்கள். அவர்களுக்கு எதிர் போர்ஷன்- வள்ளி, அர்த்தநாரி தம்பதிகள். சபேசனும் அர்த்தநாரியும், கட்டடப் பொதுப்பணித்துறையில் பணி செய்பவர்கள். சபேசன் பேராசை அற்றவன். சம்பளத்துக்குள் தன் வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டு, சுத்தமான வாழ்க்கை வாழ்பவன், வாழ நினைப்பவன். அனுவோ அவனுக்கு நேர்எதிர். உலகத்துச் சுகங்கள், கொல்லைப்புற வழியாக வந்தாலும் ஏற்க வேண்டும் என்பவள். எதிர் போர்ஷன் வள்ளியோ, அநியாயமாக வருகிற ஒற்றைக் காசுக்கும், அவமானப் படுகிறவள். அவள் கணவன் அர்த்தநாரியோ, காசுக்காக எதையும் விற்கிற மனிதன்.

காலனியில் 'ராஜாவாக' இருந்தவர் சுந்தா சார். எதிலும் எங்கும் சுத்தமும், ஒழுங்கும் அவர் உயிர்மூச்சு. அவர் மகள் ஜனனி, ஆல்பர்ட் என்கிறவனோடு சிநேகம் கொள்கிறாள். மகாபலிபுர ஹோட்டல் அறையில் இருந்த அவர்களைப் போலீஸ் பிடிக்கிறது. செய்தி தெரிய வந்த சுந்தா தற்கொலை முயற்சியில் உயிர் துறக்கிறார். ஆல்பர்ட்டோ, கொஞ்சம் கொஞ்சமாக ஜனனியைத் தவிர்ப்பவன் என்று கருதப்படுகிறான். இவர்களை இணைக்கும் முயற்சியில் நல்ல உள்ளம் கொண்ட ஜானு மாமி, பிந்து போன்றவர்கள் ஈடுபடுகிறார்கள். ஒரு கட்டத்தில், ஜனனியின் தாய் தேவகி, ஊரில் இருக்கிற தன் தம்பிக்கே ஜனனியைத் திருமணம் செய்யத் தீர்மானிக்கிறாள். அலுவலகத்தில் நெருப்பாக இருக்கிற சபேசனை, அவன் மனைவி அனு மூலம், தங்களுக்குச் சாதகமாக வளைக்க ஒரு முயற்சி நடக்கிறது. அவர்கள் கொடுத்த பணம், பட்டுப் புடவையைப் பெற்றுக் கொள்கிறாள், அனு. செய்தி அறிந்த சபேசன் தன் மனைவியைத் தேடி வருகிறான்.

இனி...

"சொல்லுங்க சார்" என்று வியந்தபடி சொன்னான் சபேசன். பூஷணம், நகைச்சுவையாகப் பேசுகிறாரா, என்ன?

"அந்தச் சிவம்னு ஒருத்தர் காண்டிராக்ட் பைல் உம்மகிட்டதானே இருக்கு... அதை என்னண்டை இன்னமும் அனுப்பக்காணமே."

"அது... சிவம், ஒரு மோசடிப் பேர்வழி சார். சிமெண்ட்டுக்கு பதிலா, சாம்பலைக் கலக்கிற அயோக்கியன்."

"அந்தப் பள்ளிக்கூடத்தை ஒழுங்கா பண்ணினாப் போல தோணுதே."

"அதை இன்ஸ்பெக்ட் பண்ணினது நான்தான் சார். அது ஒரு மோசடி வேலை."

"நான் பார்த்தேனே.. நன்னா இருந்த மாதிரி தோணிச்சே."

"தெரியாது சார். அந்தச் சிவம், ஜேயி. ஏரியா மேஸ்திரி எல்லாருமே தப்பு பண்ணி இருக்காங்க. நமக்குத் தெரியும் சார். நாம் டெண்டர் விடறப்போ, நியாயமான கூலி போடறது இல்லை. அவர்களும் குறைச்சு டெண்டர் போடறாங்க. திருட்டுத்தான் செய்வாங்க. அதை நாம் கண்டுக்கிறது இல்லை. அதுக்காக அநியாயமா, வெறும் சாம்பலைக் குழைச்சு பூச நாம் அனுமதிக்க முடியாது. இல்லையா? நாளைக்குக் கட்டடம் இடிஞ்சு விழுந்தா, யார் பொறுப்பு?"

"நான் ஏத்துக்கறேன். நீங்க இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டை மாற்றி எழுதுங்க."

"அது முடியாது சார். மன்னிக்கணும்."

"அவர் பெண்ணுக்குக் கல்யாணம் வச்சுட்டாராம். கொஞ்சம் நாமும், மனுஷத்தனமா நடந்துக்கிடணும் இல்லையா?"

சபேசன் வியந்தான். ஒரு அயோக்கியனுக்கு என்ன, பரிந்துரை? எதனால்? நெருப்பு மாதிரியான ஒரு ஆபீசரைக் குளிர்வித்த நீர் யார்? என்ன நடக்கிறது, இங்கே?

சபேசன் எழுந்தான்.

"சாரி சார்" என்றபடி வெளியே வந்தான்.

*ஸ்ரீ ராமஜெயம்* **Ph: 8542144**

## வடமாநில புனித யாத்திரை

**2.5.97: இது 16 நாட்கள் கொண்டது.** பூரி ஜெகன்னாத்-கோனாரக்–புவனேஸ்வர்- கயா-புத்தகயா-நேபாளம்-போக்ரா. அலகாபாத்–அயோத்தியா–காசி. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 3600.

**2.5.97: இது 30 நாட்கள் கொண்டது.** பூரி ஜெகன்னாத்-கோனாரக்-புவனேஸ்வர்-கயா-புத்தகயா-நேபாளம்-போக்ரா-அலகாபாத்–அயோத்தியா-காசி-நைமிசாரண்யம்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-பத்ரிநாத்–கேதார்நாத்-நியூடெல்லி-ஆக்ரா-மதுராபிருந்தாவன். நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 6800.

**10.5.97: இது 21 நாட்கள் கொண்டது** அலகாபாத் (அயோத்தியா) கயா-புத்தகயா-காசி-ஹரித்துவார்-ரிஷிகேஷம்-பத்ரிநாத்-கேதார்நாத்-நியூடெல்லி-ஆக்ரா-மதுராபிருந்தாவன். நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 4600.


**2.7.97: இது 31 நாட்கள் கொண்டது.** பூரி ஜெகன்னாத்-கோனாரக்-புவனேஸ்வர்-கயா-புத்தகயா-அலகாபாத்-காசி-ஹரித்துவார்-ரிஷிகேஷம்-பத்ரிநாத்-கேதார்நாத்-நியூடெல்லி-ஆக்ரா-மதுரா-சிம்லா-குளு-மணலி-வைஷ்ணவிதேவி-குருக்ஷேத்திரம்-ஜெய்ப்பூர்-நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 7200.

ஆங்காங்கு தங்கும் அறைகள், ஊர் சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராமணர்களைக் கொண்டு காலை காப்பி-டிபன், மதியம் இரவு நல்ல உணவு பரிமாறுவதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்து செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை.

வடமாநில யாத்திரையில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பெற்ற அனுபவத்துடன் மிகசிறப்பான முறையில் நடத்தி வருகின்றோம்.

**L.T.C.** வசதியில் வருபவர்களும் மற்றவர்களும் மிகவும் விரைவில் தெரியப்படுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு:



### ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

நெ.4. வெங்கடாசல செட்டித் தெரு, (Near Kasturibai Hospital) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. போன்: 8542144



## மாதாஸ்ரீ ஆஞ்சனேயரம்மா அருள்வாக்கு தருகிறார்....

திருமணம், புத்திரபாக்கியம், இடமாற்றம், நியூமராலஜி, நேமாலஜி, வழக்கு விவகாரம், சினிமா, அரசியல், குழந்தைகள் கல்வி, மற்றும் ஆன்மீகம்.

இவற்றில் எந்தவிதமான பிரச்னையாக இருந்தாலும் சரி வாய் மடிந்த நிலையில் ஆஞ்சனேயனே அருள்வாக்கு தரும் அற்புதத்தைக் காண வாருங்கள்.

**பார்வை நேரம் :** காலை 10 மணி முதல் 1 மணி வரை
மாலை 5 மணி முதல் 7 மணி வரை

**S. JANAKAVALLI**
**ANJANEYAR AMMA**

**Plot No. 1107, Bobbili Raja Salai,**
**K. K. Nagar, Chennai - 600 078. Phone : 484 39 43**

***(கடிதத் தொடர்பு கிடையாது)***

**- ADVT**

புத்தாண்டுப் பரிசாக
நண்பர்களுக்கு வழங்கிமகிழ்



ஜனகன் எழுதிய

**பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி**

(ரமணரின் ஆன்மிக வரலாறு)



விலை ரூ. 30

**கங்கை புத்தக நிலையம்**
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை – 600 017.

---

நமக்குத் தேவை சுத்தமான தண்ணீர் ஆரோக்கியமான உடம்பு ஆம் கொசுகளுக்கும் இதுதான் தேவை. நம் ஆரோக்கியமான உடம்பு கொசுக்களுக்கு அல்ல. கொசுத் தொல்லையிலிருந்து உடன் விடுதலை பெற உங்கள் வீட்டு ஜன்னல் மற்றும் பாத்ரூம் வென்டிலேஷன்களுக்கு ..

**NETLON®**

கொசுவலை பொருத்துங்கள்
Durable & Economical
For further Details

**B.B.Marketing**
28. Mahathma Gandhi Road,
Kumaran Nagar, Padi,
Chennai-50 PH. 625 9727

தமிழகத்தில் எந்த பகுதியிலிருந்தும் ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

---

OM SRI SAI RAM

**GOOD NEWS TO ALL SAI DEVOTEES**

**YOU CAN NOW OWN YOUR SITE AT 'PUTTAPARTHY' EASILY AT CONCESSIONAL RATES &, ON CONVENIENT INSTALMENTS**

Inclusive of all facilities like own water supply with overhead tank, 33' roads, parks, prayer hall, play grounds, common civic amenity areas, electricity, PUDA approval, registration fee, documentation & administrative expenditures, the price of each plot is just,

**30' x 40' : Rs. 30,000 & 40' x 60' : Rs. 58,000**

(about four times less than the prevailing rate)

only limited plots are made under this arrangement and number of plots have already been booked. Therefore Sai Devotees who are not aware of this are requested to avail this rare opportunity and *BE THE EARLY BIRDS*. This opportunity will not be available again. Besides the price advantage, this arrangement helps the devotees in avoiding the botheration of running around to various authorities and wasting their money and time for every thing and also the attendant risks they might face in property dealings at a new place, middlemen dealings etc.,

PAYMENT TERMS: *50 % on booking and balance in FOUR equal monthly instalments. Registration will be made immediately on full payment.*
Payments by DD drawn on any Bank at PUTTAPARTHY in favour of "TRAYEE SAI BUILDERS"

This arrangement made with service motive is a Rare Opportunity. Don't Miss. For further details contact or write to:

**TRAYEE SAI** Travels and Hi-Tech Services. No.119/120, I Floor, Old Madras Road, Ulsoor, (Opp. Govt. L.F. Dispensary), BANGALORE - 560 008. Phone: (080) 568435 / 5546469 / 8600708 / 8600639 ; Fax: (080) 5546469. OR

**TRAYEE SAI BUILDERS,** C/O. SAI SHIVA Real Estates, Opp. Ganesh Gate, (Near Bus Stand), Prashanthi Nilayam P.O., PUTTAPARTHY, Anantapur Dist., PIN : 515 134. Phone: (08555) 87317 Fax: (08555) 87317. OR HYDERABAD Phone : (040) 313260; BOMBAY: Phone: (022) 7671410.

தன் இருக்கையில் அமர்ந்தான். ஊழல் பைலைத் தன் அலமாரிக்குள் வைத்துப் பூட்டினான். வீட்டுக்குப் புறப்பட்டான். உலகம் இருண்டிருந்தது.

அனு. தோட்டில் இறங்கி இருந்த எண்ணெய்யை எடுப்பதற்கு நகைக்கடையில் கொடுத்திருந்த நகையை வாங்கிக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தாள். தன் பிளாட்டுக்கு வெளியே ஒரு நபர் நின்று கொண்டிருந்ததை அவள் கண்டாள். அருகில் வந்ததும், "யார்?" என்றாள்.

"மேடம். என் பெயர் சிவம். உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். மிஸ்டர் சபேசன் சார்கிட்டேதான் வேலை பார்க்கிறேன். நான் ஒரு கான்டிராக்டர்."

"வாங்க..." என்றபடி கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள், சிவத்தை அமரச் சொன்னாள். பேனைப் போட்டாள். அவன் முன் அமர்ந்தாள்.

"என்ன விஷயம்?"

சிவம், ஒரு பெட்டியைத் திறந்தான். 'கேரி பேகில்' இருந்த பட்டுப் புடைவையை எடுத்து அவள் முன் வைத்தான். புடைவை, கருஞ் சிவப்பு வர்ணத்தில், தங்கச் சரிகையுடன் தக தகத்தது. அனுவின் கண்கள் விரிந்து, புருவம் நெற்றிக்கு ஏறியது.

"என்ன விலை?"

"ரொம்ப இல்லை மேடம். வெறும் பதினைஞ்சு ஆயிரம்தான்."

திகைப்பு மாறவில்லை, அனுவுக்கு.

"சபேசன் சார் எனக்கு தெய்வம் மாதிரி. அவருக்கு ஏதேனும் செய்யணும்னு இருந்தேன். அவர் எனக்கு உதவி இருக்கிறார். நேரில் கொடுத்தால் மறுப்பார். அம்மா, என் குல தெய்வம் மாதிரி. இந்த ஏழையோட அன்பளிப்பை மறுக்கக் கூடாது."


அனு என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள். ஆசை, அகலமாகத் தன் வாயைத் திறந்து கொண்டு உன்னை விழுங்குவேன் என்று கதறிக் கொண்டு இருந்தது.

சிவம், ஒரு தோள் பையையும் எடுத்து அவள் முன் வைத்தான்.

"மேடம். கொஞ்சம் பணம். வெறும் முப்பத்தைஞ்சு ரூபாய்தான். சார், நேரில் கொடுத்தால் வேண்டாம் என்கிறார். எனக்கு ரூபாய் ஒரு லட்சம் தரத்தான் ஆசை. வேலை முடிஞ்சதும், ஐம்பது தருவதாகச் சொல்லுங்கள். யார் வாங்கலை? உங்கள் எதிர்வீட்டு அர்த்தநாரிக்கு, இதுவரைக்கும் அஞ்சு லட்சம் தந்திருக்கிறேன். சும்மா ஒரு மரியாதைக்குத்தான் மேடம். என் 'பாலிசி' என்ன தெரியுங்களா? நானும் வாழணும். நீங்களும் வாழணும்."

## மருந்து இருக்கிறதா....?

மகாத்மா காந்தியைக் காண ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவர் வந்திருந்தார். அவர் ஆயுர்வேத மருந்தின் சிறப்புகளைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்.



இதனைக் கேட்டுக் கொண்டிருந்த மகாத்மா காந்தி அவர்கள், "எல்லா வியாதிகளையும் ஆயுர்வேத மருந்துகளினால் குணப்படுத்த முடியுமா?" என்றார்.

"முடியும்" என்றார்.

"அப்படியானால். தீண்டாமை என்னும் கடுமையான வியாதி தீர ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்களேன், பார்க்கலாம்" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் மகாத்மா காந்தி!

## பெரிய நடிகன்...!

மோதிலால் என்றொரு நடிகர். ஒரு முறை ஜவஹர்லால் நேரு பயணம் செய்த விமானத்தில் அவரும் பயணம் செய்தார்.



அவர் நேருவிடம் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டார்.

"ஐயா! நான் ஒரு சினிமா நடிகன். என்னுடைய பெயரை உங்களிடம் சொல்ல நா கூசுகிறது. ஏனென்றால் அதுதான் உங்களுடைய தந்தையின் பெயரும். பெயர்கள் ஒன்றாயினும் தங்கள் தந்தையின் சாதனைகள் அதிகம். நான் வெறும் நடிகன். நீங்கள் எப்போதாவது என்னுடைய நடிப்பைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று நேருவிடம் கேட்டார்.

நேரு, "அதைத்தான் இப்போது பார்க்கிறேனே!" என்றார் சுருக்கமாக!

- மேதைகளின் கருத்துக்களஞ்சியம்- என்னும் நூலிலிருந்து: எ. காதர்

அவள் பெட்டியை மூடிக் கொண்டாள். எழுந்தாள்.

"மேடம். எனக்கு நீங்கள் ஒரு சகோதரியைப் போல. என்னிடம் நீங்கள் கூச்சமோ, தயக்கமோ பட வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் கணவர் மட்டும், எனக்கு உதவிகரமாக இருந்தார் என்று வையுங்கள். நாம், சாதனைகள் செய்யலாம்."

அவன் புறப்பட்டான்.

கதவின் அருகில் சென்றவன், திரும்பி அவளிடம் சொன்னான்.

"மேடம், உங்கள் கணவர் ஓய்வு பெறுகிறபோது, என்ன வாங்குவார்? சில லட்சங்கள். சில ஆயிரங்கள் பென்ஷன். ஒரு முழு வாழ்க்கைக்கு ஈடு சில ஆயிரமா? என்ன கேவலம். அந்தச் சமயத்தில் உங்களிடம் குறைந்தது ஒரு கோடியாவது இருக்க வேண்டாமோ?"

அவன் போய் விட்டான். அவள் தந்த தோல் பையை எடுத்து அலமாரிக்குள் வைத்தாள்.

சாம்பிராணி போடப்பட்ட அறை மாதிரி, அவன் போன பிறகும், அவன் இருந்த இடம் மணந்து கொண்டே இருந்தது. என்ன சொன்னான், அவன்?

கோடி! கோடி ரூபாய்.

அப்படியே கல் போலச் சமைந்து போய் அமர்ந்திருந்தாள் அவள். பிரமை தெளிந்து எழுந்தாள். முகம் கழுவிக் கொண்டாள். சந்தனச் சோப்பு நுரைத்து மணந்தது. தலையை வாரிக் கொண்டாள். பவுடர் போட்டாள். ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொண்டாள். அலமாரியைத் திறந்து. கறுப்பு நிற பிளவுசை எடுத்து, சுவர்ப்பக்கம் திரும்பி அணிந்து கொண்டாள். சிவப்பு நிறப் பாவாடையை மாற்றிக் கொண்டாள். புடைவையை மிகவும் கவனமாகக் கட்டிக் கொண்டாள். கண்ணாடி முன் நின்றாள். அவளை அவளாலேயே நம்ப முடியவில்லை.

எங்கிருந்து வந்தாய், அனு? வானத்தில் இருந்தா? பூமியைப் பிளந்து கொண்டா? அப்சரஸ்களில் நீ யார்? ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, இவர்களில் நீ யாரடி? ரோஜா இதழ்களின் சாரம், மல்லிகையின் ரசம், மனோ ரஞ்சிதத்தின் சாறு, எல்லாம் சேர்ந்தவளா நீ? காற்று, தென்றல், உன் இறக்கைகளா?

நீ, மண்ணுலகுக்குத் தப்பாக வந்த விண் மகள்.

அவளுக்கு அதை, அந்தப் புடைவையை மற்றவர்களுக்கு – மற்ற பெண்களுக்குக் காட்ட வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டது.

அனுமார் கோவிலுக்குப் புறப்பட்டாள். அவள் எதிர்பார்த்த மாதிரி நாலைந்து பெண்கள் கோவிலில் இருந்தார்கள். அவர்கள், அனுமாரை மறந்து அனுவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

அவளுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டது. ஜாக்கிரதையாக அந்த மகிழ்ச்சி வெளிப்படாமல் பார்த்துக் கொண்டாள்.

அனு, திரும்பி வெளிச்சம் அதிகமாக இருக்கிற பாதையின் ஊடாக, தன் பிளாட்டுக்குத் திரும்பினாள். வாசலில், சபேசன் நின்றிருந்தான். அவன் முகம், பார்க்க நன்றாக இல்லை.

(தொடரும்)



## தட்டிக் கேட்க முடியாத அட்டிமரி!

கேரளாவில் ஒரு அராஜகம். லாரி வீட்டு வாசலில் வந்து நிற்கும்போதே, ஐந்தாறு பேர் லாரியை வளைப்பார்கள். லாரியிலிருந்து சாமான்கள் ஏற்றுவதும் இறக்குவதும் அவர்கள் ஏக போக உரிமை. இவர்கள் கேட்ட தொகையைக் கொடுத்து விட வேண்டும். பேரம் பேச நமக்கு அதிகாரம் கிடையாது! இந்த அடாவடித்தனத்தை கேரள சர்க்காராலும் போலீஸாராலும்கூட தடுக்க முடியவில்லை. வீடு மாறுதல் மட்டுமின்றி தொழில்துறையிலும் அட்டிமரி உண்டு. மற்ற மாநிலங்களிலிருந்து தொழில் அதிபர்கள் தங்கள் தொழிற்சாலைகளைத் துவக்க முன் வர வேண்டும் என்று கேரள சர்க்கார் காலைப் பிடித்துக் கதறினாலும் இந்த அட்டிமரி ஒன்றே பெரும்பாலான தொழிலதிபர்களை திரும்பிப் பாராமல் ஓடிவிடச் செய்கிறது. ஏன்- கேரளாவையே சேர்ந்த பல தொழிலதிபர்கள்கூட தங்கள் தொழிற் சாலைகளை தமிழகத்திற்கோ அல்லது கர்நாடக மாநிலத்திற்கோ மாற்றிக் கொண்டு போய் விடுகிறார்கள்!

— பிரேம்நரசிம்மன்

இன்றே சேருங்கள்

ஓம் அரஹரம்

# ஸ்வர்ண மாளிகை ஜுவல்லரி

வழங்கும்

## "ஸ்வர்ண புஷ்பம்"


தங்க நகை சிறுசேமிப்பு திட்டத்தில் சேர்ந்து எண்ணற்ற பரிசுகளை வெல்வீர்!

திட்டம் :

மாதம் ரூ. 200/- வீதம் 25 மாதங்கள் கட்ட வேண்டும்.

திட்டம் முடிவில் [ரூ. 5250/-] மதிப்புள்ள நகைகளைப் பெறுவீர்

பரிசுகள் :



**ஜாக்பாட்** – 25 ஆம் மாதம்

**ரூ. 3 லட்சம் மதிப்புள்ள வீடு**

ஸ்வர்ண புஷ்பம் திட்டத்தில் சேரும் அனைவருக்கும் ஒரு தள்ளுபடி கார்ட்

**பம்பர்** – 25 ஆம் மாதம்

1. கைநட்டிக் ஹோண்டா - 3 நபர்களுக்கு
2. 14" கலர் டீ.வி. - 6 நபர்களுக்கு


முதல் குலுக்கல் 31.01.1997

**மினி பம்பர்** – 1, 8, 16 ஆம் மாதம்

பஜாஜ் ஸ்கூட்டர் – 1 நபருக்கு


**மாதாந்திர குலுக்கல் பரிசுகள்** – 25 மாதங்களுக்கும்

1. வாஷிங் மிஷின் – 2 நபர்களுக்கு
2. வெட் கிரைண்டர் – 2 நபர்களுக்கு
3. 2 கிராம் தங்க காசு – 5 நபர்களுக்கு
4. 1 கிராம் தங்க காசு – 8 நபர்களுக்கு



**மொத்த பரிசுகள் ரூ. 20 லட்சம்**

இதை தவிர இத்திட்டத்தில் சேரும் முதல் 2000 நபர்களுக்கு ஒரு அரிய பரிசு



அறிமுகப்படுத்துபவர்களுக்கும் பல பரிசுகள் உண்டு.

மேலும் விவரங்களுக்கு

அணுகுக :

SMJ

**ஸ்வர்ண மாளிகை ஜுவல்லரி.**

19/8, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 61.

போன் : 2345972 ஞாயிறு விடுமுறை

**வெல்லுங்கள் பல பரிசுகளை**

---

மேலும் விவரங்களுக்கு இந்த கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும்.

பெயர் : ..............................................................................................

முகவரி : ..............................................................................................

# புண்ணிய காரியங்களை
# ஸங்கிராந்தியில்
# ஏன் அனுஷ்டிக்க வேண்டும் ?



மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் சூரிய பகவான்.

ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் சூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர் : ஸங்கராந்தி சமயம் சூட்க்ஷமமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

| ராசி | ஸங்கிரமணத்தின் நாமதேயம் | (ப்ருஹஸ்பதி வாக்குப்படி) புண்ணிய காலம் | புண்ணிய பலன் |
|---|---|---|---|
| மகரம் | உத்திராயணம் | பின் இருபது நாழிகை | கோடி புண்ணியம் |
| கும்பம் | விஷ்ணுபதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| மீனம் | ஷடசீதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| மேஷம் | விஷு | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| ரிஷபம் | விஷ்ணுபதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| மிதுனம் | ஷடசீதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| கர்கடகம் | தக்ஷிணாயனம் | முன் இருபது நாழிகை | கோடி புண்ணியம் |
| சிம்மம் | விஷ்ணுபதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| கன்னி | ஷடசீதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| துலா | விஷு | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| விருச்சிகம் | விஷ்ணுபதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |
| தனுசு | ஷடசீதி | முன்பும், பின்பும் பத்து நாழிகை | ஆயிரம் புண்ணியம் |

- ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்


திருமண வைபவங்களுக்கு சீர்முறுக்கு, சீர் அதிரசம், சீர்முள்ளுத்தேன்குழல், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் உண்டு.


Sarathy

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20.
போன் : 4915662, 4914213

# சுட்ட பழம்!

புதிய பகுதி



**அ.தி.மு.க. கஷ்டத்தில் இருக்கும்போதெல்லாம் கட்சியில் இருப்பேன். ஆட்சிக்கு வரும் போதெல்லாம் வெளியே இருப்பேன். என் ஜாதகம் அப்படி.**

**—சென்னை அ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு.**

## கனிந்த சிந்தனை:

'செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்படி ஜாதகத்தைக் காரணம் காட்டி அனுதாபம் தேடுகிறாரே திருநாவுக்கரசு' என்று நினைப்பவர்கள் அசடுகள்! நம் முன்னோர்களின் உழைப்பு, நல்லெண்ணம், தீர்க்க தரிசனம் எதையுமே புரிந்து கொள்ளாத அசடுகள்!

ராத்திரியானால் வானத்தை வெறித்து, கால்குலேட்டர், கம்ப்யூட்டர் உதவியின்றியே கிரக நிலை பதிவு செய்து, கணக்குப் போட்டு, ஜோதிடக் கலையை உருவாக்கி சந்ததிகளுக்கு வட்டு போலக் கொடுத்திருக்கிறார்கள் முதாதையர்கள்.

அவர்கள் மட்டும் அப்படிச் செய்திராவிட்டால்...

'அவள் ஜாதகப்படி இன்னும் மூணு வருஷத்துக்குக் கல்யாணம் நடக்காது' என்று வருத்தத்துடன் பெண்ணை வேலைக்கு அனுப்பும் அப்பாக்கள், கவலையை மறக்க கிண்டி பக்கம் போக முடியுமா?

எண் சாஸ்திரம் என்பதாக ஒன்று இல்லாவிட்டால் நம் சினிமாக்காரர்கள் தமிழ்ச் சீர்திருத்தத்தில் அக்கறை காட்டியிருப்பார்களா? 'மின்சார கனவு', 'மேட்டுகுடி' போன்ற முத்தான படப் பெயர்கள் தமிழுக்குக் கிடைக்காமலே போயிருக்குமே!

அட! வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு இப்பேர்ப்பட்ட தீர்வு பிறந்திருக்குமா? கிளி முதல் கம்ப்யூட்டர் வரை; சோழி முதல் சுவடி வரை வைத்துக் கொண்டு ஸ்பெஷலைஸ் பண்ணி பிழைப்பு நடத்துவோரை வேறெந்த நாட்டில் பார்க்க முடியும்?

அரசியல் தலைவர்களும் முதல்வர்களும் ஜோசியம் கேட்க நாட்டின் மூலை முடுக்கெல்லாம் போய் வரும் நேரத்தில், யாகம், ஹோமம் என்று செலவிடும் நேரத்தில்... அவர்களின் ஊழல் நடவடிக்கைக்குக் கட்டாய ஓய்வு தரப்பட்டு கணிசமாய் ஊழல் குறைகிறதே!

என்ன, முன்னோர்களுக்கு நன்றி சொல்லத் தயாரா..? கொஞ்சம் பொறுங்கள்; நல்ல நேரம் பார்ப்போம்!

– சில்மிஷா

---

6ம் பக்கத் தொடர்ச்சி...

கூட ஊழல் வழக்கு இருக்கு போல..." என்றபடி பேச்சுக் கொடுக்கத் துவங்கினோம்.

"எதுக்கும் தயாரா இருக்கேன். எல்லாம் கோர்ட்ல பார்த்துக்கலாம். புதுக்கோட்டைத் தேர்தலில் கழகம் போட்டியிடுவது பற்றி ஆட்சி மன்றக் குழு முடிவெடுக்கும். கட்சிக்காரங்க ரொம்ப உற்சாகமா இருக்காங்க. பார்த்தீங்களா உண்ணாவிரதப் போராட்டத்தை..." என்றார் அவர்.

அந்தச் சமயம் சுலோசனா சம்பத் கேட் அருகில் வந்தார். கூடவே வந்த தொண்டர் ஒருவர் அவரிடம், "அம்மா டீஸலுக்கு பணம் கொடுங்க..." என்று நச்சரித்துக் கொண்டே வர, கடுப்பாகி விட்டார் அவர்.

"நீங்க கேக்கறதே நல்லாயில்லையே! கட்சி உணர்வோட வாங்க... போங்க... நான் என்ன கொள்ளையடிச்சா பணம் வைச்சிருக்கேன்?" என்று எரிந்து விழுந்தார். பின்னர் லேசாகத் திரும்பியவர் கரூர் சின்னசாமியைப் பார்த்ததும் "அடடே... நீங்களா.. பார்க்கவேயில்லை..." என்று ஏதோ தாம் தவறாகச் சொல்லிவிட்டது போல், சமாளிக்கும் குரலில் சொன்னார். சின்னசாமி கொஞ்சம் அசட்டுச் சிரிப்புடன் இடத்தை காலி செய்தார்.

"ஜெ.வின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?"

"தமிழ்நாட்டு மக்களின் மனோநிலை எங்களுக்கு நன்றாகத் தெரியும். அம்மா ஜெயிலில் இருந்தபோது கொடுமைப்படுத்தினார்கள் என்றெல்லாம் பலவிதமாகப் பேசி, அனுதாபத்தைப் பெற்று விடுவோம். இனி மேலாவது அம்மா மற்ற தலைவர்களின் பேச்சைக் கேட்டு செயல்படுவாங்கன்னு நினைக்கிறோம். அப்படிச் செய்தாங்கன்னா... மீண்டும் கோட்டையைப் பிடிக்கறது ஒண்ணும் கஷ்டமில்லை" என்று ரொம்பவும் நம்பிக்கையுடன் பேசினார் தென்சென்னை பிரமுகர் ஒருவர். கூடிய விரைவில் தமிழ்நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்து அனுதாபம் தேடுவாராம் ஜெ. இதற்கு வசதியாக, சென்னையை விட்டுப் போகக் கூடாது என்ற ஜாமீன் நிபந்தனையைத் தளர்த்தி விரைவில் மனுதாக்கல் செய்யப்படுமாம்.

**- தில்லப்பா**

படங்கள்: **சாய்வர்ஷா**

## த்ரில்! – புதிய பகுதி



• லட்சுமி நாராயணன்

**குற்றங்களைக் கண்டுபிடிப்பதும் குற்றவாளிகளுக்கு எதிராய் வாதாடுவதும் சவாலுடன் 'த்ரில்' நிறைந்த பணி. இப்பகுதியில் பல்துறை வல்லுனர்கள் அத்தகைய 'த்ரில்லிங்' அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.**

"ஹ்ஹா.... ஹ்ஹாஹா.... ஆஹ்ஹா..."

மதுரை தாலுகா ஆபீஸ் காவல் நிலையமே சிரிப்பு வெடியால் அதிர்ந்தது.

"ஐ.பி.எஸ். முடிச்ச கையோட ட்ரெய்னிங்குக்கு வந்திருக்கீங்க. இளம் ரத்தம்... அதனால தான் பார்க்கிறதெல்லாம் உங்களுக்குத் தடயமாவே தெரியுது..."

சக போலீஸ் அதிகாரிகள் இப்படிக் கேலி பேசினாலும் ஐ.ஜி. சஞ்சீவி மட்டும் லட்சுமி நாராயணனை நம்பிக்கையோடு பார்த்தார்.

"உங்களுடைய சந்தேகத்தில் நீங்கள் உறுதியாகத்தான் இருக்கிறீர்களா?" – ஐ.ஜி. கேட்டார்.

# கடமைக்காக ஒரு காதல்!

"எஸ் சார்."

"அப்படியானால் அதை வைத்தே உங்களுடைய இன்வெஸ்டிகேஷனைத் தொடங்குங்கள்."

விஷயம் இதுதான்.

மதுரையில் அடிக்கடி திருட்டு. சென்ற வாரம் ஒரு போலீஸ் அதிகாரி வீட்டிலேயே திருட்டு. ரிவால்வர் உள்பட பல பொருள்களைத் திருடிக் கொண்டு போய் விட்டான் திருடன்.

திருட்டைக் கேள்விப்பட்டதும் போலீஸார் போய்ப் பார்த்தனர். தடயங்களைத் தேடினர். திருட்டு நடந்த வீடு வைகையாற்றங்கரையில் இருந்தது. தடயங்களைத் தேடிக் கொண்டு ஆற்றங் கரைக்குச் சென்றார் லட்சுமி நாராயணன். முதல் நாள் இரவு லேசாக மழை தூறியிருந்ததால் ஒரேயொரு காலடிச் சுவடு மாத்திரம் பளிச்சென்று தெரிந்தது. அது இடது காலின் சுவடு. கட்டை விரல் இல்லாத சுவடு!

'அப்படியானால் இடதுகால் கட்டை விரல் இல்லாத ஒருவன்தான் இந்தத் திருட்டைச் செய்திருக்க வேண்டும்' என்கிற முடிவுக்கு வந்திருந்தார் லட்சுமிநாராயணன்.

இந்த முடிவைத்தான் மதுரைக்கு வந்திருந்த ஐ.ஜி.யுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் சொன்னார். அதற்குத்தான் அப்படியொரு வெடிச் சிரிப்பு!

ஐ.ஜி.யும் எஸ்.பி. பார்த்தசாரதி ஐயங்காரும் கொடுத்த நம்பிக்கையின் அடிப்படையில் பிறரின் கேலிகளைப் பொருட்படுத்தாமல் தமது புலனாய்வைத் தொடங்கினார் லட்சுமி நாராயணன்.

இடதுகால் கட்டை விரல் இல்லாத நபர் பற்றி ஏதேனும் போலீஸ் ரெக்கார்டுகளில் இருக்கிறதா? தேடிப் பார்த்ததில் சுந்தரராஜ் என்று ஒருவன் அப்படி இருப்பதாகத் தெரிந்தது.

அவன் இப்போது எங்கே?

"காரைக்குடி ஜெயிலில் அல்லவா இருக்கிறான் அவன்!"

அலட்சியமான பதில்தான் கிடைத்தது.

இருப்பினும் நம்பிக்கை இழக்காமல் விசாரித்ததில், பத்து நாட்களுக்கு முன்புதான் அவன் காரைக்குடியிலிருந்து விடுதலையாகிச் சென்றது தெரிந்தது.

ஆஹா! அவனைப் பிடித்து விட்டால் திருடனைப் பிடித்து விட்ட மாதிரியேதான்!

"அவனையா? பிடிக்கிறதா? முன்னால ஒரு தரம் அவனைப் பிடிக்கறதுக்குச் சோறு தண்ணி இல்லாம மூணு மாசம் அலைஞ்சோம் தெரியுமில்ல. அப்படிப்பட்ட எமகாதகன் அவன். அவனையா தேடப் போறீங்க? தேடுங்க... தேடுங்க..."

பலரும் அவநம்பிக்கைதான் தந்தார்கள். ஆனாலும் லட்சுமி நாராயணன் மட்டும்



நம்பிக்கை இழக்காமல் விசாரித்தார்.

அவனுக்கு ஏதேனும் கெட்ட பழக்கங்கள் உண்டா? பெண்கள் தொடர்பு உண்டா?

துருவித் துருவி ஆராய்ந்ததில் மதுரையிலுள்ள ஒரு நர்ஸுக்கும் அவனுக்கும் இடையில் ஒரு தொடர்பு இருப்பதாகத் தெரிந்தது.

திருடனைத் திருடனென்று தெரிந்தும் அவனோடு தொடர்பு வைத்திருப்பவளிடம் போய் விசாரித்தால் உண்மையைச் சொல்லுவானா? அவனைப் போலீஸ் தேடுகிறது என்று தெரிந்தால் அவனை அவள் உஷார்படுத்தி விட மாட்டாளா?

என்னதான் செய்வது? அவனைக் கண்டுபிடிப்பதற்கு அவளிடமிருந்து மட்டும்தான் தகவல் பெற முடியும் என்கிற நிலையில் எப்படித்தான் செயல்படுவது?

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்!

**ல**ட்சுமிநாராயணன் பயிற்சிக்காகச் சென்றிருந்த மதுரையிலேயே வாட்டசாட்டமான இளைஞராக ஒரு போலீஸ் அதிகாரி இருந்தார். அவரிடம் விஷயத்தைச் சொல்லி உதவி கேட்டார்.

"ஐய்யோ... நானா... அப்படியெல்லாம் செய்வதா..."

முதலில் தயங்கினார் அந்த அதிகாரி.

"இதில் ஒன்றும் தப்பில்லை. நீங்களும் தவறு ஏதும் செய்யப் போவதில்லை. அந்த நர்ஸிடமிருந்து உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் அந்த நர்ஸைக் காதலிப்பது போல் நடித்துத்தான் ஆக வேண்டும். வேறு வழியே இல்லை..."

சரியென்று ஒப்புக் கொண்டார் அவர்.

**வா**ட்டசாட்டமான அந்த இளைஞரை அத்தனை சுலபத்தில் ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை அந்த நர்ஸால்.

அந்த இளைஞரின் கம்பீரமான தோற்றமும் காதல் பேசும் கண்களும் அத்தனை சுலபத்தில் எந்தப் பெண்ணுக்கும் கிடைத்து விட முடியாது. தனக்குக் கிடைக்கிறதென்றால்...

தனது கண்களையும் பதில் பேசச் செய்தாள் நர்ஸ். காதல் மலர்ந்தது!

விலையுயர்ந்த பவுடர், சென்ட் என்று பரிசுப் பொருள்களை அடிக்கடி வாங்கிக் கொடுத்துத் தமது காதலை உறுதிப்படுத்திக் கொண்டே வந்தார் அந்த இளைஞர். அவளும் முழுமையாக நம்பினாள்.

காதல் பூச்சுப் பூசப்பட்ட அந்த இளைஞரின் கடமை அம்பு குறிதவறாமல் பாய்ந்தது. அந்தக் காதல் மயக்கத்தில் ஒருநாள் சுந்தரராஜ் என்ற அந்தத் திருடன் இருக்கும் இடத்தை உளறிவிட்டாள் அந்த நர்ஸ்.

அப்புறமென்ன! உடனடியாக அவனைக் கைது செய்து விசாரித்ததில் உண்மையை ஒப்புக் கொண்டான் அவன்!

**(ஓய்வு பெற்ற தமிழக காவல்துறைத் தலைவர் வி. ஆர். லட்சுமி நாராயணன் சொன்ன உண்மைச் சம்பவம்தான் இது. 1952-ல் நடந்தது.)**

சந்திப்பு : **பிரின்ஸ்**

# இருபது முடியும் நேரம்



**வா**ரும் வாரும் வளைப்போம் பிடிப்போம்
கான்க்ரீட்டும் குப்பையும் உயரும்
மாநகரங்களை;
புழுதி பறக்கும் சிற்றூர்களை; மற்றும்
ஐயனார் தோள்தொட்டு ஆன்டெனா
விரியும் கிராமங்களை

வயல்களைக் கைக்கொள்வோம். அவசரத்
தேவை
உலகம் முழுக்க மென்று தீர்க்க
உருளைக் கிழங்கு வறுவல்

உப்பு எடுப்போம் தோழரே உப்பெடுப்போம்.
பிளாஸ்டிக் பையில் அயோடின் சிரிப்பு.
"சகாதேவா... வேதாரண்யம் கடைக்குப்
போய்ச் சேரவேண்று ஃபோன்கால் கவனி..."

ஆட்கள் தேவை, உலகச் சந்தையில்
வல்லாரை லேகியம் விற்க.
மலச்சிக்கல் நீக்கும். அமெரிக்க பேடண்ட்.
எம்பிஏக்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கொட்டாம்பட்டியில் நேற்றைய நிலவரம்-
நமது குளிர்பானம் மூவாயிரத்து ஏழு.
அவர்கள் சரக்கு ரெண்டாயிரத்து பதினெட்டு.
ஆரம்பப் பள்ளி விளையாட்டுப் போட்டியில்
நம் ஆதரவு அணி வெற்றி பெற்றது.
மாற்றார் மண்ணைக் கவ்வினர்.
** எதுவும் அதிகார பூர்வமில்லை; இது தவிர

நிகழ்ச்சியின் இந்தப் பகுதியை வழங்குவது
இயந்திரத் துடைப்பம் செய்யும் இங்கிலாந்து
நிறுவனம்
கப்பலோட்டிய தமிழன் திரைப்படம்
தொடரும்.

— இரா.முருகன்



** NOTHING OFFICIAL ABOUT IT

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.


இதோ ...! உங்க குடும்ப ஆரோக்கியத்திற்கு
KKR
இந்தியாவின் முதல் முத்திரைப் பெற்ற பாமாயில்.
உங்க பண்டிகை கொண்டாட்டத்தில் ஆரோக்கியத்தை அள்ளி சேர்க்கிறது.
பண்டிகை கொண்டாடியது முடிந்தாலும், கே. கே. ஆர். பாமாயிலில் உள்ள ஊட்டச் சத்துக்களையும், ஆரோக்கியத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதில் • வைட்டமின் A&E அதிக அளவில் நிறைந்துள்ளது • புரதச்சத்துக்கள் நிறைந்துள்ளது • கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்துகிறது • ஈரலுக்கு நன்மையானது • புற்று நோயை தடுக்கக்கூடியது.
நவீன விஞ்ஞான முறையில் ரி∴பைன் செய்யப்பட்டது.
KKR
PALM OIL
K.K.R.
KKR
பாம் ஆயில் (இந்தியா) லிட்.,
121, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு), பெரம்பூர், சென்னை-11. Ph : 5375456, 5376796, 5377795
கே. கே. ஆர். பாமாயில் – தூய்மை மற்றும் முழு குடும்பத்தின் ஆரோக்கியம்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

